
தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள்



முனைவர் அ. அறிவுநம்பி

தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள்

முனைவர் அ. அறிவுநம்பி, எம்.ஏ.,பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர்
பாரதியார் தமிழியல் நிறுவனம்
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி - 605 014

அமுதன் நூலகம்
'அறிவகம்' 52/1, இரண்டாம் தெரு
திருவள்ளுவர் திருநகர், (நியூடவுன்)
காரைக்குடி - 623 001

முதற்பதிப்பு	:	தி. ஆ. 2021, மார்கழி திசம்பர் - 1990
நூலின் தலைப்பு	:	தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள்
ஆசிரியர்	:	அ. அறிவுநம்பி
நூற்பொருள்	:	சமூகவியலும் இலக்கியமும்
தாள்	:	10.9 கி. கி. சேஷசாயி
எழுத்து	:	10 புள்ளி
பக்கங்கள்	:	124
எண்ணிக்கை	:	1000 படிகள்
அச்சகம்	:	ஸ்ரீ சபாநாயகம் பிரிண்டர்ஸ் கீழவீதி, சிதம்பரம் - 608 001

விலை : உருபாய் **16.00**

ஆசிரியரின் பிற நூல்கள்:

1. கூத்தும் சிலம்பும்
2. தமிழகத்தில் தெருக்கூத்து
3. நாட்டுப்புறக் களங்கள்

இந்நூல்

கடவுள்
படைத்த மனிதர்களில்
கடவுள் நம்பிக்கை
கொண்டவர்களுக்கும்.... ....
மனிதன்
படைத்த இறை யுருவுகளில்
குடிகொண்டிருக்கும்
இறைமைக்கும்.... ....
'அவனருளாலே
அவன்தாள் பணிந்து'
படைக்கப் பெறும்
ஓர்

எளிய படையல்

உள்ளுறை □ உள்ளுறை □ உள்ளுறை □ உள்ளுறை

உள்ளுறை □ உள்ளுறை □ உள்ளுறை □ உள்ளுறை

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

அணிந்துரை

நமது இனிய அன்பர் பேராசிரியர் முனைவர் அ. அறிவுநம்பி, நல்ல தமிழறிஞர் குடும்பத்தில் தோன்றிய வர். திருவள்ளுவர் நெறியில் அவைகளில் விளங்கித் தோன்றி, தந்தைக்குப் புகழ் சேர்ப்பது மனநிறைவைத் தருகிறது; மகிழ்ச்சியைத் தருகிறது.

அறிவுநம்பி அவர்கள் எழுதிய ''தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள்'' என்ற இனிய நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது இனியபேறு என்று எண்ணி மகிழ்வு கொள் கின்றோம். ''தமிழரின் வழிபாட்டுச் சிந்தனைகள்'' என்னும் இந்த நூல் இந்த நூற்றாண்டுக்குத் தேவையான படைப்புங் கூட.

தமிழர்கள் ஐம்பூதங்களிலும் இறைவனைக் கண்டனர். ஆனால், ஐம்பூதங்களே கடவுள் அல்ல என்ற கொள்கையும் கொண்டிருந்தார்கள். ஐம்பூதங்களிலும் தீயையே முதன்மைப் படுத்தி அன்று முதல் இன்றுவரை போற்றி வந்துள்ளனர். தீ, ஒளி பொருந்தியது; தீ மாசு இல்லாதது; தீ தன்னைச் சார்ந்த மாசுடைய பொருள்களையும் மாசு நீக்கித் தூய்மை செய்யும், அதேபோழ்து தீ, மாசுபடாது. தூய்மையாக

விளங்கும். தீ வழிபாடு வளர்ந்த முறையை ஆதியோடந்த மாக ஆசிரியர் விவரித்து எழுதியிருப்பது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. சிலர் தீ வளர்த்து வழிபடுவர். அதே பொழுது அத்தீயைச் சிவனார் திருவுருவமாக உணராது வழிபாடு செய்வதை அப்பரடிகள் கண்டிக்கும் பகுதியைக் கட்டுரையில் எடுத்துக்காட்டி விளக்கும் பகுதி பலகாலும் படித்துணரத்தக்கது.

நீரினால் இயற்றும் வழிபாட்டை விளக்கும் கட்டுரை மிகவும் பயனுடையதாக அமைந்திருக்கிறது. இறைவனின் பேருருவமாக எண்ணிப் போற்றப்பெறும் கோபுர கலசங்கள் குடமுழுக்காட்டுதலை நினைவூட்டுவது குறிப்பிடத்தக்கது. திருவிழா முடிவில் தீர்த்தம் தந்தருளல் நிகழ்வதைச் சுட்டிக் காட்டுகிறார். தீர்த்தத் திருவிழா இறைவனின் அருட் பெருக்கில் குளித்தலை ஒத்தது என்பது சிவாகமம். மழையை, சிவசக்தியின் அருளெனத் திருவாசகம் போற்றும்.

'' ...... நம் தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேயோர் எம்பாவாய்''

என்பது திருவாசகம்

''உருவு'' — வழிபாட்டுத்துறை தோன்றி வளர்ந்த விதத்தை ஆசிரியர் விளக்கும் பகுதி அனைவரும் படிக்கத் தக்கது. இறைவனை முழுமையான அளவு அனுபவிக்கும் நெறியிலேயே திருவுருவ வழிபாடு தோன்றியது என்பது உண்மை. ஆற்றல்மிக்க அன்பால் இறைவனை அழைக்கவும் உண்பிக்கவும் திருவுருவ வழிபாடு இன்றியமையாத் தேவை யாயிற்று. திருவீதியுலாவைப் பொருத்தவரையில் ''எழுந் தருளும் திருமேனி (உற்சவர்) திருவீதிப் புறப்பாட்டால் திருக்கோயிலுக்கு வரமுடியாதுள்ளோர் வழிபட வாய்ப்பாக

இருக்கும்'' என்று கூறுவது நல்ல கருத்து. ஆனால் ஆகமங்களும் புராணங்களும் ''திருக்கோயிலுக்கு வந்து வழிபடும் உரிமையில்லாத கீழ்ச்சாதியினர் வழிபட்டுய்வதற் காகவே திருவீதியுலா'' என்று கூறுகின்றன.

இறைவனிடம் வேண்டுதல் என்பது நெடுநாளைய மரபு ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என்றும், ''வேண்டத்தக்க தறிவோய்'' என்றும் வரும் அமுதமொழிகள் அறிக. இந்த வேண்டுதல் செய்வோரின் தகுதி பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப வேண்டுதல் சடங்கு நிகழும், என்பதை ஆசிரியர் அங்கப் பிரதட்சணம் (தரையில் புரளல்) மலைச்சுற்று முதலிய சான்றுகளைக் காட்டியுள்ளமை பாராட்டத்தக்கது. பழந்தமிழகத்தில் தம்மைக் கடவுளைக் காக்கும்படி பாடுகிற மரபு பெரு வழக்காக இருந்தது. நம்மைக் காக்கும் கடவுள் காப்பாற்றப் பெற்றால் நாம் காக்கப்படுதல் உறுதிதானே. காலப் போக்கில் மக்கள் தங்களைக் காப்பாற்றும்படி வேண்டும் பழக்கம் அறிமுகமாயிற்று. இன்று பெரும்பாலும் மக்கள் தங்களுடைய துன்பங்கள் நீங்கவும் நலன்கள் பெறவுமே கடவுளை நாடுகின்றனர்; வழிபடுகின்றனர்.

வழிபாட்டுத்துறை பற்றி அறிவியலும் வரலாறும் சார்ந்த இந்த நூலை எழுதிய முனைவர் அறிவுநம்பி பாராட்டுதலுக்குரியவர். இதுபோல் இன்னும் பல நூல் களைத் தமிழகத்திற்குத் தரவேண்டும். பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

இன்ப அன்பு

குன்றக்குடி அடிகளார்

கோபுர வாசலிலே...

வணக்கம்

கற்றதனால் ஆயபயன் என்கொல்? எனக்கேட்டு அதற்குப் பதிலாக வாலறிவன் நற்றாள் தொழல் என விடையிறுக்கும் திருக்குறளை நினைந்தவாறே உங்களைக் கோபுரவாசலிலேயே எதிர்கொண்டு வரவேற்பதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன். 'தமிழரின் வழிபாட்டுச் சிந்தனை கள்' என்ற தலைப்பிலான இந்நூலின் கட்டுரைகளை அறிமுகம் செய்து வைக்கவே இந்த இடைமறிப்பு.

இலக்கியங்களுக்கு அப்பால் சில தேடல்களுக்காகக் கள ஆய்வுகளை மேற்கொள்ள நேரிட்டது. முரண்பாடான செய்திகளுக்கு விடைதேடவேண்டிய இன்றியமையாமை எழுந்தது. சான்றாக ஒரே கோவிலில் பூக்குழி இறங்கல் என்ற பெயரால் தீயினை மிதிப்பதும், தீச்சட்டி ஏந்து வதும், தீயை வணங்குவதும் ஒன்றாக நிகழ்கின்றன. தமிழர்கள் தணலை வழிபட்டனரா என்ற வினாவை மைய மாக வைத்துத் தரவுகளைத் திரட்டினேன். விளைவு: **செய்தீ** என்ற தலைப்பில் கனல் பற்றி உருவான முதலாவது கட்டுரை.

அனலுக்கொப்பாகத் தமிழரின் வழிபாட்டில் புனலும் இடம் பெறுகிறது. குறிப்பாகச் சடங்கு முறைகளில் நீரின் அழுத்தம் மிகுதி. புனலாடி மகிழ்ந்த தமிழர் நீர்வழிபாடு பற்றிக் கொண்டிருந்த சிந்தனைகளைத் தொகுத்ததால் விளைந்த கட்டுரையே **'வழக்காற்றில் நீர்'** எனப் பெயரிய இரண்டாவது கட்டுரை.

'திருவுருவுகள்' என்ற தலைப்பிலானது மூன்றாவது கட்டுரை. மஞ்சளில் சருக்கரையில் சிவலிங்கம் போலப் பிடித்து வைத்துவிட்டு அதனைப் பிள்ளையார் என்று கூறியதும், வேலனுக்குப் பதில் வேலே இறையானதும் சிந்தனைகளை எழுப்பின. நடைமுறைச் செய்திகளையும் இணைத்து இக்கட்டுரை அமைகிறது.

காப்பாற்றக் கூடிய ஒரே வல்லமை இறைக்கே உண்டு என்ற எண்ணம் மட்டும் மனிதர்களுக்கு இல்லாது போயிருந்தால் கடவுள் பின்தள்ளப்பட்டிருப்பார். தம்மை மீறிய ஆற்றலைத் தன் தேவைக்காக அணுகுவது மனித இயல்பு. இதனால் மேனியில் காப்புகள் பூத்தன; காப்பு இலக்கியங்கள் மலர்ந்தன. இவற்றை விளக்கப் போந்ததே **'காப்பு'** என்ற தலைப்பிலான நான்காவது கட்டுரை.

ஐந்தாவது கட்டுரை **வேண்டுதல்கள்** குறித்து அமைந்தது. வேண்டியாங்கு யாவும் பெறவிழையும் மனிதர்களின் வேண்டுதல்கள் பல திறத்தனவாக அமைய வேண்டிய சமூகப் பின்புலத்தை ஆயவேண்டியிருந்தது. களஆய்வுகள் பல புதிய செய்திகளைக் கூறின. பல வகைப்பாடுகளில் வேண்டுதல்கள் அமைவதனை எடுத்துக்காட்ட முனைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

காலவளர்ச்சியில் ஒன்றுடன் ஒன்று கலப்புறுவதைத் தவிர்க்க இயலாது. இறைவழிபாடு இதற்கு விதிவிலக்கில்லை. சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற இருநிலையின் கலப்பு மட்டுமின்றிப் பல்வேறு கலப்புகள் இன்றைய சூழலில் இடம் பெற்றிருப்பதைக் கண்டுணர முடிகிறது. அச்செய்திகளை அடியொற்றி எழுந்ததே நிறைவுக்கட்டுரையான **'கலப்புகள்'**

தமிழருடைய வழிபாட்டில் இந்தப் போக்குகள் மட்டுமே காணப் பெறுகின்றன எனக் கருதுவதற்கில்லை,

இவையும் சில. இவற்றைப் போன்று பலவிதமான வழி பாட்டுச் சிந்தனைகள் தமிழரிடையே பரவலாக இடம் பெறுகின்றன. முடிந்தவரையில் திரட்டிய தரவுகளைக் கொண்டு மேற்சுட்டிய கட்டுரைகள் உருவாக்கப்பெற்றன.

இந்த நூலாக்கத்திற்குரிய தகவல்களைத் தந்துதவிய அன்பு நெஞ்சங்களுக்கு என் நெஞ்சு கலந்த நன்றிகள். ''நூல் எப்போது வரும்?'' என அவ்வப்போது கேட்டு ஊக்கப்படுத்திய துறைத்தலைவர் பேரன்பினுக்குரிய முனைவர் **க. ப. அறவாணன்** அவர்களுக்கு வணக்கங்களுடன் கூடிய நன்றிகள். அச்சகப் பணியில் துணைநின்ற அன்பு இளவல் திரு. **பொதிகைத்தமிழரசனுக்கும்**, உழைப்பில் பங்கு கொண்ட முனைவர் **நா. செல்வராசுக்கும்** அன்பு நிறைந்த நன்றிகள். சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தினருக்கு இனிமை கலந்த நன்றிகள் கூறுவதில் மகிழ்கிறேன்.

வழிபாடு தொடர்பான நூல் என்பதால் சமுதாய முனிவர் தமிழ்த்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்களுடைய அணிந்துரையைப் பெற எண்ணினேன். பல்வேறு பணிக ளிடையே நூலைப் படித்து அரிய அணிந்துரை வழங்கிய தமிழ்மாமுனிவரின் திருவடி பணிந்து வணங்குகின்றேன்.

''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற திருவாக்கை நினைந்து, இறையின் திருவருள் கூடிய நிலையில் இந்நூல் உருவாக்கப் பெற்றுள்ளது. பிழைகள் தென்படின் திருத்திக் கொள்ளும் வல்லமை கொண்ட தாங்கள் இனிமேல் கட்டுரை களைக் காணும் வண்ணம் தங்களுக்கு நன்றிகூறி இந்த நந்தி விலகிக் கொள்கிறது.

வணக்கம்.

புதுச்சேரி
07—12—90

பணிவுடன்
அ. அறிவுநம்பி

அருட்பெருஞ்ஜோதி அகவல்

அனலினுள் அனலாய் அனல்நடு அனலாய்
அனலுற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி
அனலுறும் அனலாய் அனல்நிலை அனலாய்
அனலுற வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

செய் தீ

ஒளியைக் கண்டு அதனை வணங்குதல் என்பது உலகில் எங்கும் காணக் கூடிய ஒரு வழக்கு. ஆதிகால மனிதன் தன்னால் உற்பத்தி செய்ய முடியாத, ஆனால் இயற்கை யாகவே தோன்றிய நெருப்பையும் ஞாயிற்றையும், மின்னலையும் கண்டு அஞ்சினான். நெருப்பின் பயன்பாட்டை அறிந்து கொண்ட மனிதனுக்கு அனலை ஆக்கும்வழி ஆரம்பத்தில் தெரியவில்லை. அதனாலேதான் சில பழங் குடிகளிடம் 'நெருப்பை அணையாது காத்தல்' இன்னமும் தொடர்கிறது. தமிழர்களைப் பொறுத்தவரை ஒளியைப் போற்றுதல் இருவகையினதாக அமைந்துள்ளது. அவை

இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியாக அமைபவையும் உருவாக்கப்படும் கனல் தொடர்பானவையும் எனக் கொள்ளலாம். இக்கட்டுரை பல்வேறு காரணங்களால் தமிழரிடையே செய்யப் பெற்ற, செய்யப் பெறுகின்ற தீயைப் பற்றி மட்டுமே பேசுகிறது. சங்ககாலத்தில் நடைமுறையிலிருந்த அனல் வழக்குகள், நாட்டுப்புறத்தாரிடையே இன்று காணப்பெறும் அழல் வழக்காறுகள், வைதீக நெறியுடன் பொதுநிலையில் இடம்பெறும் தணல் போக்குகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்துக் காணவும் சமூகப் பின்னணி மூலம் பயன்பாட்டைத் தொடர்பு கொள்ளவுமான முயற்சியே இஃது எனலாம்.

ஒளிவழிபாட்டின் பிறிதொரு பகுதியான இயற்கை வழிபாடுகளை விடுத்து ஆக்கப்பெறும் தீ மட்டுமே ஆய்வுப் பொருளாகின்றது. அதிலும் உணவாக்கல், குளிர்காயல் போன்ற பொதுப் பயன்பாட்டிலில்லாத தீயே எடுத்துக் கொள்ளப் பெறுகிறது.

ஐந்திலே ஒன்று:

உலகத்தின் தோற்றமே நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐம்பெரும் பொருளால் ஆனதென்பதைப் பலரும் பலகாலும் சுட்டுவர்.

> **''நீரும் நிலமும் தீயும் வளியும்**
> **மாகவிசும்பொடு ஐந்துடன் இயற்றிய**
> **மழுவாள் நெடியோன்''** (மதுரைக்காஞ்சி)

என்பது சங்கப்பா. இதனைப் பின்வந்த பைபிளும்,

''பிரபஞ்சத்தின் சக்திகளான ஞாயிறு, திங்கள், நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவற்றை நாளுக்கொன்றாக ஆறுநாட்களில் இறைவன் படைத்தான்''[1] என்று கூறுகின்றது. அரசன் படைப்பையும் இத்துடன் இணைத்து,

''எல்லா உலகங்களும் அரசனின்று அச்சத்தால் எப்பக்கங் களிலும் சிதறுண்டிருக்குங்கால், அவ்வெல்லாவற்றையும் காத்தற் பொருட்டும் பிரமதேவன், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக் கொண்டு அரசனைப் படைத்தான்''[2] என்று சுக்கிர நீதி கூறுகின்றது. மேற்சுட்டிய கருத்துக்கள் யாவும்,

''மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை'' (புறம். 2)

என்ற புறநானூற்றுச் செய்தியை வலுப்படுத்துபவை. இதனைப் பரிபாடல் போன்ற இலக்கியங்களிலும், உரை காரர்களின் எழுத்துகளிலும் காணமுடிகின்றது. இதனால் 'தீ' என்பதைப் பழந்தமிழர் ஐம்பூதங்களில் ஒன்றாக உணர்ந்தமை தெளிவாகின்றது.

ஆயினும், ஐம்பூதங்களும் இறைவனிடத்தே யிருந்து தோன்றின என்று புலவர் கீரந்தையார் பரிபாடலில் சுட்டுவார். பரிபாடலின் மூன்றாம் பாடலில் கடுவனிள வெயினனார் ஐம்பூதங்களை இறையின் ஒருருவாகவே கண்டதைத்

''தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்ற நீ ...
வெஞ்சுடர் ஒளியு நீ திங்களுள் அளியு நீ''

எனவரும் பாடலடிகளும் காட்டும். காலப்போக்கில் ஒவ்வொரு பூதத்திற்கும் தனித் தனி இறையுருக்கள் உருவான தன்மையைக் காணமுடிகிறது. ''இயற்கைச் சக்திகளான

ஐம்பூதங்களைச் சதாசிவன், மயேச்சுரன், உருத்திரன், அரி அயன் ஆகிய ஐவகைத் தெய்வங்களாகத் திருமுருகாற்றுப் படையுள் (வரி-254) கற்பனை செய்திருக்கிறார் நக்கீரர் பெருமான்''[3]. ஐம்பூதங்களையும் இயற்கையாற்றலாகக் கண்டு, பிறகு இறையுடன் தொடர்படுத்திக் கொண்ட பண்டைத் தமிழர்கள் உருவாக்கிய அனல் இருவகையாகச் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றது. ஒன்று வழி படுபொருளாக அமைந்தது. மற்றது வழிபாட்டிற்குரிய சடங்கு நிலையிலான துணைப் பொருளானது. இதனை விரிவாகக் காண வேண்டியது தேவையாகின்றது.

சங்க இலக்கியத்தில் 'அக்கினிப் பிரவேசம்':

இறையுடன் தொடர்பு படுத்தப் பெற்றதாலும், ஆரியர் தம் வைதீக நெறிகள் கலப்புற்றதாலும் சங்ககாலத்தில் சமைக்கப்பெற்ற 'தீ' வழிபடு பொருளாக உருக்கொண்டது. அறுதொழில் அந்தணர், ஆகுதிசெய்யும் முத்தீ வளர்த்தலை மேற்கொண்டதை,

> **''அந்தியந்தணர் அருங்கடனிற்கும்**
> **முத்தீ விளக்கு''** (புறம் 2: 22-23)

> **''வேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்கு**
> **அருங்கல நீரோடு சிதறி''** (புறம் 361: 4-5)

போன்ற சங்கப் பாடலடிகளும்,

> **''மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து**
> **இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல''**

என்ற திருமுருகாற்றுப்படை வரிகளும் பிறவும் தெளிவு படுத்தும். இதனைப் போன்றே பண்டைய நாளில் தீ வளர்த்தவர்கள் துறவிகளாவர். செந்தீயை முனிவர்கள் நன்கு பேணுவதற்கு வசதியாக யானைகள் விறகுகளைக்

கொண்டு சேர்க்கும் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (498-499) வரிகளும் புறநானூற்றின் (251: 4-7) வரிகளும் வரையும்.

> **''தவப்பள்ளித் தாழ்காவின்**
> **அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்**
> **ஆவுதி நறும்புகை முனைஇக் குயில் தம்**
> **மாயிரும் பெடையோடு இரியல் போகி''**

என்ற பட்டினப்பாலை (53-56) அடிகளும் இதனை உணர்த்தும்.

> **''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
> **உயிர்செகுத்து உண்ணாமை நன்று''** (259)

என்ற குறட்பா துறவற இயலில் இடம் பெறுவதும் நோக்கற்குரித்து.

இவ்வாறு ஆரியர்களும், முனிவர்களும் பேணிய தீ அவர்களால் வழிபடுபொருளாகியது. இதனை யாகசாலை, வேள்விகள் போன்ற பிற குறிப்புகளும் தெளிவாக்கும், எனினும் இத்தகுபோக்கு மக்களிடையே பரவலாகச் சங்க காலத்தில் காணப்படவில்லை என்பதும் உற்றுநோக்கற் பாலது. இக்கருத்திற்கு அரண்சேர்க்கச் ''சங்க காலத்திலே தமிழகத்தில் அந்தணரும், முனிவரும் வாழ்ந்தன ரெனினும் அவர்கள் செல்வாக்கு பிற்காலத்தில் இருந்த அளவுக்கு மேம்பட்டிருக்க வில்லையெனக் கூறலாம். சங்க நூல்களில் ஆரிய நம்பிக்கைகளும் சமயக் கோட்பாடுகளும் கூறப் பட்டிருப்பது உண்மையே. ஆனால் பொதுவாக நோக்கு மிடத்து அன்றாட வாழ்க்கையில் அவை இடம்பெறவில்லை எனலாம். நகர வாழ்க்கையில் அவற்றின் செல்வாக்கு சிறிது சிறிதாகப் பெருகிக் கொண்டே வந்தது. பொது மக்கள் தங்கள் மூதாதையரின் வழிபாட்டு முறைகளையே

பின்பற்றினர்[4] என்று மொழியும் சு. வித்தியானந்தனின் குறிப்பையும் அவதானிக்கவேண்டும்.

பொதுமக்களும் தீ வளர்ப்பும்:

இவ்விருதரப்பாரிடையே யல்லாமல் மக்களிடையே காணப்பெற்ற 'தீ' பற்றிய வழக்காறுகளையும் பழம்பாக்கள் சுட்டுகின்றன. 'நீருண்ணும் துறையில் கொண்டி மகளிர் முழுகி மெழுகும் மெழுக்கத்தினையும், அவர்கள் அந்திக் காலத்திலே கொளுத்தின அவியாத விளக்கினையும் உடைய பூக்களைச் சூட்டின தெய்வம் உறையினையுடைய பொதியில்' என்று பட்டினப்பாலையும் 'தெய்வத்திற்கு விளக்கேற்றி அந்தி விழவு செய்தலுண்டு என்று மதுரைக் காஞ்சியும், விளக்கெரிப்பைப் பற்றி எடுத்துரைக்கும். தத்தம் இல்லங்களில் தெய்வமேற்றி வழிபட்ட நிலை யினைப் பேசுகின்ற நெடுநல்வாடை

'நெல்லு மருந் தூ உய்க்கை தொழுது
மல்லல் ஆவன மாமலை யயர' (43-44)

மங்கையர் விளக்கேற்றி மகிழ்ந்தமையை விரிவாகப் பேசும்.

இஃதன்றி, கார்த்திகை விழாவின்போது விளக்கேற்றிக் களித்தமையையும் பல பாக்களில் காண முடிகிறது. பெருவிழா (அகம்-185: 9 – 13) கார்த்திகை (களவழி – 17) என்ற பெயர்களில் இவ்விழா நிகழ்வுற்றது.

''அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன்'' (அகம் 141)

அயர்ந்தமை காணக்கிடக்கின்றது. விளக்கேற்றிச் சிறந் தமையை யுரைக்கும் பிறிதோரிடம் அக்கால மக்களின்

திருமண நிகழ்விடமாகும். பண்டைத் தமிழர் திருமண முறைமையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள

''உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை''

எனத்தொடங்கும் நெடுந்தொகைப் (86) பாடல் உதவுகிறது. இப்பாடலின்

''மனைவிளக்குறுத்து மாலை தொடரின்
கனையிருள் அகன்ற கவின்பெரு காலை''

என்ற வரிகளான் மன்றலின்போது மங்கல விளக்கேற்றப் பெற்றமை புலனாம். அகப்பாடலும் (136) இதனைத் தெளிவுபடுத்தும். மேற்சுட்டிய பாவரிகளின் மூலம் இல்லுறை தெய்வம் ஏத்தல், கார்த்திகைப் பெருவிழா, திருமண நிகழ்விடம் ஆகிய இடங்களில் மட்டும் திருவிளக்குகள் ஏற்றப் பெற்றமையை அறியமுடிகிறது. இவை யாவும் வழிபாட்டிற்குச் செய்யப்பெறும் சடங்குநிலையாக அமை கின்றன. எவ்விடத்திலும் விளக்குச்சுடர் வணங்கப் பெற்றமைக்கான சான்றுகளில்லை. வேள்வித் தீ, முனிவர் வளர்த்த செந்தீ போல இவற்றிற்குத் தெய்வச் சார்புப் பொருண்மை சுட்டப்பெறவில்லை.

பிறவகைத் தீ மரபு:

ஆயினும் ஆரியரின் நெறிகள் கலந்தமையாலும், அரசர் களின் ஆதரவு கிடைத்தமையாலும் சில புதுநெறிகள் 'தீ' உருவாக்கலில் ஏற்பட்டன. சங்கப்பாடல்கள் வாயிலாக இவற்றைக் காணுங்கால் மேற்சுட்டிய செய்திகள் தெளிவு படும். பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தியற்றிய, பாலைக் கௌதமனார் பல்யானைச் செல்குழு குட்டுவனைப் பாடுங் கால் 'அடுநெய் ஆகுதி' என்ற தலைப்பில் வேள்விச் சிறப்பை விதந்து கூறுவதும், அப்புலவரே தம் மனையாளுடன்

விண்ணகம் செல்ல உதவியாக அரசனை வேண்டி வேள்வி வழியே எண்ணத்தை நிறைவு செய்து கொண்டதாகக் குறிப்பதும் கவனத்திற்குரியது. இதனைச் சிலம்பிலும் 'நான் மறையாளன்' செய்யுள் வழியே

'மேனிலையுலகம் விடுத்தோனாயினும்'

என்று குறிப்பர் இளங்கோவடிகள். அதைப்போலப் 'பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்பது போன்ற அடைகளையும் காணுங்கால் மன்னர்கள் பெருமளவில் வேள்விகளை நடத்தியமையும், வேள்வி வழியே மக்கள் வேண்டியதைப் பெற்றமையும் புலனாகும். ஏனெனில்

''வள்வாயம்பிற் கோடைப் பொருநன்
பண்ணித் தைய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வதாயினும் '' (அகம் 13: 10-12)

என்பது அகநானூறு. பரிபாடலும் இவ்வாறே இயம்பும். சேரமான் பெருஞ்சேரல் இடும்பொறை தன் மனைவியொடு மகப்பேறு வேண்டி வேள்வி செய்து மகப்பேறு வாய்க்கப் பெற்றதனை அரிசில்கிழார் பதிற்றுப்பத்தில் (74) விரிவாக விளக்குகிறார்.

பெருநல் வேள்வி, நன்பெருவேள்வி, ஐம்பெரு வேள்வி போன்ற சொல்லாட்சிகள் நினைத்தற்குரிய. மதுரைக் காஞ்சி, புறநானூறு மட்டுமின்றித் தொல்காப்பியமும்.

'கபிலை கண்ணிய வேள்வி நிலை' (பொருள்: 86:6)

என்ன வேள்வி பற்றி விளம்பும். இதனால் வேள்வி பெற் றிருந்த ஓங்குயர்நிலை தெளிவாகப் புலனாகும்.

அதைப் போன்றே எரிப்பாய்ந்து உடன்கட்டை ஏறி யுள்ள செய்தியும் பழங்காலத்தில் பரவலாகக் காணப்படு கிறது. அரசமகளி ரன்றிச் சாதாரண பெண்டிரும் உடன்

கட்டையேறி இறந்தமைக்குப் பலசான்றுகள் உண்டு. நடுகற்களில் சில மகாசதிக் கற்கள் என்று சுட்டப்படும். புறநானூறு (246) மணிமேகலை (16-23-29) போன்றவை முறையே பூதப்பாண்டியன் தேவியாகிய பெருங்கோப் பெண்டும், சாதுவன் மனைவி ஆதிரை இருவரும் தீப்புகுந்தமை பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. வரைபாய்தல் என்றொரு வழக்காறும் வழக்கிலிருந்ததாகத் தெரியினும் எரிவளர் திறத்தலே பெரும்பான்மை. எரியூட்டி உதவுமாறு கணவனை யிழந்தாளே வேண்டுவதைக் காணுங்கால் 'தீ' வளர்த்தல் பிறிதொரு காரணம் பற்றியும் மக்களிடையே இருந்தமையை உணரமுடிகிறது. இதற்கு ஆரியக்கலப்பு காரணமாகுமா என்ற வினாவிற்குத் தெரிந்த, போதிய விடை முழுமையாகக் கிடைத்திலது. எனினும் அரசக்குடும்பம் என மட்டுமின்றிப் பிறரும் எரிபுகுதலில் பங்கெடுத்திருப்பது குறித்தற்குரியது.

பிறிதொரு கூறு திருமண நிகழ்வுகளில் தீவலம் வருதல். கலித்தொகை இதனைக் காட்டும். கலித்தொகை காலத்தால் பிற்பட்டது என்பதும், இப்போக்கு பிற சங்கப் பாடல்களில் இல்லை என்பதும் ஈண்டு எண்ணுதற்குரிய. வேள்வியைப் போன்றே இஃதும் ஆரியர் கலப்பால் நேர்ந்தது என்பதற்குச் சான்றுகள் உண்டு. சிலம்பில்,

> **'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
> **தீவலம் செய்வது'**

என வருமிடம் முதற்சான்று. ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில்,

> **'தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழிநான்'**

என்றும் தீமுன் மன்றல் நிகழ்ந்த தென்றும் கூறும் விவரிப்பு மேலும் சான்று தரும்.

இக்காரணங்களால் புலனாகும் பிறிதொரு செய்தி, தமிழர்தம் பொது வழக்காறுகளில் விளக்கேற்றல் போன்ற 'செய் தீ' வழிபடுபொருளாக இல்லாதிருந்த காலம் மாறி மன்றலிலும் வேள்வியிலும் வழிபடுபொருளாயிற்று என்பதே. சங்க காலத்தில் இக்கலப்பு ஏற்பட்டபோதும் இன்றைய நடப்பியல் நாட்டுப்புற வழக்காறுகளில் 'செய்யப்பெறும் தீ' சடங்குப் பொருளாக அமைகின்றதே அல்லாமல் வழி பாட்டுப் பொருளாக இல்லை என்பதை உற்றுணரல் வேண்டும். வைதீக நெறிகளின் தொடர்ச்சியில் வழிபடு பொருளாக அனல் இன்றளவும் பல்வேறு வடிவுகளில் உருவாக்கப் பெறுவதையும் அருகருகு வைத்துக் காணுதல் தேவையானதாகும். சங்கம் போன்றே இன்றும் சில நேரங் களில் சிலவிடங்களில் இருநெறியும் ஒன்றாகி யுள்ளமையும் கவனிக்க வேண்டியுள்ளது.

நடப்பியலில் வைதீகத் தீ:

இப்போது நடைமுறையிலுள்ள வைதீக நெறிசார் தீ உருவாக்கம் கவனிக்கப்பாலது. சங்கப் பாடல்களிலேயே இயற்கைப் பொருளான அனல், ஆலவாயண்ணலின் அங்க மென அறையப் பெற்றது. பின்னர் அது மேலும் வலுப் பெற்று, தீ சிவனின் மாற்றுருவாகக் கருதப் பெற்றது. 'கிரியாசக்தியின் வடிவம் தூபம். இத்தூபத்தால் ஆராதனை செய்தவர்கள் ஆணவமகன்று, அறியாமையினின்று நீங்கு வார்கள். ஞான விளக்கமாக இருப்பது தீபம், இதனால் ஆராதனை செய்தவர்களுக்குச் சிவபெருமான் பாவ நீக்கத்தையும் ஞானத்தையும் கொடுத்தருளுவார்'[5] என்ற குறிப்பால் மனிதமனத்தின் நம்பிக்கை புலனாகும். யாக சாலையானது 36 தத்துவ வடிவமானதும் சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமானதும் ஆகும்[6] என்ற கருத்தும்,

''எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமாவது உணர்கிலார்''

என்று வரும் திருநாவுக்கரசர் திருவாக்கும் தீயே சிவனாகக் கருதப் பெற்றமையை உணர்த்தும். அதனாலேதான் கார்த்திகை வழிபாடு சிவன் தொடர்பானதாகவும் தீப அடுக்காகவும் நிகழ்த்தப் பெறுகிறது. இதன் தொடர்பாகக் கூறப்பெறும் மகாபலி கதையும், பௌர்ணமி யன்று தீபத்தூண் நட்டு, வைக்கோலைச் சுற்றித் தீபமாக ஏற்றிச் சோதியாக இறையை ஏத்தும் நிகழ்வும் உளங்கொள்ள வேண்டியவை. திருமாலும் பிரம்மாவும் காண முடியாத வண்ணம் சிவன் விண்ணுக்கும் மண்ணுக்கு மிடையே ஏகத்தீயாய் நின்றதைக் கொண்டாடுவதே கார்த்திகைத் திருநாள் என்ற கருத்தும் நடப்பியலில் கூறப்படுகிறது. இக்கார்த்திகைத் திருநாளே தமிழரின் தீபாவளி என்றும், நரகாசுரன் கதை திருமால் வழிபாட்டுக்காரர்கள் கொண்டு வந்தது என்றும், உண்மையில் தீப ஆவலி சமண மதத்தினருடையது என்றும் பல்வேறு குறிப்பு களுடன் தமிழர்கள் கொண்டாடுவது தீபாவளி. புராண அல்லது தெய்வச் சார்புடைய தீபம் இங்கு இடம்பெறுவது கண்கூடு. 'சிவனின் மகனாய முருகன் நெற்றிக் கண் நெருப்பி லுதித்தவன் என்பதால் அக்கினிமகன் எனப்படுவது இதிகாசச் செய்தியாகும். இதனை யொட்டி வடநாட்டில் சுப்பிரமணிய வழிபாடு உருத்திர வழிபாட்டிலிருந்து தோன்றியிருக்கலாம் எனத் தோன்றுகிறது என்பர்[7]. பிற தெய்வங்களை விடவும் பவளம்போல் தீ வண்ணமேனி, சந்திரனைச் சூடியுள்ள திருமுடி, நெற்றிக்கண், தீப்பிழம் பாய் நின்ற கோலம், நெருப்பேந்திய திருக்கரம், திரிபுரமெரித்த தீ மடுப்பு, (இதுவேகமூர்த்தம் எனப்படும்) போன்ற கூறுகளால் நீலமிடற்றானே பெரிதும் தீ வடிவ இறையாகக் கருதப் பெறுவதை உணரமுடிகிறது. வைதீக

நெறிப்பாடுகளில் தீயே கடவுளாகிய தன்மையை நடப்பியல் காட்டுகிறது. கார்த்திகையில் எரியூட்டி ஒளிவடிவில் ஈசனை வணங்குவது 'சொக்கர் பனை' எனப் போற்றப் பெறுவதும் உடன்வைத்துக் கருதத்தக்கது.

நாட்டுப்புற நடப்பியலில் தீயின் பங்கு

நடப்பியலில் நாட்டுப்புற வழக்காறுகளை ஊன்றிக் கவனித்தால் எவ்விடத்தும், செய்யப்பெறும் தீ இறையாகக் கருதப்பெறாமையும் வழிபாட்டிற்கு உதவுவதாயும் அல்லாது சடங்கு நிலையில் ஆக்கப் பெறுதலைக் காணமுடிகிறது. சங்ககாலத்தில் மனைவியைக் குறிக்கும் போது 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' என இசைத்தனர்.[7] இதனையடி யொற்றி இன்றும் 'வீட்டுக்கு விளக்கேத்த ஒருத்தியை' நாட்டுப் புறவியல் பேசும். வீட்டில் நிகழும் திருமணம் மற்றும் இறப்புச் சடங்குகளில் தீபம் ஏற்றப்பெறுவது சிற்றூர், சிற்றூரிலிருந்து வளர்ந்த பேரூர்களின் வழக்கு. செங்குந்தர் மரபில் திருமண நிகழ்வுகளில் 'அரசாணைக் கால் நட்ட அன்றே குடவிளக்கும் காமாட்சி விளக்கும்' ஏற்றுவர். இவ்விளக்குகளை மூன்று நாட்கள் வரை அணைக்கக் கூடாது[8] என்ற மரபு உள்ளது.

இதனைப் போன்றே நாட்டுப்புற மக்களில் ஒரு சாராரிடையே பூப்படைந்த பெண் தங்கிய-அதற்காக அமைக்கப் பெற்ற-குடில் அவள் பயன்படுத்திய உடைகள் ஆகியவற்றைத் தியிட்டழிக்கும் போக்கும், பூப்படைந்த வுடன் அப்பெண் தங்குவதற்காக அமைக்கும் குடிலை 'மலையாளக் குச்சில்' என அழைத்து அதனுள் குத்துவிளக் கேற்றி வைத்து இரவெல்லாம் அணையாது காக்கும் போக்கும் காணப்படுகின்றன.[9] இவையன்றி ஏனைய சிறப்பு நாட்களில் விளக்கேற்றி மகிழ்தல் உண்டு. எவ் விடத்தும் அஃது ஒரு வழிபாட்டுப் பயன்பாட்டில் அமையப்

பெறவில்லை. அதனைப் போன்றே இறந்தவர் வீடுகளில் இறந்தவர் தெய்வமானமை கருதி விளக்கேற்றலும், பிணத்தைச் சுற்றி உரிமைச் சுற்றங்கள் நெய்ப்பந்தமேந்தி வலம் வருதலும், தலைமகன் தீச்சட்டி சுமந்து மயானம் செல்லலும் நடைமுறைகள். இதில் பங்குபெறும் எத்தீயும் வழிபடு பொருளாக இடம்பெறவில்லை. மாறாகச் சடங்கு நிலையில் அமைக்கப் பெறுகின்றது. இக்காரணம் பற்றியே 'வீட்டுவாசலில் நெருப்புக் கொளுத்தக் கூடாது' என்று நாட்டுப்புற நம்பிக்கை யொன்று கூறுகின்றது.[10]

இல்லங்கட்கு வெளியில் கோவில் சார்ந்த நாட்டுப்புறக் கூறுகளிலும் 'தீ' வழிபடப்பெறவில்லை. தமிழகத்தில் குறிக்கத் தகுந்த வழிபாட்டுள் சுடலைமாடன் வழிபாடும் ஒன்று. சிவனுக்குச் சுடலையாடி என்றொரு பெயருண்டு. ஆனால் நாட்டுப்புற மக்களுக்குச் சுடலையாடி ஒரு கிராமத்துச் சாமியாகப் பரிச்சயம் உண்டே தவிரக் கயிலாயச் சிவனை அவர்களுக்குத் தெரியாது. சுடலைமாடனுக்கு எடுக்கப் பெறும் கோடை விழாவில் தென்னம்பாளையால் உருவான இரு தீப்பந்தத்தைக் கையால் எடுத்துக் கொள்ளும் சாமியாடி, சுடலைமாடனின் திருவுருவைச் சுற்றி, மும்முறை வலம் வந்தாடுதலும், இடுகாட்டில் பிணம் எரிக்கும் குழியினைச் சுற்றி மும்முறை வலம் வந்தாடுதலும் நடைமுறைகள்.

இதைப் போன்று தீயில் விழுந்து இறந்த பெண்களைச் சாமியாக்கித் தீப்பாய்ந்த அம்மன் கோவில்கள் என்றழைக்கும் போக்கும் காணப்படுவது குறிக்கத்தக்கது. தீயிலாழ்ந்தவர் கதை[11], தீப்பாய்ஞ்சாயி[12], தீப்பாய்ந்தம்மன் கோவில்[13], மூன்று கண்டத்தாள் போன்ற சொல்லாட்சிகள் இவண் குறித்தற்குரிய. இன்றும் சில அம்மன் கோவில்களில் மூலவர், உற்சவர் ஆகிய இரு திருவுருவுகளிலும் அம்மன் தலைக்கு

மேல் எரிதழல், சுடரடுக்காக ஒரு கிரீடம் போல் அமைக்கப் பெற்றிருத்தலைக் காணமுடியும். இங்கு அம்மன் வணங்கப் படுகிறதேயன்றி, அம்மனுடம் தொடர்புடைய அக்கினி யன்று. மேலும் மேற்சுட்டிய சுடலைமாடன், தீப்பாய்ந்த அம்மன் ஆலயங்களிலும் பிற ஆலயங்களிலும் 'தீ' ஒரு சடங்குப் பொருளாக அமைவதை மேலும் சில சான்றுகள் உறுதிப்படுத்தும்.

இக்கோவில்களில் நிகழ்த்தப்பெறும் சில நடைமுறை களில் ''எத்தனையோ கொடுமையான சித்திரவதைகளையும் உடல் வலிகளையும் தாங்கிக் கொள்ளுதல் உண்டு. இவ்வாறு மனித இயல்பு மீறிய செயல்களை வெளிப்படுத்துவதன் மூலம் அவன் சாதாரண மனிதர்க்கு இல்லாத ஆற்றல்பெற்று நோய்கள் மற்றும் சிக்கல்களுக்கான தீர்வுகளைத் தருகிறான் என்பது நம்பிக்கை''[14]. இக்காரணங்களாலேதான் தீப் பந்தம் ஏந்திச் சுழன்றாடித் தன்னைச் சுட்டுக் கொள்ளல், கையில் தீச்சட்டி ஏந்தி வலம்வருதல், தீக்குழியைப் பூக்குழி யாய்க் கருதித் தீமிதித்தல் போன்றவை சிற்றூர்க் கோவில் களில் காணப்பெறுகின்றன. தமிழர்தம் இப்போக்கு பர்மா, மற்றும் பிற தென்கிழக்காசிய ராடுகளில் காணப்பெறுவதைக் க. த. திருநாவுக்கரசும் விளக்குவார்.[15] தீயவை அழிக்கப் பெறும் என்ற நம்பிக்கையின் அடிப்பிறந்த செயற்பாடே கொடும்பாவி கொளுத்துதல். சம்காரம் என்ற பெயரில் நிகழும் இவ்விடத்தும் தீயெரிப்பு வழிபாடாக இல்லை. இதன் வேறுபட்ட நிலையே சூடன் வைத்துத் திருட்டி கழித்தல், உப்பு, மிளகாய் போன்றவற்றைத் தீயிலிடல் போன்ற நிகழ்வுகள். மேற்சுட்டிய நாட்டுப்புற வழக்காறு களிலும், இன்று நடைமுறையில் காணப்படுகின்ற நம்பிக்கையை அடியொற்றிய - மாவிளக்கு வைத்தல், இராகுகாலத்தில் எலுமிச்சைப் பழங்களைக் கொண்டு விளக்கேற்றல் போன்ற-வழக்காறுகளிலும் 'தீ' செய்யப்

பெறுகின்றது. சடங்கு நிலைக்கப்பால் தீச்சட்டியோ, மாவிளக்கோ, தீப்பந்தமோ வணங்கப் பெற்றதாகச் செய்திகளில்லை என்பது உற்று நோக்குதலுக்குரித்து.

கலந்த நிலையில் கனல்

இன்று சில நேரங்களில் நாட்டுப்புற வழக்காறுகளில் இலக்கியங்களின் செல்வாக்கால் வைதீக நெறிப்பாட்டுடனான ஒழுகலாறுகள் காணக் கிடக்கின்றன. இதனிடையே தீ பற்றிய சில இலக்கியச் செய்திகளை இணைத்துப் பார்ப்பது பொருத்தமாக அமைதல் கூடும். கலித்தொகையில் (69) எரிக்காகத் தனிக்கடவுள் ஆங்கியங் கடவுள் என்ற பேரால் குறிக்கப் பெறுகின்றார். அக்கினி தேவனான இவனைப் பத்தினிப் பெண்டிர் தம் விருப்பத்திற்கேற்றவாறு ஏவியுள்ளமையைச் சிலப்பதிகாரக் கண்ணகியாலும், இராம காதைச் சீதையாலும் அறியமுடிகிறது. சீதையின் கற்பினைப் பற்றிய மக்கள் ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்ள இராமன் எரிமூழ்கச் செய்வதாக வரும் இதிகாசக் கதையில் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையின் இன்றைய வெளிப்பாடே சூடன் ஏற்றிச் சத்தியம்செய்வதும், சூடனைக் கையில் வைத்து எரித்துச் சத்தியம் செய்வதுமாகும்.

தீவலம் வந்த கண்ணகி தெய்வமான பின்னர் அவளுக்கு வேள்வி எழுப்பிய சிலம்புச் செய்தியால் வேள்விக்கிருந்த செல்வாக்கை உணரமுடிகிறது. மகப்பேறு பெற்றமை, சுவர்க்கம் புகுந்தமை, உடன்கட்டை ஏறினமை போன்ற எரிபுகற் செய்தியால் வேண்டியதைப் பெறத் தீயில் இறங்கல் - நம்பிக்கையின் அழுத்தத்துடன் - நடைமுறையானது. இதனையே திருநாளைப் போவார் என்னும் நந்தனாரின் செய்கை எடுத்துக் காட்டுகிறது. ''எரிபுகுந்து எனையடை'' என்று ஈசன் முதன்முதலில் நந்தனாரின் கனவில் கூறியதாகவும், வேள்வித் தீயெழுப்பும் திறப்பாடு

அவருக்கில்லை யாதலின் அந்தணர் கனவிலும் ஈசன் அதே செய்தியைக் கூறியதாகவும், நந்தனாருடைய முழுச்சம்மதத் துடன் தீ வளர்க்கப் பெற்றதாகவும், எரியில் மூழ்கிய நந்தனார் இறக்காமல் புத்துருக் கொண்டு தில்லை வாழ் அந்தணருடன் சிவதரிசனம் செய்ததாகவும் பெரியபுராண உரை உரைக்கும் சிவன் குடிகொண்ட கோவிலுக்குள்[16] புகமுடியாது மறுகிய நந்தனார் இக்கதையினால் இவன் அனைத்துச் சிவன் கோவில்களிலும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக இருப்பதும், சிவனை வணங்கும் அடியவர்கள் நந்தனார் உள்ளிட்ட அடியவர்கள் அனை வரையும் வணங்கி நிற்பதும் நடப்பியற் செய்திகள்.

நாட்டுப்புற மாந்தரிடையே வைதீக நெறிகளை நம்பிக்கையடிப் படையில் அப்படியே ஏற்கும் போக்கு நந்தனார் காலம் முதலாக இன்றுவரை காணப்படுகிறது. மாரியம்மன் கோவில் சிறுதெய்வக் கோயிலே. இங்கு, குடமுழுக்கின் போது யாகசாலை அமைத்தலோ, கோவிலில் கொடிமரம் அமைத்தலோ வழக்கமில்லை. இன்று இப் போக்குகள் மாற்றி வருகின்றன. எடுத்துக் காட்டாகக் கடந்த 10—2—89 அன்று புதுச்சேரி முத்தியாலுப் பேட்டை காந்தி வீதியில் குடமுழுக்குச் செய்யப் பெற்ற ஏழைமாரியம்மன் கோவில் நிகழ்வுகளில் யாகசாலை அமைக்கப் பெற்று வேள்விகள் நடத்தப்பெற்றன. உள்ளே கொடிமரம் காணப்படுகிறது. நாட்டுப்புற வழக்காறுகளில் வைதீக நெறி ஏற்கப் பெற்றமையை இஃது எடுத்துக் காட்டும். இதைப் போன்றே நாட்டுப்புற வழிபாடாகத் தோன்றி வைதீக நெறியாக வளர்ந்துள்ள சபரிமலை அருள்மிகு ஐயப்பன் வழிபாட்டில் மகரஜோதியாக இறை காண்டல் நிகழ்கிறது. வெறும் சடங்கு நிலையிலிருந்து 'தீ' வடிவில் இறைகாணும் நாட்டுப்புற அமைவுகட்கு இவை எடுத்துக்காட்டுகள். ஆண்டவன்மீது காட்டிய பக்திக்காகத்

தன்னைத்தானே வெட்டிப் பலியிட்ட பழங்காலப்போக்கு கணவனுடன் இறக்கும் சதி, இதே மன நிலையில் தலைவர் களுக்காகத் தீக்குளித்தல் – மூன்றும் ஒருவரிசையில் வைத்து எண்ணத்தகுவன. தீயில் இறங்கி வேண்டுதலை நிறை வேற்றும் 'பூக்குழி இறங்குதல்' அருகுவைத்துக் கருதத் தக்கதாம்.

பிற செய்திகள்:

கல்வெட்டுகளில் காணப்பெறும் விளக்கீடு பற்றிய செய்திகள் கவனிக்கத்தக்கன. தானமாகவும், பிறவாகவும் இவை அமைகின்றன. குறிப்பிட்ட நேரமாக அல்லாமல் இரவு பகல் எந்நேரமும் எரியத் தக்க நந்தா விளக்குகள் சடங்குநிலையில் அமைக்கப்பெற்றவை. அவை வழிபடப் பெற்றமைக்குச் சான்றுகளில்லை. இறைமுன் எல்லாக் காலத்தும் எரிந்து நின்றன.

இன்றும் அமரரான நேரு, காந்தி போன்றோர் சமாதி களில் அணையா விளக்குகள் அமைந்திருப்பது உடன்வைத்து எண்ணத்தகும், இறைவனை அலங்கரிக்கச் செய்ய, கோவிலை அழகுபடுத்த அமைக்கப் பெற்ற திருவிளக்குகள் வழிபாட்டுப் பொருள்களல்ல. மருதுபாண்டி மன்னர்கள், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் அம்மன் சன்னதி நுழைவாயிலில் அமைத்துத் தந்துள்ள திருவாட்சி வடிவ விளக்கமைப்புகளும் இன்ன பிறவும் இதற்குச் சான்றுகள். நம்பிக்கையி னடிப்படையில் கோவிலில் ஏற்றப்பெற்ற கரு வரை விளக்குகளே இறையின் மாற்றுருவாயின. 'கர்ப்பூர ஆரத்தி கருப்பக் கிருகத்திலிருந்து' வெளிப்போந்தவுடன் அதுவே இறையெனக் கருதப்பெற்று, தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் போக்கு வளர்ந்தது. இதனுடன் ஒளி வடிவி லிறைகாணும் வைதீக நெறியின் பாதிப்பும் உண்டான தால் இல்லந்தோறும் குத்துவிளக்குகள் ஏற்றப்பெறுகின்றன,

பின்னர்த் திருவிளக்கே இறைமையானது. 108 திரு விளக்கு வழிபாடுகள் 1008 திருவிளக்குப்பூசை என்றழைக்கப் பெற்றுப் பூசைகள் நிகழ்வதும், அதற்கெனச் சிறு கையேட்டு நூல்கள் வந்திருப்பதும் இன்றைய நடப்பியல்கள். இதனை விளக்கவந்த நூலொன்று ''திருவிளக்கு மும்மூர்த்தி வடிவம். ஆசனமாகிய அடிப்பாகம் பிரம்ம அம்சம். நெடுத்தண் டாகிய நடுப்பாகம் விஷ்ணு அம்சம். நெய் ஏந்தும் அகல் பகுதி சிவன் அம்சம். அதன்மேலுள்ள பகுதி மகேஸ்வரன். சிகரமாகிய உச்சிப்பகுதி சதாசிவம். நெய்-நாதம், திரி-பிந்து, சுடர்-திருமகள், பிழம்பு-கலைமகள், தீ-சக்தி எனப்பேசுகின்றது.''[17] திருவிளக்குப் பூசையின்போது பாடப் பெறும் பாக்கள் யாவும் திருவிளக்கையே அம்மனாகவும் இறைவனாகவும் சுட்டிச் செல்கின்றன.

சிறு தெய்வங்களைச் சாடுகின்ற அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் அம்பலத்தாடுகின்ற அண்ணலின் உருவமாகச் சுடரைச் சுட்டுவார். இவர் உருவாக்கிய '' அருட்பெருஞ்சோதி — தனிப்பெருங்கருணை '' என்ற முழக்கம் குறிக்கத் தக்கது. வடலூர் உட்பட வள்ளலார் நெறியில் இயங்கும் திருத்தலங்களில் விளக்குச் சுடரே இறைவனாக ஏற்கப்பெற்றுப் போற்றப்பெறுகின்றது.[18] செய் தீயே இங்கு இறையாகும் போக்கை உணரமுடிகிறது.

சங்ககாலத்தில் வழிபடுபொருளாக இடம்பெறாத அனல் காலப்போக்கில் பலவிதமான சமூகப் பின்புலங்களால் படிப் படியாக வளர்ந்து – வழிபாட்டின் துணைப்பொருளாகி, வழிபடு பொருளாகி, வழிபடு இறையாகி – போற்றப் பெறுவதனைக் காலவளர்ச்சி காட்டுகிறது. தமிழரின் 'செய் தீ' பற்றிய சிந்தனைகளால் வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை இலக்கிய வரிகளாலும் நடப்பியல் மரபுக ளாலும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

தொகுப்பாகச் சில:

1. சங்ககாலப் பாக்களைக் கொண்டு, 'தீ' என்பது உலகை உருவாக்கிய பொருட்களில் ஒன்றென்று பண்டைத் தமிழர் உணர்ந்தமை தெளிவுபடுகிறது.

2. இயற்கை வழிபாட்டிற்கப்பால் ஒளியைப் போற்றினர் தமிழர்; இறையுடன் தொடர்புபடுத்தப் பெற்ற நிலையில் அஃது அமைந்தது.

3. வைதீக நெறிசார்ந்த அந்தணர்களும், துறவறத்தாரும் வேள்வித்தீ ஓம்பினர். இவ்வழக்கு, பொதுமக்க ளிடையே இல்லை. வேள்வித் தீ வணங்கப்பெற்றது. மக்களிடையே வழக்கிலிருந்த 'தீ' சடங்கு நிலையின தானது.

4. ஆரிய நெறிக் கலப்பும் அரசர் பங்கீடும் உதவிய காரணத்தால் வேள்வியில் நம்பிக்கை கொள்ளல், உடன்கட்டை ஏறுதல், மன்றலில் தீவலம் வரல் ஆகியவை பொதுமக்களிடையே கலப்புற்றன.

5. நடப்பியலில் வழிபாட்டுத் தீ பல்வேறு தத்துவப் பூச்சுகளுடன் காணப்பெறுகிறது. அவற்றுள் மதச் சார்பு அதிகம்.

6. நாட்டுப்புற நடப்பியலில் சடங்குநிலைத் தீ பல்வேறு காரணங்களுக்காக மக்களிடையே நடம் பயில்கின்றது. எனினும் அது வழிபடப்படாமல் உறுதுணைப் பொருளாய் ஒரு சடங்கு நிலையிலேயே அமைகிறது.

7. இலக்கியங்கள், பிற நம்பிக்கைகள் போன்றவற்றால் நாட்டுப்புறங்களில் வைதீக நெறித் தீ பரவியுள்ளது. இதன் தொடர்ச்சியாக இல்லந்தோறும் விளக்கேற்றி, அத்தீயே வழிபடுபொருளானது.

8. சங்கந் தொடங்கி இன்றுவரை பொதுமக்களிடையே பயிலப்பெறும் தீ சடங்காக இருக்க, வைதீக நெறியினரின் தீவழிபாடு பொருளாக அமைய இங்கு மங்கும் ஒரேவழிக் கலப்புகள் காணப்படுகின்றன.

9. இறையை ஏத்திடச் செய்யப்பெறும் முறைமைகளில் குத்துவிளக்கேற்றும் மரபு இருந்தது. பின்னர்க் குத்து விளக்கே இறையானது. திருவிளக்குப் பூசை பரவலானது.

10. தில்லையி லாடும் ஆடல்வல்லானின் திருவுருவைச் சுடருக்குள் கண்ட அருட்பிரகாச வள்ளலார் 'அருட்பெருஞ்ஜோதி' மரபை உருவாக்கின்றார்.

11. இன்றைக்குத் தமிழரிடையே 'செய் தீ' யானது பலவிதக் கோணங்களில் வழிபாட்டு மரபுகளில் குறிக்கத்தக்க இடத்தைப் பெற்றிலங்குகிறது.

குறிப்புகள்

1. ம. பொ. சிவஞானம், இலக்கியங்களில் இன, சமயக் கலப்புகள், ப. 24
2. சுக்கிரநீதி சு. 71-72 (பண்டிதமணி மு. கதிரேசனார் தமிழாக்கம்) மேற்கோளாக: க. த. திருநாவுக்கரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழப்பண்பாடு-ப.195
3. ம. பொ. சிவஞானம், மேற்சுட்டிய நூல். ப. 63
4. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு ப. 165
5. செந்துறை முத்து, திருக்கோவில் வழிபாடு, ப. 62
6. மேலது. ப. 66

7. வித்தியானந்தன், மேற்சுட்டியநூல், ப. 139
8. மு. இராமலிங்கம், ''புத்தூர்மண்டல செங்குந்தர் திருமண வழக்காறுகள்'' தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை-தொகுதி-2, (1988) ப. 55
9. சாந்தினி எம். தாஸ், ''இந்துச் சக்கிலியரின் பூப்புச் சடங்குகள்'' மேலது, பக் 532-535
10. பி. நாராயணன், நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 65
11. த. செல்லமுத்து, ''மனித வழிபாடே தெய்வ வழிபாடு'' நாட்டுப்புற ஆய்வுக்கோவை, தொகுதி-2 ப. 649
12. மேலது ப. 652
13. தங்கதுரை, ''தீப்பாய்ந்தம்மன் கோவில்'', மேலது, ப. 717.
14. சந்திரசேகரன், ''அறிவியல் நம்பிக்கை செய்வழமை'' மேலது, ப. 775–776.
15. பெரியபுராணம், சி.கே.எஸ். உரை.
16. க.த. திருநாவுக்கரசு, மேற்சுட்டியநூல், ப. 82 மற்றும் ப. 320.
17. தங்கரதம் (வழிநடைப்பாடல் தொகுப்புநூல்) (1987) ப. 40.

திருப்பாவை

ஆழிமழைக் கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கருத்துப்
பாழியம் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

வழக்காற்றில் நீர்

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. ஒருகாலத்தில் ஐம்பூதங்களாகக் கருதப்பெற்று வழிபடப் பெற்றவைகளுள் நீரும் ஒன்று. அறிவியல் சிந்தனைகள் பல்கிப் பெருகிய பின்னரும் சில இயற்கை நிகழ்வுகளையும் அதனடியாகப் பிறந்த மனிதர் வழக்காறுகளை

யும் மாற்றுதல் என்பது இயலாததாகி இருப்பது வெளிப்படை. பொதுப்பயன்பாடுகளுக்கு அப்பால் நீரைப்பற்றிய மனிதனின் பார்வை காலத்திற்குக் காலம் மாறுபட்டிருப்பதை எடுத்துக்காட்டவும், அதனையொட்டிய சமூக நிகழ்வுகளைக் கண்டுணரவும் இக்கட்டுரை முயல்கிறது.

இயற்கையும் மனித மணமும்:

தன்னைத் துன்புறுத்துகின்ற ஒன்றை அல்லது தனக்கு அச்சந்தருகின்ற ஒன்றை அல்லது தனக்கு இனம்புரியாத வலிவுபொருந்திய ஆற்றலைத் தொடக்க கால மனிதன் வணங்கினானென்பது பலரும் சுட்டிய செய்தி. சூரிய வழிபாடு, பாம்பு வழிபாடு, எரிமலைக்குத் தெய்வப்பேரிட்டு வணங்கல் போன்றவை இவன் கவனித்தலுக்குரியவை. இயற்கை தருகின்ற நன்மை தீமைகளை உணர்ந்தமனித இனம் அச்சத்தைப் படிப்படியாக மாற்றிக்கொள்ளவும், அச்சத்தை வெல்வதற்கான தீர்வுகளை நடைமுறைப் படுத்தவும் முயன்றது. அவற்றில் சில வழிபாடுகள் என உருமாறின. ''உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில், அவை, அச்ச அடிப்படையிலும் அன்பு அடிப்படையிலும் எங்கும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச் செயல்கள்''[1] என்பது 'பாம்பு வழிபாடு' நூலாசிரியரின் சொல்லடுக்குகள். இதனடிப் படையிலேயே நிலம், நீர், காற்று, வான்,தீ என்ற ஐந்தையும் பெரும்பூதம் எனக் கொண்டு ஐம்பூதங்கள் என அழைத் தமையும் வணங்கப் பெற்றமையும் பழைய செய்திகள்.

ஆயினும் அச்சம் காரணமான வழிபாட்டுப் பொருளில் நீர் மிகுதியும் இடம்பெறவில்லை. மழை வேண்டலும், புதுப்புனல் கண்டுழி அதற்கென மகிழ்ந்து புனலாடுதலும்

காணப்பெறுகின்றதே அல்லாமல் மழைவழி ஏற்பட்டதாக எச்செய்தியும் பண்டைய இலக்கியங்களில் காணப்பெறு மாறில்லை. இரண்டாவதாக இறைமைக்கு அடுத்த நிலையில் ஐம்பெரும்பூதங்களில் நீர் மட்டும் கருதப் பெற்றிருப்பதை வள்ளுவம் சுட்டும். பிற ஒதுக்கப்பெற்றதற்கான காரணங்கள் கண்டறியப்பெற வேண்டியவை. அழித்தல் மிகுதியும் இன்றி ஆக்கலுக்குப் பயன் தருவது நீரென்பதாலும் இன்றியமையாமை கருதியும் இவ்வைப்பு முறை இடம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. அதனாலேதான் மழையின்றிப் போகும்போது இறையைச் சாந்தி செய்தல் வேண்டும், என்ற மனப்போக்கு சிலப்பதிகாரகாலத்திலேயிருந்து தமிழரிடையே காணப்பெறுகின்றது. எஞ்சிய நான்கு பெரும்பூதங்களை யொட்டிய இத்தகைய சாந்திசெய்விக்கும் போக்குகள் மிகுதியும் காணப்பெறாமையும் உடன் வைத்து எண்ணத் தகுந்தது.

வழிபாட்டு நிலையில் நீர்:

கல்வி உட்பட யாவற்றிற்கும் ஓர் இறையின் பெயர் கூறப்பெற்று வணங்கப்பெறுவதைப் போன்று நீருக்கும் சில தெய்வங்கள் உண்டாயின. ஆயினும் வழிபாட்டைப் பொறுத்தவரை நீரைப்பற்றிய பார்வைகள் இரண்டுவிதங்களாக அமைந்துள்ளன. முதலாவது நீரைத் தெய்வக் கூறுகளில் ஒன்று என மட்டும் கருதும் மனநிலை. வருணன், இந்திரன் இவர்களை மழைத்தொடர்பு தெய்வங்களாக் கியவர்கள் தொடக்கத்தில் பெருந்தெய்வங்களை இவ்வாறு நீருடன் இணைக்க முன்வரவில்லை. வருணனைப் பற்றியும் இந்திர விழா பற்றியும் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன. ஆயின் மனமகிழ் கருதி மட்டுமே இச்சிறு தெய்வங்கள் வணங்கப் பெற்றனவேயன்றி அச்சங்கலந்த வழிபாட்டு நிலை காணப்பெறவில்லை.

இரண்டாவதாகப் பிற்காலத்தில் நாட்டுப்புற மக்களிடையே நீரே தெய்வமாக மதிக்கப்பெறும் நிலை உருவாயிற்று. மழை வேண்டல், சாந்தி செய்தல், விழாக்களில் நீருக்கு முக்கியத்துவம் தருதல் என வழிபாட்டு முறைகள் மாற்றங்கண்டன. இன்றைக்கு இவ்விரண்டு கூறுகளும் தமிழர் வழக்காற்றில் கலந்துள்ளன.

பெருந்தெய்வங்களின் பல 'அம்சங்களில்' நீருக்கும் பங்குதரப் பெறுவது புராண, இதிகாசக் கதைகளின் காரணமாகவே. நீர் வழிபாட்டில் கங்கை வழிபாடு அல்லது கங்காதேவி வழிபாடு தலையாயது. கங்கை நீரைக் கொணரப்பகீரதன் தவமியற்றியதாகவும் அதனால் 'பகீரதப் பிரயத்தனம்' என்ற சொற்றொடர் வழக்கில் உருவானதாகவும் புராணங்கள் புகல்கின்றன. சிவனுடைய தலையிலிருந்து கங்காதேவி நீராக அருள்தருவதாகக் கூறப்பெறும் மற்றொரு செய்தியும் கவனத்திற்குரியது. இதனால் புனிதம் நிறைந்த நீர் 'தீர்த்தம்' என்றானது. இந்நீர் நிறைந்துள்ள இடங்களுக்குப் பயணித்தல் 'தீர்த்தயாத்திரை' என்றழைக்கப்பெறுகிறது. இறையினால் சிறப்புற்ற ஊர்கள் சிறப்பு வாய்ந்தவை, இறையின் சிறப்பும், தீர்த்தச் சிறப்பும் பிற சிறப்புகள். இதையே 'தலம், மூர்த்தி, தீர்த்தம்' என்ற சொல்லடுக்கால் உணர்த்துவர்.

இறையுடன் தொடர்பு கொண்டதால் மட்டுமே இப்புனித நீர்கள் போற்றப்பெற்றன. ''பிரம்மனிலிருந்து ஆத்மன் தோன்றினான் என்பது தாத்திரிய உபநிஷத்தின் கருத்து. உயிரற்ற பொருளிலிருந்து உயிர் தோன்றியது. கீழே குறிப்பிட்டவாறு: ஆகாயம் – வாயு - அக்னி – நீர் - பூமி (பிரித்வி) – தாவரங்கள் – பிராணிகள் - மனித உயிர்''[2] என விவரிப்பர்.

உபநிடதங்கள், புராணங்கள், இதகாசங்கள், இவற்றின் மூலம் நீருக்கு முதன்மைதர விழைந்த மனிதன் அதற்கேற்ப விழா எடுக்கவும் அதற்குத்தத்துவார்தமாக விளக்கம் தரவும் முனைந்தான். 'ஆறு, குளம், கடல் முதலிய இடங்களுக்குச் சிவபெருமான் திருவுலாக் கொண்டு எழுந்தருளுவது தீர்த்தவாரி விழாவாகும். இவ்விழாவின் நோக்கம், அங்கேயுள்ள ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் குறிப்பே ஆகும்', என விழாவையும் ''அட்ட மூர்த்திகளால் பகவான் என்னும் திருப்பெயருடைய சிவபெருமானது வல்லமை, நீர்வடிவாக அமைந்து, தன்னையடைந்து தரிசித்து நீராடும் அடியார்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கித் தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து, தாத்துவாத்தராய் விளங்கும் சிவத்துடன் சேர்க்கும்'' என அதன் விளக்கத்தையும் குறிப்பர்.[3] ''உடம்பின் அமைப்புப்படி, குடத்தில் தேங்காய் தலையாகவும், தர்ப்பைமுடிகள் தலைமயிராகவும், மாவிலைகள் அவயங்களாகவும், வெள்ளைநூல் நரம்புகளாகவும், கலர்நூல் எலும்புகளாகவும் தசைகளாகவும் நிரப்புகின்ற நன்னீர் ரத்தமாகவும் பாவிக்கின்ற தத்துவப் படி'' சங்காபிடேக விழா எடுப்பதையும் உடன்வைத்து எண்ணல் வேண்டும். இக்காரணங்களால் பெருந்தெய்வக் கோவில்களிலும், புனித நீர்த்தலங்களிலும் நீர் போற்றப் பெறுகிறது. ''திரிவேணிக்கு வேணு (மூங்கில்) தானம் செய்தால் புண்ணியமாகும். ஒரு சிறிய முறத்தில் சீப்பு, கண்ணாடி, குங்குமச் சிமிழ், மஞ்சள் பொடி, அரிசி, வெற்றிலைபாக்கு, பழம், ரவிக்கைத் துணி, தட்சணை இவற்றை வைத்து மேலே ஒரு சிறிய முறத்தால் முடி தானம் செய்யும்''[4] போக்கு வடபுலங்களில் மட்டுமின்றி இராமேசுவரம் போன்ற கடலாடுமிடங்களிலும் நடைமுறையில் இன்று காணப்பெறுகிறது.

வேறு வகையில்:

இவ்வாறு பெருந்தெய்வத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் நீர் மதிக்கப்பெறுவது ஒருபுறம் நிகழ, தமிழகச் சிற்றூர்களில் வேறொரு வழியில் நீரை வணங்கத் தலைப் பட்டனர். மழையின்மையால் வேளாண்மை பாதிக்கும் என்பதால் மழையே இறையென நம்புவதும் மாரி என்ற பெயரால் மழைத் தெய்வமாக மாரியம்மனை வணங்குவதும் நடைமுறையாயின. மழை வளம் குறைகையில் மழைக்குரிய மாரியம்மனைக் குளிர்வித்த ஆடவர்கள் கூத்தமைப்பதும், பெண்டிர் கும்மியடிப்பது, பொங்கலிடுவது என வேண்டு வதும், கால்நடை உயிர்களினைப் பலியிடுவதும் இன்றைய நடப்பியல். இப்போக்கு இலங்கையிலும் காணப்பெறுகிறது. மாரியம்மனைக் குளிர்விக்கும் அப்பாடல்கள் 'குருத்தி பாடல்கள்' (குளிர்ச்சி) என்று இன்றளவும் பாடப்பெறு கின்றன. நீரைத் தெய்வமாகக் கருதும் போக்கு இவர் களுடைய பிற வழிபாட்டு நிலைகளிலும் உணர்த்தப்படும். திரௌபதையம்மன் கோவில்கள் வட மாவட்டங்களில் மிகுதி. திரௌபதி இருக்குமிடத்தில் மழையிருத்தல் வேண்டும். இதன்வழி திரௌபதை விராட தேசத்தில் இருந்ததைத் துரியோதனன் உணருவதாக வருகின்ற கதை யமைப்பும் கருதத்தகுவதாகும். கரகம் என்பது நீரைக் கடவுளாகக் கருதிக் கலசத்தில் ஏந்துதலாகும். விரதம் பூண்டவர் மட்டுமே கலசந்தூக்கவியலும். சில கிராமங்களில் கலசத்திலுள்ள நீரே அம்மனாகக் கருதப்பெறுவதும், கலசத்தை அம்மன் முகமாக்கி வரைதலும் உண்டு. கரகம் சுமந்துவருதல் அம்மன் வரவாகக் காணப்பெறுவதால் பாது காவலர்களாக வேறிருவர் கத்தியுடன் அருகில் வருதலையும், காணமுடியும். இக்கரகம் 'சக்திக்கரகம்' என அழைக்கப் பெறுதலையும், கருவறைவரை இக்கரகம் செல்லமுடியும் என்பதையும் காணுங்கால் இறையாகவே நீர் கருதப்

பெற்றமையை உணரமுடியும். அதே வேளையில் நீருக்குப் பதில் அரிசி அல்லது மணல் நிரப்பப்பெறும் கரகங்கள் உள் நுழைய முடியாதென்பதையும் உற்றுநோக்கிடுதல் வேண்டும். கரக நீரைப் புனித நீராகக் கருதும் மனநிலையைக் கரகப் பாடல்கள் சிலவும் காட்டுகின்றன.

பலரும் கூடிநின்று புனலாடும்போது இளம்பெண்கள் சிலர் பொன்னால் செய்யப்பெற்ற சங்கு, நண்டு, இறால், வலிய வாளைமீன் ஆகியவற்றை வையையாகிய நீரினுள் காணிக்கையாக்கி இறையைத் தொழுதனர் என்பதை நினைவுகூரும் தெ. பொ. மீ. ஆற்றினைத் தாயாக வழிபடும் பரிபாடலைச் சுட்டுவார்: அப்பாடலின் சிலவரிகளாகச்

"செங்குங்குமச் செழுஞ்சேறு
பங்கஞ் செய்யகில் பல பளிதம்
மறுகு படவறை புரையறை குழவியின்
அவியமர் அழலென அறைக்குநர்,
நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்திய லையில் விளை பொலிகென்பார்"

என்பன அமையும். பரிபாடல் சுட்டும் அம்பா ஆடல் என்பதும் இவன் குறித்தற்குரித்து. பாவை நோன்புடன் மேற்குறித்த வையையாடல் உடன்வைத்து எண்ணத்தகு வது. தைந்நீராடலே மார்கழி நீராட்டாக மாறிற்றென்பது அறிஞர்பலரின் கருத்தாம்.

நீரே வழிபடுபொருளாயினமையைப் பிறிதொரு சான்றும் காட்டும். காரைக்குடி அருகிலுள்ள காட்டம்மன் கோவிலில் கலயமொன்றில் நீர் நிரப்பப் பெற்று குறிப்பிட்ட நாட்கள் வைக்கப்பெறும். அதில் நீர் வற்றுமாயின் அவ்வாண்டு மழை குறைவு என்றும் நிறைந்தே காணப்படின் அவ்வாண்டு நல்ல மழை பெய்யும் என்னும் கருத்தும் நிலவுகின்றன. நீர்த்தெய்வம் அவ்வாண்டிற்குரிய மழை

பற்றிய செய்தியை இவ்வழியில் கூறுவதாக மக்கள் நம்புவதை உணர முடிகிறது. இதனையொட்டிய நம்பிக்கை யொன்றும் இவண் சுட்டப்பெற வேண்டியது தேவையா கிறது. ''நடுஜாமத்தில் கிணத்திலிருந்து நீர் இறைக்கக் கூடாது. கங்கை தூங்குவதாகவும் அவளை அந்நேரத்தில் எழுப்புவது பாவம் என்றும் கருதப்படுகிறது' என்பதே அது.[5]

இவ்வாறு நாட்டுப்புற, நகர்ப்புற மக்களிடையே சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்களுடன் நீரானது இணைக்கப் பெற்றுப்போற்றும் மரபு தொடர்ந்து கொண்டுள்ளது. அதே வேளையில் வழிபாட்டு நிலையில் அல்லாமல் சடங்கு நிலைகளில் நீர் பயன்படுத்தப்பெறுகிறது. இவைகளுக்குச் சில நம்பிக்கைகளே அடித்தளமாகும். அதனால் அதற்கேற்றுச் சடங்குச் செயற்பாடுகள் சமூகத்தில் நிகழ்கின்றன.

சடங்கு நிலைகளிலே:

பெருந்தெய்வக் கோயில்களிலும், சிற்றூர்ப்புறங்களிலும் நீரைக்கொண்டு சில சடங்குகள் நிகழ, அதன் தொடர்ச்சியாய் இல்லங்களிலும் பிறவிடங்களிலும் சடங்கு கள் சில நிகழ்வது இன்றைக்கு வழக்கமாக உள்ளது. நீரைத் தெய்வமாகப் பிரித்து வணங்கும் பார்வையிலிருந்து நீர் வழியில் தெய்வத்தை வணங்கும் நிலை இஃது எனலாம். 'பதினெட்டாம் பெருக்கு' தைநீராடல் போன்றவை நீர்வழி இறைவழிபடல் எனக் கருதுமாறு உருவாக்கப் பெற்றுள்ளன எனக்கருத இடமுண்டு.

குடமுழுக்குப் பெருவிழா என்பது இறைவனின் மாற்றுரு வாகக் கருதப்பெறும் கோபுரகலசத்தை நீராட்டல் ஆகும். இது பெருஞ்சாந்தி என்றும் 'கூறப்படும்

> ''கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி
> காணாதே போதியோ பூம்பாவாய்''

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் திருமொழியிலிருந்து இதனை அறியலாம். கும்பாபிஷேகம் என்பது குடும்பத்திலுள்ள நீரினால் அபிஷேகித்தல் என்று பொருள் படும்.[6] திருவிழா முடிவில் சுவாமிக்கு நடைபெறும் நீராட்டு உற்சவமே தீர்த்தவாரி என்பது தமிழ்ப் பேரகராதி புகலும் செய்தி.

இதைப்போன்று சிறு தெய்வங்கள் குடிகொண்ட ஆலயங்களில் 'சலந்திரட்டல்' என்ற பெயரின் கீழ் சடங்கொன்று நிகழ்ந்து வருகிறது. விரதம் பூண்டிருக்கும் குறிப்பிட்ட ஆள் ஏனையோருடன் மேளதாளத்துடன் சென்று நீர்நிலையிலிருந்து கலசமொன்றில் நீர்சேகரித்து வருதலே இச்சடங்கு. இந்த முறையில் சேகரித்து நீர்மட்டுமே இறையுருமீது அபிடேகப் பொருளாக ஊற்றப்பெறும். விழாக்கால நடப்பியல் இது. கோவில் வழிபட்டு முறைகளில் இவ்வாறு நீர்கொண்டு வழிபடும் சடங்கு வழிபடும் அனைத்திடங்களிலும் வேறுமுறையில் கையாளப்பெற்றது. இல்லத்தில் நிகழ்வுறும் பூசைகளின்போது நீர்கொண்டு படையல் பொருட்களையும் இறையுருக்களையும் வணங்குதலைக் காணமுடிகிறது. இறையின் மனம் வைத்து செய்யபெறும் தாரைவார்த்தல், ஆர்த்தி சுற்றல் போன்றவை கணக்கிலெடுக்கப்பெற வேண்டும். ஆரத்தி என்பதை நீராஞ்சனம் என்று பேரகராதி குறிப்பது குறிக்கத் தகுந்தது.

இல்லங்களில் நிகழ்வுறும் ஏனைய சடங்குகளிலும் நீருக்கு முதன்மையான இடமுண்டு. ஒருபெண் பெரியவளானதும் 'பூப்புனித நீராட்டுச் சடங்கு' நிகழ்வதையும் கிராமப்புறங்களில் 'சடங்குத் தண்ணி ஊத்தல்' என்று அஃது அழைக்கப் பெறுவதையும் காணமுடியும், சில கிராமங்

களில் குழந்தை பிறந்தபின் குறிப்பிட்ட நாள் கழித்து அவ்வூர்மண்ணை லேசாக நிறையநீரில் கலந்து கொடுப்பது வழக்காயுள்ளது. 'சேனைத் தண்ணி' ஊற்றல் என்ற பெயரால் இச்சடங்கு நிகழ்கிறது.

இறப்புச் சடங்குகளில் நீருக்குப் பெரும்பங்குண்டு. நீர் மாலை எடுத்தல், நீர்ப்படைக்காதை, நீராட்டல் போன்ற சில சொல்லாட்சிகள் இதனை விளக்கும். திதி கொடுக்கும் வழக்கம் நீர்நிலையில் நிகழ்த்தப்பெறுவதும், அது நீர்க்கடன் என வழங்கப்பெறுதலையும் காணுதல் வேண்டும். அஸ்தி எனப்படும் சாம்பல்கரைப்பும், எலும்புகளை நீரில்விடுதலும் இன்றும் சமூக நிகழ்வாக அமைந்துள்ளவை.

''யாவதஸ்தி சகங்காயாம்
தாவத் ஸ்வர்க்கே ஸதிஷ்டதி''

என்ற நூற்பா (சுலோகம்) கூறுவது; தீர்த்தோதிதமாகிய கங்கையில் இவ்வளவு காலம் மரணமுற்றவன் எலும்பு இருக்குமோ அவ்வளவு காலம் அவன் சுவர்க்கத்திலிருப் பதாகப் பொருள்.[7] இறந்தாரை நினைந்தும், இறையை ஏத்தியும் உணவு உண்ணும்முன் நீர்கொண்டு இலையின் ஓரங்களில் 'நீர்விழாவுதல்' பல குடும்பங்களில் மேற் கொள்ளப்பெறும் வழக்கமாகும். இதைப்போன்று நீரானது இறையுடன் தொடர்புடைய, புனிதப்பொருள் என்ற அடிப் படையில் நாட்டுப்புறங்களிலும் சில வழக்காறுகள் காணக் கிடக்கின்றன. சான்றாக, 'முதன்முதலில் வயலில் விதை விதைக்கும் போது குடும்பத்தார் அனைவரும் விதைகளை நீருடன்சேர்த்து வயலில் தெளிப்பர்'[8], என்பதைச் சுட்டலாம், இத்தகு சடங்குகளினால் நீரைப்பழிப்பது பாவமென்றும் பழித்தவர் நீரின்றி மாய்வர் என்ற நம்பிக்கையும் 'தவிக்கிற வாய்க்குத் தண்ணீர் தருவது புண்ணியமென்ற' மனநிலையும் உருவானதை உணருதல் வேண்டும். மழையில்லாக்

காலத்தே மழை பெய்வது போலவும் ஆடிஆடிப் பாடும் வழக்கம் சில ஊர்களில் காணப் பெறுகின்றதென்றும் இதனால் மனங்கனிந்து மழையினைத் தெய்வம் தருமென்று நம்புகின்றரென்று கூறுவர். இதனைப் பாவனைச் சடங்கு என்பார் இ. முத்தையா.[9] இவ்வாறு சடங்குகளிலும் நீரானது தமிழர் வழக்காற்றில் இடம் பெற்றுள்ளது.

பொது நிகழ்வாக:

புனல் மிகுந்துழி மனங்களித்து ஆடும்போக்கு சங்கப் பாக்கள் சுட்டும் புனலாட்டுப் பழக்கமாகும். நீர்விழவு, துறைகொள் விழவு, புனல் விழவு, பொங்குபுனல் விழவு போன்ற சொல்லாட்சிகள் இங்கே கூறத்தகுந்தவை. வழிபாடு, சடங்கு இவற்றிலிருந்து மாறிய போக்காக இதனைக் கருத முடியும். ஏனெனில் புனலாட்டு என்பது புனலில் விளையாடுதல் என்று பொருளுடையது. கடலாடு காதை என்பது சிலம்புத் தலைப்பு. 'வெள்ளந் தருமிப் புணல் கள்ளொடு காமங் கலந்து கரைவிளங்கும்' என்பது போன்ற பரிபாட்டு வரிகள் மனமகிழ்வு கருதி நீர்நிலைகளில் மக்கள் ஆடி மகிழ்ந்ததை விளக்கும்.

தண்ணீரை மருந்தாகவும் கருதும்போக்கு பொதுவானது. மந்திரித்த தண்ணீரை வழங்குதல் என்பது இந்து சமயத்தாரிடம் மட்டுமின்றி, கிறித்துவ, முகமதிய சமயத்தாரிடமும் காணப்பெறுகிறது. தீர்த்தங்கள் எனப்பெறும் புனித நீர்களன்றி மந்திரித்த நீரென்ற பொதுவழக்கில் இன்று பலவிடங்களில் நீரே மருந்தாகும் தன்மையைப் பார்க்க முடிகிறது. இத்தன்மை கருதியும் தீர்த்தயாத்திரை செல்பவர்கள் உண்டென்ப. ஏனெனில் வழிபாட்டு நோக்கின்றி மருத்துவக் கண்ணோட்டத்துடன் நீராடுபவர் பலருண்டு.

மாந்த இனம் நீர்ப்பரப்பை நம்பி வாழ்வதால் ஆரம்ப காலத்தில் நதிதீரங்களிலே தம் வாழ்வைத் தொடங்கிய தென்பது பலரும் புகன்ற செய்தி. சிந்துநதி நாகரிகம் கெடிலநதிக்கரை நாகரிகம் என வழங்குவது ஈண்டு குறிக்கற் பாலது. நதிதீரங்களின் பெயர்கள் பெண்களுக்கு அமைந் திருப்பது அந்நதிகள் போல வளம்பலி தருதல் வேண்டும் என்ற நம்பிக்கையால்தாம். தண்ணீரென்பது அழிவைத்தருவ தில்லை மாற்றாக மாற்றந்தரவல்லது என்ற நம்பிக்கையில் தான் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போவோர் தடங்கலுக்கு உள்ளானால் வீட்டிற்குத் திரும்பி ஒரு குவளை நீரருந்துதல் வேண்டுமென்ற செயல் கூறப்பெறுகிறது. மழை வேண்டியோ, மழைகண்டு மகிழ்ந்தோ பாடல்கள் காணப் பெறுவதைப் போல மழையால்யழிவு நேரல் பற்றிய பாடல்கள் மிகுந்து காணப்பெறாமை நீரின்மேல் மக்கள் கொண்ட மதிப்புண்மையைப் பறைசாற்றும்.

மேற்குறித்த பலசெய்திகளால் காலந்தோறும் தமிழர் கள் 'நீர்'மீது கொண்டிருந்த பார்வை புலனாகின்றது. சங்கப் பாடல்களில் நீர்ப்பெருக்கு மக்களுக்கு மகிழ் வூட்டியமை பற்றிய செய்திகளே காணக்கிடக்கின்றன. திருக்குறள் இறைமைக்கு அடுத்த நிலையில் 'வனம் வறக்குமேல் வானோர்க்கும் சிறப்பொரு பூசனை செல்லாது' எனக்கூறி அதன் பெருமையைப் பாடிற்றே அல்லாமல் நீரையே தெய்வமெனப் புகலவில்லை. சிலப்பதிகார மங்கல வாழ்த்தும் இயற்கையை ஏத்தும் போக்கில் மாமழையைப் போற்றிடக் காணமுடிகிறது.

தங்கள் வாழ்வுடன் நேரடியாகத் தொடர்புடைய தாகையால் நாட்டுப்புற மக்கள் 'மாரி'யை வணங்கும் போக்கும், நீரினைப்போற்றும் பல பாங்குகளும் உருவாகின. வைதீக நெறிகளின் கூறுகள் சில நீரைத் தெய்வக்கூறு களுடைய பொருளாகக் காட்டின, இரண்டையும் பெற்ற

தமிழர் சடங்குகள் பலவற்றில் நீருக்கு முதன்மை தந்தனர். வழக்கில் பொதுநிலையிலும் நீருக்கு உரிய நிலை உணரப் பெற்றது. மாரியம்மன் இன்றைக்கு அம்மைநோய் நீக்குபவ ளாகக் கருதப்பெறும் அளவிற்கு மழைத் தெய்வமாகக் கருதப்பெறவில்லை என்பது உண்மை, இதுபோன்ற பல கூறுகளைக் கணக்கிலெடுத்துப் பார்க்குங்கால் நீர் தனித்த நிலையில் வணங்கப்பெறும் தன்மையைப் பெற்றிருக்க வில்லை என்பதை நடப்பியலும் இலக்கியங்களும் சுட்டக் காணமுடிகிறது. அதேநேரம் நம்பிக்கையின் அடிப்படையில் சிற்றூர்களிலும், தத்துவங்களின் அடிப்படையில் பிறபகுதி களிலும் நீரானது வழிபடுபொருளாக ஏற்றங்கண்டது. குறிப்பாகத் தமிழரிடையே சடங்குநிலைகளிலே நீருக்கு ஒரு சிறப்பிடம் தரப்பெற்றது. நீர் வாழ்விற்குரிய இன்றி யமையாப் பொருள் என்பது தெளிவாக உணரப்பெற்ற போதும், அதனைப்பெறக் காவல் தெய்வங்களையும் பிற வற்றையும் வணங்கிய நிலையே தொடக்ககாலத்தது. இந் நிலையே இன்றும் பரவலாக இடம் பெற்றுள்ளது. வங்கக் கடல்கடைந்த மாதவனையும், மாலறிய நான்முகனும் காணா மலையினையும் பாவைப் பாடல்களும் மழை வேண்டுமென்று பேரிறைவர்களை வேண்டுவன அன்றோ! நாட்டுப்புற நம்பிக்கைகளும், 'வருணசெபம்' போன்ற வைதீகக் கருத்துகளும் நீரில் இறைமைச் சாயலைக் கலந்தன. எனினும் சடங்குடனான வழிபடு பொருளாகச் சிறப்பிக்கப் பெற்றதேயன்றி நீர் தனித்தெய்வமாக்கப் பெற வில்லை. எனவே, பெருமையுறு வழிபடுபொருளாக நீர் தமிழரிடையே காணப்பெறுதலைக் கண்டுணர முடிகிறது.

தொகுப்பாகச் சில:

1. நீர் என்பது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பருகவும், உணவிற்காகவும் பயன்படும் நீர்பற்றிய

பார்வைகள் காலத்திற்குக் காலம் மாறுபட்டமைந் துள்ளன. அதற்கேற்பச் சமூகத்தில் நிகழ்வுகள் நடந்துள.

2. இயற்கையை வழிபட்ட காலத்தில் அச்சம், நன்றி யுணர்வு ஆகியவற்றால் நீர் உள்ளிட்ட ஐந்தும் பஞ்ச பூதங்கள் என அழைக்கப்பெற்று வணங்கப் பெற்றன. நீரைப் பொறுத்தமட்டில் அச்ச வழிபாடு குறைவு.

3. வழிபாட்டு நிலையில் நீருக்குரிய தெய்வங்கள் சில உண்டாயின. தெய்வங்களின் ஒரு கூறாக நீர் கருதப் பெற்று, சில திருவிழாக்கள் உருவாயின. இதனால் நீர் நிலைகளில் வழிபாடுகள் பரிணமித்தன.

4. நாட்டுப்புறத்தில் நீரே வணங்கப்பெற்றது. மாரியம்மன் வழிபாடு மழைத் தெய்வ வழிபாடாகவே நிகழ்வதும், கரகமெடுத்தலில் நீரே வழிபடு பொருளாவதும் நடை முறையில் காணப்பெறுபவை. இப்போக்கு ஏனைய அம்மன் கோவில்களிலும் சில மாற்றங்களுடன் நிகழ் கிறது.

5. வழிபாடாக அல்லாமல் சடங்குகளில் நீருக்குப் பங்குண்டு. குடமுழுக்கு, சலந்திரட்டல் போன்ற கோயிற் சடங்கு களிலும், ஆரத்தி, நீர்க்கடன், பூப்புநீர்ச் சடங்கு, சாம்பல் கரைப்பு போன்ற சடங்குகளிலும் நீர் முதன்மை பெறுகிறது. நாட்டுப்புற மக்களிடையே இதனால் பல நம்பிக்கைகள் கருக்கொண்டு அமைந்துள.

6. இலக்கியங்கள் வாயிலாகப் பலநோன்புகளுடன் நீர் நிலைகள் தொடர்புபட்டிருப்பதை உணர முடிகிறது. தைந்நீராடல், மார்கழி நீராடல் போன்றவை சான்றுகள்.

7. புனல் பெருகுங்கால் உல்லாசமாயிருத்தல் பொதுநிகழ் வாகும். மந்திரிக்கப்பெற்ற நீர், சகுனங்கள் போன்ற வற்றில் நீருக்குரிய மதிப்பீடு, நதிதீர வாழ்வு போன்றவை சமயக்கூறுகளுக்கு அப்பாலான நிகழ்வுக ளாகும்.

8. இலக்கியங்களில் மழை வேண்டலும், மழை பெய்துழி மகிழ்தலும் பரவலாகக் காணக்கிடக்கின்றன. மழை மிகுதியாகி அழிவு நேர்ந்தமைபற்றி மிகுதியான இலக்கியங்கள் இல்லை. எனவே அச்சங்கலந்த வழிபாடு என்பதைவிட நீரானது நன்றியுணர்வுடனேயே மிகுதியும் பார்க்கப் பெறுகிறது.

9. தனித்ததொரு கடவுளாக நீர் கருதப்பெறவில்லை. ஆயினும் நீர் போற்றுதலுக்குரிய வழிபடுபொருளாக இன்றும் ஏற்கப்பட்டிருப்பதை நடப்பியல்கள் சுட்டு கின்றன.

1. க.ப. அறவாணன், பாம்பு வழிபாடு, ப. 20.
2. புலவர் தீரன், கதையுரை, மதுரை 10—11—1987.
3. செந்துறைமுத்து, திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும், ப. 100.
4. பரணீதரன், காசியாத்திரை, ப. 18.
5. பி. நாராயணன், நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 70.
6. செந்துறைமுத்து, நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 66.
7. அபிதான சிந்தாமணி.
8. பி. நாராயணன், நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 119.
9. இ. முத்தையா, கலந்துரையாடல், தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், நாள் : 07—02—90.

தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

திருவுருவு

சமுதாயத்தின் ஒவ்வொரு வளர்ச்சிநிலைக்கும் சரியான தொரு பின்புலம் இருப்பதை வரலாறுகளும் பிறவும் எடுத்துக் காட்டுகின்றன. இலக்கியங்கள் சமுதாயத்தைப் பாதிப்பதையும் சமுதாயம் இலக்கியத்தைப் பாதிப்பதையும் நேரடியாகவே உணரமுடிகிறது. எங்கோ ஒரு மூலையில் தோன்றும் ஒரு சிறு பொறி, சமூகத்தின் பிற பரப்புகளிலும் பரவுவதைப் பல சான்றுகள் மெய்ப்பித்திருக்கின்றன. அவ்வழியில் இறைக்கு ஏற்றப்பெற்ற உருவுகள் பல

சமுதாயத்தின் பிறபகுதிகளிலும் மாற்றங்களை உண்டாக்கியுள்ளன. காலவாரியாகக் காணும்போது இம்மாற்றங்கள் தெளிவாகப் புலனாகும் என்பதால் பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்த மரபுகளை எண்ணுவதும் இன்றைய நடைமுறை மரபுகளை உடன்வைத்துக் காண்பதும் தேவையாகின்றன. 'திருவுருவங்கள்' உருவான விதங்களையும், அவற்றிற்கான பின்புலங்களையும் காணப்புகுதலே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இன்றைக்கும் இறைவர்களுக்குரிய திருவுருவங்கள் பற்றிப் போதிய தெளிவான கருத்துகளில்லை. ஆனாலும் இறைவர்களுக்கான திருப்படிவங்கள் நாள்தோறும் பல்கிப்பெருவ்து நடப்பியலாகும்.

> **''இன்னவுரு இன்னநிறம் என்று அறிவதோர் அரிது''**

என ஆளுடையபிள்ளை பாடியதும்,

> **''வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்**
> **நூறு நூறாயிரம் இயல்பினதாகி''**

என மணிவாசகர் புகன்றதும் இறையின் உருவுகள் பற்றிய சிந்தனைகளைக் கிளறுபவை.

இறையுண்டு – உருவில்லை:

பண்டைய தமிழர் மரபு இறையை ஏற்றுக்கொண்டது. ஆனால் இறைக்கு இஃதே உருவென்று சுட்டவில்லை. இதற்குச் தொல்காப்பியத்தைச் சான்றாக்கலாம். சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்ற சொற்கள் குறிக்கப் பெறுகின்றன. ஆனால் தொல்காப்பியர் எவ்விடத்தும் இறைக்குரிய உருவ அமைப்பைக் கூறவில்லை. வேந்தன் என்பவன் யாரென்பதே இன்னும் தீர்க்கப்பெறவில்லை என்பதும், ஏனைய பெயர்களுக்குரியவர்களாகக் கூறப் பெறும் இறைவர்களும் பொருத்தமுடையவர்கள்தானா என்பதும் உடன் வைத்து எண்ணத்தகுவன. தொல்காப்பியம்

சுட்டும் பிறிதொரு தெய்வக் குறிப்பு நடுகல் வழிபாடு. இங்கும் கல் ஒன்று நடப்பெற்ற செய்தியுண்டே தவிர உருவம் இத்தகையத்தாயிருக்க வேண்டுமென்ற குறிப்பில்லை. 'கந்தழி' பற்றியதும் அவ்வாறே.

''ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல் லுகுத்துப் பரவுங் கடவுளுமிலவே''

என்பது மாங்குடி கிழாரின் பாடல் (புறம் 335:9–12). நடுகல் வழிபாடு பெற்றிருந்த சிறப்பை இச் சங்கப்பாடல் சுட்டு கிறது. அதைப் போன்றே மரங்களின் பயன்பாடும் கருதப் பெறவேண்டும். ''எளிய வாழ்க்கையினர் மரத்து நிழல் களில் கூடி இறைவனை வழிபட்டனர். ஆதிமுறை அதுவேயாம் என்பதற்குச் சான்றாக ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு மரம் இறைவனுக்குச் சிறந்ததாகப் பேசப்படு கிறது. திருநெல்வேலியில் மூங்கில்வனமும், மதுரையில் கடம்பவனமும், சிதம்பரத்தில் தில்லைவனமும், மயிலையில் புன்னை வனமும் ஆதியில் வழிபடும் இடங்களாயிருந்தன''[1] என்ற குறிப்பும் கருதத்தக்கது.

உருவுகள் உருவாதல்:

பிற்காலத்தில் தாம் வணங்கும் இறைவர்கட்குத் தனித் தனி 'உருவுகளை' உருவாக்கவேண்டுமென்ற மனப்போக்கு உருவானது. இதனால் மனிதர்களைப் போன்ற உருவ அமைப்பில் – சில சிறப்புக் கூறுகளையும் உடன் இணைத்த - புதிய உருவுகள் ஆக்கப்பெற்றன. மனிதர்களுக்கிருப்பதைப் போன்ற குண நலன்களும், உறவுமுறைகளும் அந்த இறைவர்களின் மேலேற்றப் பெற்றன. ''மக்கள் கடவுளுக்குத் தங்கள் பழைய வடிவைக் கற்பித்தல் இயற்கை. மாடு, கடவுளை வழிபடுவதனால் தன்னினத்தின் பெரியதொன்றாக

அவரை நினைக்கும் என்றார் சுவாமி விவேகானந்தர்''[2] எனவே தொடக்க நிலையில் மனிதர்களைப் போன்ற உருவுகளில் இறை 'உருவுகள்' அமைந்ததை உணர முடிகிறது. நடுகற்களில் தொடக்க நிலையில் 'உருவு' பெற்றிருக்கவில்லை. பின்னரே பீடும் பிறவும் பொறிக்கப் பெற்றன என்பதைச் சங்கப்பாக்கள் சுட்டுகின்றன. உருவ மற்ற கல் என்பது மாறி மனித 'உருவு' அக்கல்லில் ஏற்றப் பெற்றதை இதனாலறிய முடிகிறது. இறைக்கும் உருவுகள் உருவாகின. எனினும் மனிதர்கட்கும் இறைவர்கட்கும் வேறுபாடு சுட்டப்பெற வேண்டுமென்ற இடர்ப்பாடும் உடன் எழுந்தது. மனிதர்களிடம் காணப்பெறாத சில சிறப்புக் கூறுகளை இறையின் உருவுகளில் இணைத்தனர். நாலு, ஆறு என முகங்கள் அமைவதும், நான்கு அல்லது அதற்கும் மேலாகக் கரங்கள் அமைவதும், வல்லமைசேர் கருவிகளைச் சுமப்பதாகச் சில கூறுகள் அமைவதும் எண்ணத் தகுவன. ஒட்டக்கூத்தர் தம் விக்கிரம சோழனுலாவில் சோழமன்னன் உலாவரும்போது அவனது உருவப் பொலி வினைக் கண்ட பொதுமகளிர் முருகனோ என முதலில் ஐயுறுவதாகக் குறிப்பர். அரசனுக்கு இருகைகள்தாம் உள்ளன என்பதைக் கண்டு இவன் முருகன் அல்லன் எனத் தெளிகின்றனராம் அந்நங்கையர்.

'' .... கையிரண்டே
ஆனபோது அந்த முருகவேள் அல்லன் இவன்'' (216-21)

என்ற பாடல் வரிகள் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறுப்பு வேறுபாட்டைச் சுட்டும்.

உருவுகளுக்கான காரணங்கள்:

மனித உடலமைப்பும் பிற புதிய சிறப்புக் கூறுகளும் ஒன்றிணைந்த புதிய திருவுருவுகள் இறைவர்களுக்காக - இறைவர்களாக - உருப்பெற்றமையைக் காலவளர்ச்சியின்

போக்குகளிலிருந்து உணரமுடிகிறது. ''இந்து சமயத்தைச் சார்ந்த கடவுள் திருவுருவங்கள் பல கைகள் கொண்டன வாக இருப்பது இந்தியச் சிற்பக் கலையின் ஒரு குறை என வி.ஏ. ஸ்மித் என்ற வரலாற்று வல்லுநர் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால் இதைக் குறையாகப் பலர் கருதுவதில்லை. பல கைகள் இருப்பது பல குணங் களைக் குறிப்பதாக டி.ஏ. கோபிநாதராவ் போன்றோர் கொள்கின்றனர். பல்லவர்காலச் சிற்பங்கள் பொதுவாக இரு கைகளுடன்தான் உருவாக்கப்பட்டன. கடவுளின் திருவுருவங்களை மனிதனின்றும் வேறாகக் காண்பிக்கவும், பேராற்றல் படைத்தவை என்பதை உணர்த்தவும் அவற் றிற்கு அதிக அளவில் கைகள் அமைக்கப்பட்டன''[3] என்ற குறிப்பு இங்கு நோக்கத்தக்கது. இறைவர்களின் பேருருவு களுக்கான காரணம் இதனால் புலனாகும். இவையனைத்தும் இதிகாசம், புராணம் போன்ற நூல்கள் சுட்டிய வர்ணனை, சித்தாந்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு உருவாகின. இதற்கிடையே பழங்காலத்தில் நினைவுச் சின்னங்களைக் கோவிலாக்கும் போக்கும் நிலவிற்று. குறிப்பாக அரசமரபினர், அவருடனொத்தார் போன்றார் தம் கல்லறைகளின் மேல் இறையுருவுகள் எழுந்தருளும் போக்குகள் காணப்பெற்றன.

நினைவுச்சின்னங்களின் பிற்கால வளர்ச்சியே பள்ளிப் படைக் கோவில்கள் என்பதையும் பெருந்தெய்வ வழிபாட் டிற்கு இஃதே அடிப்படை என்பதையும் பலரும் சுட்டு கின்றனர். ஆனால் எந்தவிடத்தும் உருவுகளுக்கான தத்துவச் சிந்தனை இடம்பெறவில்லை. இதனால் தத்துவச் சிந்தனையை அடியொற்றிய உருவுகள் பழங்காலத்தில் இல்லை என்பது தெளிவுபடுகிறது. இதனை வலுப்ப தடுத்தச் ''சிந்து மக்கள் லிங்கத்தையும் மற்ற கடவுள் சின்னங்களையும் விக்கிரகங்களையும் வழிபட்டு வந்தாலும்

அவர்களிடையே தத்துவச் சிந்தனை இருந்ததாகத் தெரிய வில்லை''[4] என்ற இராகுல சாங்கிருத்தியாயரின் கூற்று உதவும்.

பழங்காலத்தில் உருவம் சுட்டப்பெறாத கோள்களுக்கு இன்று உருவுகள் ஆக்கப்பெற்றுக் கோவில்களில் அமைத் திருப்பதை உடன்வைத்து எண்ணுதல் தகும். 'பாம்பு இரண்டு' என வருணிக்கப்பெற்ற இராகு, கேது இரண் டிற்கும் மனிதவுருவு தந்திருப்பது ஒரு பதச்சோறு. ஏனெனில், தத்துவம், சித்தாந்தம் போன்ற கூறுபாடுகளுக் கேற்ப உருவுகள் மாறுகின்றன. இதனை ''ரிக் வேதத்தில் ஆண்பாலான பிரம்மா ஒரு சாதாரண தேவர் மட்டுமே! ஆனால் வாணிகம் முக்கியத்துவம் அடைந்த காலத்தில் இயற்றப்பட்ட உபநிஷத்துக்களில் பிரம்மா (ஆண்-பெண் பாலற்றது) தேவர்களுக்கெல்லாம் அதிபதியாகவும், ஓர் இணையற்ற உருவமற்ற சக்தியாகவும் கருதப்பட்டது''[5] என்ற கூற்றாலறியலாம். இதனால் சித்தாந்தக் கோட்பாடு களை வைத்து உருவுகள் பல்திறத்தனவாக மாறுவதை உணரலாம். இதற்குச் சங்கப் பாடல்களையும் பிறகெழுந்த இலக்கிய வகைகளையும் காணவேண்டியுளது.

'வெற்றிவெல்போர்க் கொற்றவைசிறுவ'

'மலைமகள் மகனே'

'இழையணி சிறப்பிற் பழையோள்குழவி'

என்றெல்லாம் முருகனை விளிக்கும் சங்கப்பாடல்களில் முருகன் ஆறுமுகங்கொண்ட உருவத்தானாக விவரிக்கப் பெற்று விரிந்தநிலையில் காட்டப்பெறவில்லை. 'வேலன் அல்லது முருகன் பிற்காலத்திலே கந்தன், சுப்பிரமணியன், ஆறுமுகன் என்றெல்லாம் பெயர் பெற்றான். ஆரியரது தந்தைவழி நாகரிகம் தமிழகத்திலே கலந்து கலாச்சாரப்

பிணைப்பு ஏற்பட்ட காலத்திலேயே இந்த உருமாற்றம் ஏற்பட்டது என்பது ஆய்வாளர் முடிவு'.[6] இதனால் ஓரிறைவன் காலந்தோறும் பல்வேறு உருவுகளைப் பெற்றிலங்கச் சமயஞ்சார்ந்த தத்துவ விளக்கங்களே காரணமாவதை உணரமுடிகிறது. சிவதுர்க்கை, விட்டுணுதுர்க்கை, தலைமட்டும் கொண்ட ரேணுகையம்மன் போன்ற உருவுகள் சமயக்கதைகளின் பின்புலத்தில் உருவானவை.

மனவிழைவும் புது உருவும்:

மனித மனத்தின் விழைவுகளுக்கேற்ப இறையின் திருவுருவுகள் பல்திறத்தனவாக மாறின. விநாயகரின் துதிக்கை, பெரும்பாலும் இடப்பக்கம் வளைந்திருக்க, அதிலிருந்து மாறுபட்டு வடப்பக்கம் துதிக்கை வளைந்திருப்பதாகப் புதுவுருவு உண்டானது. தாமரைப் பூவில் அமர்ந்திருந்த கோலத்தில் இருந்த இலக்குமி, சரசுவதி ஆகியோர் நிற்கும் கோலத்திலும் எழுந்தருளினர். திருமாலின் நின்ற, கிடந்த, அமர்ந்த உருவங்களும்கருதுதற்குரியது. சக்தியாகிய அம்மனும் சிவனாகிய அப்பனும் ஒன்று என்பதைக் கூற வந்த சைவசமயத்தாரின் கூற்றை உருவவழியினினும் மெய்ப்பிக்க உருவானதொரு உருவமே அம்மையப்பனாகக் காட்சிதரும் உமையொரு பாகன் திருக்கோலம். சைவமும் வைணவமும் ஒன்றெனக் கூறப்போந்த இந்துமத ஒற்றுமைக் காரர்கள் சிவனையும் திருமாலையும் 'ஈருடல் ஓருருவு'க்குள் கொணரமுனைந்தனர். சங்கரநாராயணன் உருவு உருவானது இவ்வாறே. இவ்வாறு ஒருருவில் இரண்டு கடவுளர் இருப்பதைப் பல சித்தாந்தங்களிலும் கூறிவந்துள்ளனர். திருமாலின் 'உந்திக்கமலத்தில்' பிரும்மாவும் திருமார்பில் இலக்குமியும் இடம்பெற்றுள்ள திருக்கோலங்கள் இத்தகையவை. வேல்தாங்கிய வேலவன் தண்டாயுதபாணியாகக் காட்சிதருவது குறித்தற்குரியது. ஒரே விக்கிரகத்தில்

நான்கு இறையை உள்ளடக்கிய புதிய உருவு ஒன்று புதுவை, பாரதி வீதியிலுள்ள காமாட்சியம்மன் கோலிவில் உள்ளது. பிரகாரத்தில் உள்ள விநாயகர் சன்னதியின் முகப்பில் விநாயகருக்கு இடதுபுறம் இவ்வுருவு அமைக்கப் பெற்றுள்ளது. வடபுறத்தில் சிவலிங்கத் திருவுரு 'கோமதிசுவார்' என்ற பெயருடன் இலங்குகிறது. இடது புறத்தில் ஐந்துதலையுடன் கூடிய பாம்புத் தலையும், பெண்ணின் மார்பகங்களும், எஞ்சிய உடற்பகுதி பாம் புருவம் கொண்டும் அவ்வுருவு அமைந்துள்ளது. மேலுள்ள இரண்டு கரங்கள் சங்கும் சக்கரமும் ஏந்தியிருக்க அதற் கடுத்த கரங்கள் மானும் பிறவும் ஏந்தியிருக்க பிறிதொரு கரமோ 'அபயக் கரமாக'க் கிழ்நோக்கி விரிந்திருக்க மிகமிகப் புதிய உருவமாகவே இத்திருவு காணப்பெறுகிறது. அம்மன், சிவன், விட்டுணு, நாகதேவன் ஆகியோருடைய கூட்டுருவ மாக எழுந்தருளியிருக்கும் இந்த விக்கிரகத்தைக் 'கோமதிசுவரி' என்று அழைப்பதாக அக்கோவிலின் அர்ச்சகர் கூறினார்.[7] இதற்கென்று தனியே ஒரு புராணக் கதை இருப்பதாகவும் அறிய முடிந்தது. பஞ்சமுக விநாயகர், பல கரங்கள் கொண்ட அம்மன் உருவுகள், இலிங்கம் ஒன்றில் பல இலிங்க உருவுகள், கத்தி, கேடயம் இவற்றுடனான விநாயகர், விலங்கு உறுப்புகளுடன் கூடிய இறையுருவுகள் எனப் பலவிதமான புதிய உருவுகள் இன்று காணப்பெறுகின்றன.

உருவும் பிறவும்:

சமயரீதியாக மட்டும் இம்மாற்றம் நிறைவுறவில்லை. மாறாக, சமுதாயத்தின் பல விளைவுகளுக்கு 'உருவுகள்' காரணமாகின்றன. பொதுவாகக் கலைகளின் பிறப்பிற்குக் காரணம் கூறும்போது,

தொன்மம் ——→ சடங்குகள் ——→ கலைகள்

என்ற வாய்பாட்டைக் கூறுவர். கலைகள் யாவும் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவை என்பதையும் கலைகளினால் சமுதாயத்தில் பல பாதிப்புகள் உண்டாகின்றன என்பதையும் கவனித்தல் வேண்டும். தொடக்கத்தில் தொன்மம் சுட்டிய பல கூறுகள் சடங்குகளாகவே நிகழ்ந்தன. இன்றும் பிள்ளையார் சதுர்த்தி, அனுமன் செயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்றவை திருநாள்களாகவும் சடங்கு களுடனான நாள்களாகவும் நிகழ்கின்றன. சடங்குநிலை களில் ஆண்டவனின் 'உருவுகள்' திருக்கோலங்களாகப் புனையப்பெற்றன. இறைவனும் பிறரும் ஏற்ற தொன்மக் கூறுகள் மனிதர்களுக்கு ஏற்றப்பெறும்போது கலைவடிவு பிறக்கிறது. இதற்குச் 'சூரசம்மாரம்' நல்ல எடுத்துக் காட்டாகும். சூரனைச் சிவன் மகன் வென்றதாக வரும் தத்துவக்கூறு முதலில் தொன்மக்கூறாக இலக்கியங்களில் தோற்றங்கொண்டது. இதனை ஆண்டிற்கொருமுறை குறிப்பிட்ட நாளில் சடங்காக்கி விழாவாக்கினர். சூரசம்மார விழா என்ற பெயரில் முருகன் ஆலயங்களில் முருகன் திருவுரு அலங்கரிக்கப்படுவதும், சூரசம்மாரம் பொம்மைகள் உருவுகள் ஆக்கப்பெறுவதும் நடைமுறை. இதற்கப்பால் (புதுவை போன்ற) சில இடங்களில் முருகன் தரப்பாகச் சிலரும், சூரர் தரப்பாகச் சிலரும் வேடம் புனைந்தும், வேல், ஈட்டி போன்றவற்றைத் தாங்கியும், பாடல்பாடியும், வலம்வந்தும் நிற்பதைக் காணமுடிகிறது. வேடப்புனைவும் ஆடலும் பாடலும் இணையும்போது கலையாக அது மாறுவது இயல்பானது. காமன் பண்டிகையில் வேடப் புனைவுடன் இரு காட்சியாக ஆடுவதும், பிறவும் சான்றுகள். கலை வடிவுகளில் இருவகையை இவண் சுட்டுதல் தகும். வேடந்தாங்கியாடுதல், வேடப்புனைவின்றி ஆடுதல் என இருவகையாகக் கலைவடிவுகள் அமைவதைச் சிலம்பு சுட்டும், மாதவி பல்லுருத்தாங்கியாடிய பதினோராடல்

களும் இறைவர்கள் ஆடிய ஆட்டங்களே. மாதரி, ஐயை போன்ற ஆயர்மடந்தையர் குரவைக் கூத்தாடுங்கால் வேடப் புனைவு இல்லை. இரண்டும் இறையை ஏத்தும் கலை வடிவுகள்தாம். இதனால், நூல்கள் கூறிய தொன்மக் கூறுகள் இங்கே சடங்கு வழியாகக் கலையுருவங்களாவதை உணரமுடிகிறது. இதனால் மனித சமூகத்தின் கலைவடிவு களுக்குத் தொன்மங்கள் காரணமாகின்றன என்பதும், அத் தொன்மம் சுட்டிய 'உருவுகள்' சமூகத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளன என்பதும் பெறப்படும்.

இரண்டுவிதமான கருத்தோட்டங்கள் நிலவுகின்ற போக்கை இவண் சுட்டுவது தகுவது. இறைவனின் திரு விளையாடல்களை முதலில் மனிதர்கள் செய்துகாட்டித் திருவிழாவாகக் கொண்டாடினர். பிறகே மனிதர்களுக்குப் பதில் பாவைகளும், சடங்குநிலைகளில் சில குறியீடுகளும் இடம்பெற்றன என்பது ஒரு சாரார் கருத்து. இறைவர் களாடிய நடனங்களையே மாதவி போன்றோர் ஆடிநின்ற இலக்கியச் சான்றுகளை இக்கருத்திற்கு அரணாக்கிக் காட்டு வர். பிறிதொரு சாரார் வேடப்புனைவுடனோ, புனைவு களின்றியோ மனிதர்கள் பங்கு பெறுதல் இடம்பெறாத நிலையில் இறைவர்களின் திருவிளையாடல்களைச் சடங்காக மேற்கொண்ட சூழலை முதலாவது என்று கருதுகின்றனர். இதன்பிறகே சடங்கு வழக்காறுகளைச் செய்துகாட்டல் என்பது நடைமுறைக்கு வந்திருக்கவேண்டும் என்று இவர்கள் கருதுவர். எனினும் திருக்கோவில்களின் அன்றாட நடை முறைகள், திருவிழாக்கள், பங்குப்பெறுவோரின் மன வியல்புகள், இன்னபிறவற்றை உற்றுநோக்குங்கால் பல நிகழ்வுகள் தொன்மவழிச் சடங்குகளாகவே இடம் பெற்றிருப்பதை உணரமுடிகிறது. பல நிகழ்வுகள் 'கலை' யாவதில்லை என்பதையும் உடன்வைத்துக் காணுதல் வேண்டும். நூல்கள் கூறிய தொன்மக்கூறுகள் சடங்குகளாக

உருமாறின. அவற்றுள் பல மனித மன விழைவுகளால் கலை வடிவு பெற்றிருக்கின்றன எனக் கொள்ளுவதே பொருந்துவதாக அமைகின்றது.

சமூகம் பெற்ற பிற:

கலைகளைப் பெற்ற சமூகம், வேறுபலவற்றையும் 'உருவுகள்' காரணமாகப் பெற்றிருக்கின்றது. தொன்மங்களின்அகலநீளத்திற்கேற்ப உருவுகள் பெருகின. முன்னர்ச் சுட்டியதுபோல உருமாற்றம் மட்டுமின்றி ஒரே இறைக்குப் பலவுருவுகள் பரிணமித்தன. செல்வத்திற்குரியவளாகக் கருதப்பெறும் இலக்குமி ஒருத்தியே. ஆனால் மனித மனத்தின் சார்புநிலை விளக்கங்களினால் 'அட்டலக்குமி' என எட்டு உருவங்களாக அத் திருமகள் உருவாகியமை கருதுதற்குரியது. முருகனைப் பாலமுருகன், சோமாஸ்கந்தன், வேல்முருகன், வேலன், வேடன். விருத்தன் எனப் பல்வுருவுகளில் படைத்திருப்பதையும் காணலாம்.

மரம், பாம்பு இவற்றை வணங்கியவர்கள் தெய்வங்களையும் இணைத்து புத்துழாய் மாரியம்மன், வேம்பு மாரியம்மன் எனக் கூட்டாக வணங்குவதையும் கருதுதல் தகும். மரங்களின் அடியில் வைக்கப்பெற்றுள்ள கல் நாகர் உருவுகளில் கிருட்டிணன், சிவலிங்கம் போன்றவை அமைக்கப் பெறுவதனை உடன்வைத்து எண்ணுதல் தகும். இவ்வாறு பல்லுருத் தாங்கிய இறைமை கோவிலுடன் நில்லாது புறம் வருவதற்கான காரணங்களையும் அதனால் புதிய 'உருவுகள்' உருவாகியமையையும் கவனித்தல்வேண்டும். எல்லோராலும் எல்லாநேரத்தும் கோயிலுக்கு வரும் வாய்ப்பில்லை. வயது முதிர்வு, நோய்வாய்ப்பட்டிருத்தல் இன்னபிற காரணங்களால் திருக்கோயில் வாராதோருக்கு வாய்ப்பாகவும் பிறகாரணங்களுக்காகவும் 'இறையுரு' திருவீதியுலா வரவேண்டிய சூழல் எழுந்தது. கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறையை வெளிக் கொணர்ந்தால் கோயிலில் அவ்வேளையில் இறையின்மை

உருவாகும். கருவறைத் தெய்வம் காலார உலாவருதல் இயலாது. கருவறையுருவு கல்லால் அல்லது பிறவற்றால் அமைந்திருந்தால் அதனை எழுந்தருளச் செய்வதும் மீளவும் திருநிலைப்படுத்தவும் இயலாது. இதனால் மூலவர் உருவுக்கப் பால் 'உற்சவர்' என்ற திருவுருவு தேவையானது. உற்சவரின் திருவீதி புறப்பட்டால் மேற்கூறிய சமூகத்தேவை நிறை வானது. சிலவேளைகளில் குறிப்பிட்ட வீதிகளிலன்றிப் பொதுமன்றுகளுக்கும் இறைவர்கள் எழுந்தருளுவர். மாசி மாதத் தீர்த்தவாரி, வைகைக் கரையில் புட்டுக்கு மண் சுமக்க ஆலவாயண்ணல் வருதல், கள்ளழகர் அழகர் கோவிலிருந்து பல கல் தொலைவிலுள்ள மதுரைக்கு வருதல் போன்றவை எண்ணத்தகுவன. உற்சவரும் பரவலாகச் செல்லமுடியாத ஒரு சமூகச்சூழல் ஏற்பட்டபோது குறியீடு கள் என்ற புதிய 'உருவுகள்' தோன்றின. அம்மன், செவ்வேள் திருமால் போன்ற கோவில்களிலிருந்து உற்சவர்கள் எழுந் தருளியபோதும் கடலாடும்போது உற்சவர்கள் திருநீராட்டப் பெறுவதில்லை. மாறாக அவ்விறைவர்களின் குறியீடுகளாக அமையும் திரிசூலம், வேல், சங்குசக்கரம் போன்றவை திருமுழுக்காட்டப்பெறும். இதற்காகக் குறியீட்டு 'உருவுகள்' உருவானதையும் காணமுடிகிறது. 'சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையான்' இருந்த இடத்தில் சங்கும் சக்கரமும் வழிபடுபொருள்கள் ஆயின. புறச்சமயங்களிலும் இக் கூறு உண்டென்பதற்குச் சிலுவை சான்று பகரும்.

'சின்ன' உருவுகள்:

கலை உருவுகள், குறியீட்டுருவுகளுக்கப்பால் சமயச் சார்பான சின்னங்களின் உருவுகள் வெளிவந்தன. இவை பண்டைக்காலத்தில் எந்த இலக்கியங்களிலும் சுட்டப் பெறாதவை. சமயங்கள் தழைத்தோங்கிய கால கட்டத்தில் சமயச்சின்னங்கள் செல்வாக்குப் பெற்றன. இதனால் திருநீற்றுக்கோடு, திருமண் வடிவு, சிந்தூரம் போன்ற

சின்னங்களின் உருவுகள் பரவலாயின. அவ்வச்சமயத்தாரின் பொருட்கள் யாவற்றிலும் இவ்வுருவுகள் பொறிக்கப் பெற்றன. இதனால் பெரும்பிரிவு சுட்டப்பெற வாய்ப் புண்டானது. சின்னங்களை உருவாக்கியதைப் போன்றே எழுத்து வடிவில் சித்தாந்தக் கோட்பாடுகளையோ, இறை தொடர்பானவற்றையோ காட்டுகின்ற எழுத்து உருவு களும் பரவலாக அமைக்கப்பெற்றன. 'உ' என அமையும் பிள்ளையார்சுழி, ஓம் எனும் எழுத்துரு ஆகியவை அவற்றுள் சில. சிலுவை, மதியுடன் கூடிய விண் மீன், வடமொழி யிலிருந்து இறக்குமதியான 786 எனப்பெறும் எண்ணடுக்கு போன்றவை சிந்திப்பதற்குரியவை. இவ்வாறு நூல்கள் பலவற்றில் கூறப்பெற்ற தொன்மைச் சார்பு விளக்கங் களால் கலையுருவுகளும், குறியீட்டுருவுகளும், சின்னங்கள் பற்றிய உருவுகளும் எழுத்து எண் உருவுகளும் விளைந்தன எனக் காணமுடிகிறது.

இன்னொரு புறம்:

சமூகத்தின் மற்றொருபுறத்தே, நாட்டுப்புற வழக்காறு களிலும் இத் தன்மையினடிப்படையில் பல உருவுகள் ஆக்கப் பெற்றன. சிற்றூர்களிலும் தொன்மங்களாகிய, அவை சடங்குகளாகிப் பின்னர்ப் புதிய உருவுகளாக மாற்றம் பெற்றமைக்குப் பல சான்றுகள் உண்டு. கோயில் முகப்பு களில் மண்ணாலான புரவிகளடுக்கல், பாவைகள் வைத்தல் ஆகியவை முதன்மையானவை. கண், கை, கால் என வெள்ளியால் உருவுகள் செய்து உண்டியலில் இடுவதும், கற்படிகளில் மனிதவுரு, கால், கை போன்ற உருவுகளைச் செதுக்குவதும் பரவலாகக் காணப்பெறும் வழக்காறுகள். தீமிதியின்போது கொடும்பாவிகள், அமைக்கப் பெறுவதும் கருதுதற்குரிய ஒன்று. ''பூர்வகால நியதிப்படி விக்கிரகங் களை அமைக்கவேண்டும் என்று மத சம்பிரதாயம்

வற்புறுத்தினாலும் கூட, பக்தர்களோ தங்கள் தெய்வங்களுக்குப் பொருந்தினாலும்,பொருந்தாவிட்டாலும் அந்தந்த நாகரிக வழக்குப்படி ஆடை, ஆபரணங்களை அணிவித்து, அவற்றைத்தம் மனிதத் தோற்றத்திலேயே காணவிரும்பினார்கள்''[7] என்று கோசாம்பி குறிப்பிடுவார். இதனால் பற்பல கோலங்களில் பல தெய்வுகள் புதிதாக இடம் பெற்றுள்ளன.

மாறாகப் பெரும் சோடனைப் புனைவின்றி மரத்தடியில் அல்லது கோயிற் பிரகாரங்களில் அடுக்கப்பெற்றிருக்கும் செங்கற்கள் போன்றவை கணக்கிலெடுக்கப் பெற வேண்டியவை. இங்கு ஏழு சப்தகன்னிமார், பாவையர் உருவாக அல்லாமல் பொது உருவாக அமைவதனைக் காணலாம். சிலவூர்களில் ஏழு செங்கற்களே வரிசையாக அடுக்கப்பெற்று அலங்கரிக்கப் பெற்று வணங்கப் பெறும். இதனையொட்டிச் சாணியில், மணலில் சருக்கரைத் தூளில், மாவில் பிள்ளையார் பிடிக்கப்பெறுவது நிகழ்ந்தது. இவ்வாறு வடிவத்திற்கு முதன்மை தராமல் சித்தாந்தங்கட்கு முதன்மை தரப்பெற்ற பிறிதொருநிலையே அருட்பெருஞ் சோதியாக ஆண்டவனை ஏத்துவது. பேரொளிப் பிழம்பினன் என்ற தத்துவ வடிவாகக் கொள்ளாமல் ஆண்டவன் ஒருவனென்ற பரந்தநிலையில் புறவடிவுகளைக் கருதாத மனப்போக்கில் சுடர்வணக்கம் இங்கு நிகழ்வதையும் குறிப்பிடல் தகும். இவ்வாறான உருவுகளுக்குப்பின், நம்பிக்கைகளும் பல்வாறாக உள்ளன. அனுமன், ஐயப்பன், திருவுருகளை இல்லத்தில் வைக்கத் தயங்குவாருண்டு. காளிங்காநர்த்தனமாடும் கண்ணன் உருவு. அம்பலத்தாடும் கூத்தரசன், ஆண்டிக்கோலத்து முருகன் நாக்கைத் துருத்தும் காளி போன்ற உருவுகளை இல்லத்தில் வைத்திருந்தால் செல்வம் குறையும் நோய்வரும் என்ற நம்பிக்கைகள் இன்றும் மக்களிடையே காணப்பெறுகின்றன. இவ்வாறு

இறைவர்களுக்கு மனிதர்கள் உருவாக்கிய 'திருவுருவுகள்' சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் படர்ந்து நிற்பதனை உணர்தல் வேண்டும்.

திருவுருவுகள் பற்றிய சில செய்திகள்:

1. தொல்காப்பிய காலகட்டத்தில் இறை என்பது குறிப்பிட்ட உருவினதாகக் குறிக்கப் பெறவில்லை.
2. மரநிழல், கல்நிறுத்தம் போன்றவை இறைமையுடன் தொடர்புபடுத்தப்பெற்றன.
3. பிறகு தொன்மச் செய்திகளினால் இறைவர்கட்குத் தனித்தனி உருவுகள் சமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. காலச் சூழல்கட்கேற்பத் தொன்மச் சிந்தனைகள் மாறிட அவற்றிற்கேற்ப உருவுகளும் மாற்றங் கண்டன.
4. தொன்மங்களிலிருந்து சடங்குகளும் சடங்குகளிலிருந்து கலைகளும் பிறந்தன என்பது பலரது கணிப்பு. அவ்வழியே தொன்மச் சிந்தனைகளின் விளைவாக வேடமிட்டும், வேடமிடாமலும் கலையுருவுகள் பிறப்பெடுத்தன.
5. இலக்கியச் செய்திகளைக் கலை வடிவாக்க முயன்றதன் பயனாக ஓரிறைக்கே பலவுருவுகள் எழுந்தன. சமூகத் தேவையைக் கருதி உற்சவர்கள் உருவாக்கப் பெற்றனர்.
6. இவற்றின் தொடர்ச்சியாகக் குறியீட்டு உருவுகளும், சமயச் சின்னங்களின் உருவுகளும் உருவாகின. பிறகு எழுத்து, எண் உருவுகள் பரவலாக்கப் பெற்றன.

7. நாட்டுப்புற வழக்காறுகளில், கோயிலின் புறத்தும், உருவுகள் அடுக்கினர். உண்டியிலும் உலோக உருவுகள் இடம்பெற்றன.

8. உருவங்களை மறுதலிக்கும் போக்கு இருவிதங்களில் தொடர்ந்தது.

9. திருவுருவுகளின் அடிப்படையில் மக்களிடையே பல நம்பிக்கைகளும் காணப்பெறுகின்றன.

குறிப்புகள்:

1. கா. சுப்பிரமணிய பிள்ளை, தமிழர் சமயம், ப. 51.
2. மேலது., ப. 68.
3. தி. இராசமாணிக்கம், தமிழர் தம் தனிப்பெருங் கடவுள், ப. 67.
4. இராகுல சாங்கிருத்தியாயன், இந்து தத்துவ இயல், ப. 3.
5. மேலது., ப. 9.
6. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 121.
7. புதுச்சேரி பாரதிவீதி காமாட்சியம்மன் ஆலய அர்ச்சகர் கூறிய செய்தி. நாள்: 09. 10. 1990.
8. டி.டி. கோசாம்பி, பண்டைய இந்தியா (தமிழாக்கம் எஸ். ஆர். என். சத்யா), ப. 363.

சண்முக கவசம்

ஆதியாம் கயிலைச்செல்வன் அணிநெற்றி தன்னைக்காக்க
தாதவிழ் கடப்பம்தாரான் தாள்இருநுதலைக் காக்க
சோதியாம் தணிகையீசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க...
ஒலியெழ உரத்த சத்தத்தொடுவரு பூத பிரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவ்வையானாலும்
கிலிகொள எனைவேல் காக்க; கெடுபார் செய்யும் சூன்யம்
வலியுள மந்திரதந்திரம் வருத்திடாது அயில்வேல் காக்க!

காப்பு

ஒரு சமூகத்தில் ஒரு காலத்தில் தோன்றிய ஒரு மரபு கால வளர்ச்சியில் பல்வேறு மாறுதல்களைப் பெறுவது இயல்பானது. தமிழர் சமூகத்திலும் இவ்வாறாகப் பல பழம் மரபுகள் காலச் சூழல்களுக்கேற்ப மாறுதல்களைப்

பெற்றிருப்பதைப் பல சான்றுகள் மூலம் நிறுவ முடியும். இறைமை கலந்த வழிபாட்டு நிலை, நம்பிக்கையை அடியொற்றிய பல சடங்கு நிலைகள், வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் இவற்றின் வாயிலாகப் பழந் தமிழர் மரபுகளையும், அவை பெற்ற மாற்றங்களையும் காண விழையும் போக்கின் ஒரு பகுதியே இக்கட்டுரை. தமிழர் சமூகத்தில் 'காப்பு' என்ற சொல்லாட்சி பரவலானது. காப்புக் கடவுள், காப்புக் கட்டல், காப்புப்பணி பற்றிய செய்திகளை இலக்கியங்கள், வழக்கடிப்பாடுகள் போன்றவற்றிடையே காணமுடிகிறது. காப்புப் பணி பற்றிக் காணப் பெறும் பல்விதத் தொடர்புகளையும் இவற்றால் சமுதாயம் பெற்ற பல கூறுகளையும் காணவேண்டியது தேவையான ஒன்றாகிறது.

காப்பு – சொல்லாட்சி:

காப்பு என்ற சொல்லிற்குப் பதினொரு பொருண்மைகளை லிப்கோ தமிழ் - தமிழ் ஆங்கில அகராதி கூறும். எனினும், பாதுகாப்பு, காப்புச் செய்யுள், திருநீறு, வளை போன்ற சொற்களே கவனத்திற்குரியவை. ஏனெனில், காப்பிடு என்ற சொல்லை அவ்வகராதி விளக்கும்போது 1. காப்பு நாண் கட்டு (to tie round the wrist a thread on Ceremonial occasions) 2. நெற்றியில் திருநீறு அல்லது மண்ணினால் காப்பிடு (to rub sacred ashes or earth on the forehead) 3. திருக்கோவிலை இரவில் மூடுதல் எனவும் கூறுகிறது. இவற்றால் காப்பு என்பது இறையியலுடன் தொடர்புடையது என்பதைப் பெற முடிகிறது. ஏனைய பழங்கால இலக்கியங்கள் யாவற்றிலும், பாதுகாவல் என்ற பொதுப் பொருளிலேயே எங்கும் இச்சொல் பயின்று வருகிறது என்பது வெளிப்படை. பண்டைய தமிழ் இலக்கண, இலக்கியங்கள் யாவும், 'காப்பு' என்ற சொல்லைப்

பாதுகாவல் என்ற கருத்தில் கூறுகின்றதே அல்லாமல் தெய்வத்துடன் சார்த்திக் கூறவில்லை. குறளின் நிறைகாப்பு, சிறைகாப்பு போன்றவை இதற்குச் சான்றுகள்.

தொல்காப்பியத்தில் கூறப்பெறும் கடவுளர் காப்புத் தெய்வங்களாக உரைக்கப் பெறவில்லை. சங்க இலக்கியங்கள் பலராமன், செவ்வேள், திருமால், சிவன், கொற்றவை எனப் பல கடவுளர்களைக் காட்டும். ஆயினும் எந்த இலக்கியத்திலும் காப்பாற்றும் பணிக்கெனத் தனிக் கடவுள் சுட்டப்பெறவில்லை. எந்த இலக்கியமும் காப்புத் தெய்வத்தை வணங்கிவிட்டு நூலைத் தொடங்கவும் இல்லை. இன்று கிடைக்கும் வழக்காற்றுக் குறிப்புகள், இலக்கிய வகைகள் இவற்றைக் காணுங்கால் காப்புத் தெய்வமாகக் கருதப்பெறும் கடவுளர்களாக 1) விநாயகர், 2) திருமால் காணப்பெறுகின்றனர்.

இலக்கியக் காப்புகள்:

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் முதற் பகுதி காப்புப் பருவம். ''காப்புப் பருவத்தின் முதற்பாடல் திருமாலைப் பற்றியதாதல் வேண்டும். அவன் காவற்கடமை பூண்டவன் ஆதலாலும், திருவின் கிழத்தியின் கேள்வன் ஆதலாலும், பிறவாற்றாலும், அவனை முற்படக் கூறித் தொடங்குதல் முறையென்பர்''[1]

நவநீதப் பாட்டியலும்,

''காப்பின் முதல் எடுக்கும் கடவுள்தானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோ னாகும்''

(பரணர் பாட்டியல் - நவநீதி - 26)

என்று பகரும். இவ்வாறு காப்பதற்குரிய தனிக் கடவுளாகத் துழாய் முடியான் கருதப்பெற்றமை சிற்றிலக்கியங்கள்

வளர்ந்த காலத்தில்தான். இக்காலத்திலேயே பிற இலக்கியங்களின் காப்புச் செய்யுள்கள் யாவும் ஐந்து கரத்தனைக் காப்புக் கடவுளாக்கிப் பேசும். இந்நிலை இன்றும் நகர்ப்புற, நாட்டுப்புற மக்களிடையே பல்வாறாக அமைவதனைக் காணலாம். நாட்டுப்புறங்களில்,

''முந்தி முந்தி விநாயகனே,
முக்கண்ணனார் தன் மகனே:
கந்தனுக்கு முன்பிருந்த
கணபதியே முன் நடவாய்''

என்று எல்லா நிலைகளிலும் கணபதி முன் வைக்கப் பெறுவார். எதை எழுதினாலும். ''உ'' என்ற பிள்ளையார் சுழி போட்டபிறகு தொடங்குவது இன்று பெருமரபு. திருவீதியுலாக்களில் பெருந்தெய்வக் கோவில்களில் விநாயகர் திருவுருவு முதலில் வருதல், வீடு, கடை, போன்ற கட்டிடப் பணிகள் முடிந்த பிறகு முதலாவதாகக் 'கணபதி ஓமம்' செய்தல் போன்ற நடைமுறைப் பழக்கங்கள் கணக்கிலெடுக்கப் பெற வேண்டியவை. விநாயகர் வாதாபியில் இருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டின் போது தான் தமிழகத்திற்கு வந்ததாக வரலாற்றாசிரியர் கூறுவர். அதற்கு முன் வந்த இலக்கியங்களில் பிள்ளையார் இல்லை. இலக்கியங்கள் சுட்டிய திருமாலும், காப்பாற்றுதலுக்காக உருவாக்கப் பெற்ற கடவுளாக முற்காலத்தே கூறப் பெறவில்லை.

காக்க! காக்க:

சங்க இலக்கியத்தில் தன்னையோ, தம்மையோ காக்க வேண்டும் என்ற தனி வேண்டுதலுடன் கடவுளர் வணங்கப் பெற்றதாகக் குறிப்பிருப்பதாகத் தெரியவில்லை.

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' என்பது பொது நிலை வாழ்த்தே தவிர, அது அக்கடவுளே காக்கும் கடவுள்

என்ற சிறப்புத் தகுதி கருதிய வேண்டுதல் அன்று. தமிழகத்தின் சமயங்கள் செழித்து வளரத் தலைப்பட்ட போதுதான் ஆரியக் கோட்பாடுகள் சில தமிழ் மக்களிடையே ஊடுருவின. ஒவ்வொரு கடமை அல்லது தகுதிக்கெனத் தனித்தனியே கடவுளர்கள் கற்பிக்கப் பெறுவது வடமொழி மரபு. கல்விக்குச் 'சரஸ்வதியும் செல்வத்திற்கு 'லெஷ்மி'யும் படைக்கப் பெற்றமை இதற்குச் சான்றுகள். பின்னர்க் காலப்போக்கில் பிள்ளைப் பேற்றிற்குச் சந்தானலட்சுமி, அஞ்சாமைக்கு வீரலட்சுமி, என 'இலக்குமி'யே 'அட்ட லக்குமி' யானதும் உடன் வைத்து எண்ணத் தகுவது. இப்போக்கின் தொடக்க நிலையில் படைத்தல், காத்தல் அழித்தல் போன்ற மூன்று பெரும்பணிகளுக்குரிய கடவுளர் களாக்கப் பிரம்மன், திருமால், சிவன் ஆகியோர் உரியவர் களாகப் பெற்றனர். இக்கோட்பாடு அல்லது ஐதீகம் வருமுன்னர்த் தமிழில் காணப் பெறும் இலக்கியங்கள் சிவனையும், திருமாலையும், பிறரையும் இக்கோணத்தில் எங்கும் சுட்டவில்லை. சங்க இலக்கியத்தில் பரமசிவன் பற்றிய குறிப்புகள் வருமிடங்களில் முப்புரமெரித்தது. கூற்றுவனுக்கு ஒப்பான செயல் புரிந்தது போன்ற புராணக் கூறுகள் கூறப் பெறுகின்றனவே அன்றி, சிவன் அழித்தற் கடவுள் என்று இயம்பப் பெறவில்லை. சிவனை அழித்தற் கடவுளாக வடவர்கள் ஐதீக நியமனம்' செய்த பிறகும், பண்டைத் தமிழ் மக்களின் மரபுப்படி, அப்பிறவா யாக்கைப் பெரியோனே முழுமுதற் கடவுளாக வணங்கப் பெற்றும் இலக்கியங்களால் ஏத்தப்பெற்றும் வந்திருக்கிறான்.

காப்புக் கடவுள்:

தமிழரிடையே மட்டுமே எல்லோரிடத்தும் காணப் பெறுவதைப் போன்று அச்சமே வழிபாட்டின் காரணம் என்பதை உணருதல் வேண்டும். காப்பாற்றுங் கடவுளாகச்

சித்தரிக்கப்பெற்ற திருமாலைவிட, அழித்தற் கடவுளாகிய சிவபெருமானுக்கான அடியவர்களும், அவர்கள் நூல்களும் மிகுதியாக உருவான போக்கை ஊன்றிக் கவனிக்கவேண்டும். ஒரு தொடர் இலக்கியங்கள் படைத்த ஔவை தம் நூலுக்கு ஆத்தி சூடி என்று பெயரிட்டமையைச் சான்றாக்கலாம். பிற்கால நூல்களில் காப்புச் செய்யுள் எழுதப் பெறு மாற்றையும் கவனித்தல்வேண்டும். அச்சவுணர்வில் தலைமை அல்லது முதன்மை கூட மாறும் என்பதற்கு அரசியல் வழி பாடு, அலுவலக ஆட்சி போன்றவற்றிலிருந்து பல்வேறு சான்றுகளைக் கூற முடியும். சான்றாகத் திருநள்ளார் திருக்கோவிலின் மூலவர் 'தர்ப்ப ஆரண்யேசுவரர்' என்ற நெற்றிக்கண்ணுடையவர். நளன் தம்மைப் பிடித்திருந்த சனி விலக வேண்டுமென்பதற்காக அச்சிவனை வழிபட அவனருளாலே சனி விலகியதாகத் தலபுராணம் கூறும். தம்மைப் பிடித்த கேடு மாற இறைவனை வணங்கவேண்டும் என்பது இதன் ஐதிகம். ஆனால் திருநள்ளாரில் வழிபாடு செய்வோர் சிவனை முதன்மைப்படுத்துவதில்லை. மாறாகச் சனிபகவான் சன்னதியே பிரதானமாக்கப்படுகிறது. 'சாட்சிக் காரனை விடச் சண்டைக்காரன் காலில்விழுகின்ற' போக்குத் தமிழரிடையே இன்றும் நிறையவுண்டு. ஒருவேளை 'அழிப்ப வன்' சிவனென்ற சித்தரிப்பிற்குப் பிறகும் மக்கள் அவனையே ஏற்று வணங்கியமைக்கு இப்போக்கே காரணமா என்பதும் புரியவில்லை. எனினும் ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகும் சிற்றிலக்கியங்களில் வளரத் தொடங்கிய கால கட்டத்தை யொட்டியும், காப்புக் கடவுள்கள் என்ற தனிப்போக்கு வளர்ந்தமை கவனிக்கத் தக்கது. திருமால் இலக்கிய அளவிலும், விநாயகர் பொது வாழ்வியலும், காப்புக் கடவுளர்கள் ஆனமைக்கான சமூகப் பின்புலங்கள் தொடர்ந்து ஆய்வதற்குரியன. எனினும் 'காப்புக் கடவுள்' என்ற புதுக்கூறு தமிழ்ச் சமூகத்தில் மலர்ந்தமை எண்ணு வதற்குரியதாகும்.

பொதுவாழ்விலும் சடங்குகளிலும் காப்பு:

கழனியில் பயிரிடத் தொடங்கும் முன்னதாக மண்ணில் சிறுகூறினைக் கிள்ளி வைத்து, மஞ்சள் கயிறுசுற்றி ஓர் ஓரத்தில் வைத்துவிட்டுப் பிறகே நிலத்தில் ஆவன செய்குவர். இதனை 'நிலக்காப்பு' என்ற பெயரிட்டு அழைக்கின்றனர். சில இடங்களில் மஞ்சள் நாண் வைக்கப் பெறுவதில்லை. மாறாக மண்ணைப் பிள்ளையாராகப் பிடித்து வைத்துக் குங்குமம், பூ போன்றவை சூட்டி நிலத்தின் ஒரு மருங்கில் வைப்பதுமுண்டு.

நிலத்தில் அறுவடையாகி வீட்டுக்குப் புத்தரிசி வந்த பிறகு, தைத்திங்களில் கொண்டாடப்படுவது பொங்கல் திருநாள். அன்றைய தினம் வீட்டு முகப்பில் நிலை வாசலின் மேல் பூளைப்பூ போன்றவை கொத்தாகச் செருகப்பெறும். இதனைக் 'காப்புக் கட்டுதல்' என்பர்.

நிலமும் இல்லமும் இவ்வாறு 'காப்பு'ப் பெற்றதைப் போலப் பிறவும் பெற்றன. இவை அனைத்திற்கும் பின் புலத்தில் இருப்பது தெய்வச் சார்பு அல்லது வழிபாட்டுச் சார்பு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இதனால் 'காப்பு' என்பது இறைமையுடன் தொடர்புடையது என்பது புலனாகிறது. இதனைச் சமய மரபுகளும் சடங்குத் தன்மை களும் எடுத்துக் காட்டுகின்றன.

இன்றும் சடங்குநிலைகளில் 'காப்புகள்' பல பின்புலங் களுடன் இடம்பெறுகின்றன. கோயில்களில் காப்புக்கட்டும் சடங்கு பரவலானது. இறைவன் திருவீதிஉலா வரும் முன்னர் ஏனைய தீய கூறுகளிலிருந்து வீதியைச் சுத்தி கரித்துக் காப்புச் செய்வதற்காக 'வாஸ்து சாந்தி' செய்யப் பெறுவது குறிக்கத் தக்கது. மதுரை (வேளச்சேரி)யிலுள்ள ஐயப்பன் கோவிலில் விழா நேரத்து நாட்களில் கோவிலின்

சுற்றுப்புறச் சுவர் அருகில் எட்டுத் திசைகளையும் குறிக்கும் வண்ணம் எட்டு இடங்களில் கம்பங்கள் நடப்பட்டு, அக்கம்பங்களின் முகப்பில் இரண்டு செங்கற்கள் - மேற்பகுதி மட்டும் வெளியே தெரியுமாறு - புதைக்கப்பட்டிருப்பதைக் காண முடிந்தது. அவை பலிக்கற்கள் எனப் பெற்றன. கம்பங்களில் துணியாலாகிய வண்ணக் கொடிகள் அமைக்கப் பெற்றிருந்தன. எட்டுத் திசைகளிலிருந்தும் வரும் தீயவைகள் இக்கற்களில் பலியாகும். கோவிலின் 'உள்ளமைப்புப் புனிதம்' காக்கப்பெறும். ஏனைய கோவில்களின் 'காப்புக் கொடி' இவண் கருதத்தக்கது. ஐயப்பன் கோவில் மரபிலும் காப்பாக அமையுமிடங்கள் கொடிகளைப் பெறுவது உடன்வைத்துக் கருதவேண்டிய ஒன்று. கிராமப் புறங்களில் இவ்வாறு குறிப்பிட்ட இடங்களில் காப்புக் கொடி கட்டுவதை 'எல்லை கட்டுதல்' என்ற கலைச் சொல்லால் குறிப்பர் என்று கூறும் சிலம்பு நா. செல்வராசு சில இக்கிராமங்களில் பூசையிடங்களைப் பேய்களினின்றும் காக்க எருக்கு, வேம்பு போன்ற குச்சிகளை நட்டுவைக்கும் போக்குகளும் காணப் பெறுவதாகக் கூறியுள்ளமை உடன்வைத்து எண்ணவேண்டிய தாம்.[3] சமயத்தின் ஆதிக்கம் இயல்பானதாக மக்களிடையே பரவுகிறது. காப்புக் கட்டுதல் என்பது திருக்கோவில்களில் தொடங்கித் தனிமனித நிகழ்வுகளில் பரவி, நிரந்தரமான கூறாக மாறியதை இவண் சுட்டுதல் தகும். குறிப்பிட்ட திருவிழா தொடங்கும் முன்னதாகத் திருக்கோவிலின் நாற் புறங்களிலும், ஊரின் எல்லைப் புறங்களிலும் 'காப்புக் கொடி' கட்டுவது திருக்கோயிலின் மரபு. கொடியேற்றி அஃது அவிழ்க்கப்படும் வரை அவ்வூரார் பிறவூர் கட்குச் செல்லுதல் கூடாதென்றும் செல்ல நேரின் காப்பவிழ்க்கும் முன் திரும்ப வேண்டுமென்றும் கூறப்படுகின்றது. 'காப்புத் தடை' நாட்டுப்புற மக்களிடையே ஊறிப்போன வழக்காறு. ஏனைய தீய சக்திகளிலிருந்து காப்பாற்றும் நோக்குடன் இதனை அமைப்பதாகக் கருதுவதால் குடும்ப நிகழ்வு

களிலும் இப்போக்கு படர்ந்தது. திருமணத்திற்கு முன் மணமக்கட்குத் காப்புக் கட்டலும், பிறகு குறிப்பிட்ட நேரங்கழித்து முறைப்படி அக்காப்பு நீக்கப் பெறுவதும் நடப்பியல், காப்பு இங்கே கங்கனம் என்று அழைக்கப் பெறும். கங்கண விசர்ச்சனம் என்பது காப்பு நீக்கும் சடங் கிற்கான வடமொழிப் பெயர். குறிப்பிட்ட நிகழ்வில் காப் பணிந்து நீக்கும் ஆலயங்களிலிருந்து இல்ல நிகழ்வுகட்கும் வளர்ந்தது. பின்னர்த் தீய ஆற்றல்களிலிருந்து காக்கப்பட வேண்டும் என வழிபாடு நிகழ்த்தப் பெறும் நோன்புகளி லெல்லாம் காப்பு நான்-காப்புக் கயிறு - இடம் பெற்றது. காரடையான் நோன்பு மாங்கலிய பலத்திற்காகப் பெண்டிர் அந்நோன்பின் போது ‘கலசத்தில் தேங்காயுடன் மாவிலை களை வைத்துச் சந்தனம்,குங்குமம் வைத்து, மஞ்சள் கயிறு ஒன்றைக் கலசத்தின் கழுத்தில் சுற்றி வைத்து விட வேண்டும்... கலசத்தைக் காமாட்சியம்மனாகப் பாவித்து நிவேதனம் செய்யவேண்டும்... கலசத்தில் சுற்றியிருக்கிற மஞ்சள் கயிற்றை எடுத்துக் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும்’’.[2]

கங்கணமாகக் கை மணிக்கட்டில் கட்டப்பெற்ற கயிறு கழுத்திற்குச் சென்றது. சுவர்ண கௌரி விரதம், வரலட்சுமி விரதம் போன்ற ஏனைய விரதங்களிலும் இவ்வாறு காப்பு நாண் அணியும் போக்கு வளர்ந்தது. பெண்ணிற்கு மட்டுமன்றி ஆணுக்கும் காப்பணிதல் குழந்தை பிறந்த 16-ம் நாள் நிகழ்வது பொதுவானது. ஆலயக் காப்பு, இல்ல நிகழ்வுக் காப்பாகி, விரதங்கள் தோறும் காப்பு நாணாகி, ஆண் பெண் இருபாலர்க்கும் சடங்கு நிலைக் காப்பாகியிருப்பதை உணரல் தகும்.

இறையருகே வைக்கப்பெற்று, இறையருள் ஏறிய நிலையில் இக்காப்புகள் மனிதர்களின் மேனிகளில்

அணியாகின. இறைவனுக்கே அவற்றைச் சார்த்தும் போக்கே தங்கக் கவசம், வெள்ளிக் கவசம் போன்றவை. ஆயினும் சந்தனமோ, விபூதியோ கவசமாகும்போது, சந்தனக் காப்பு, விபூதிக் காப்பு என்றே வழங்கப் பெறுவதும் கருதலுக்குரியது. கவசம் என்ற வடமொழிச் சொல்லுக்குரிய பொருள்களாக.

1. போர்வீரர் அணியும் இருப்புச் சட்டை (armour)
2. பாதுகாப்புக்காக அணியும் மந்திர தாயத்து (amulet)
3. பாதுகாப்பு மந்திரம் (Protective mantra)

போன்றவை கூறப் பெறுகின்றன.

காப்பைக் கருதி மனிதர்கள் தம் மேனியில் பூணுகின்ற காப்பணிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. குழவி பிறந்ததும் ஆணாக இருப்பின் கழல் அணிவது, பெண்ணாயின் காப்பணிவது இன்னமும் மரபாகவுள்ளது. அவரவர் தகுதிக்கேற்ப ஐம்பொன், வெள்ளி, தங்கம் எனப் பல்வேறு வகையினதாக இஃது அமையும். வீரங்கருதி இவ்வாறு அமைத்தனர் எனக் கருதுவர். எனினும் குழவி நிலையில் அணிவிக்கப் பெறுதலும் காப்பு என்ற சொல்லாட்சியும் சிந்தனைக்குரியது. ஆண்குழவிக்குப் பண்டைய நாளில் ஐம்படைத்தாலி அணிவித்ததைப் பற்றிய செய்திகள் உடன்வைத்து எண்ணத்தகுவன. ஒவ்வோர் உலோகத்திற்கும் ஒவ்வொரு குணமுண்டு என்பதுவும், அது உடல், உள்ளம் இரண்டையும் சார்ந்து அமையும் என்பதுவும் கணக்கில் எடுக்கப்பட வேண்டியவை. ஐம்படைத்தாலி என்பது காத்தற்பணியை அடியொற்றியது என்பதால் மங்கையரின் மங்கல அணியாகிய தங்கத்தாலியும் வேறுவகையாகப் பார்க்க இடந்தருகிறது.

பெண்டிரின் மணமான நிலையைத் தெரிவிப்பது மங்கல அணியாகிய தாலி. இது தனக்கென்று ஒரு தலைமகன் உள்ளமையைத் தெரிவிக்கும் அணிகலனாகும். இதனைக் 'காப்பு'டன் தொடர்புபடுத்தினால் பல செய்திகள் விளங்கும். ஊரறிய ஒரு பெண்ணுக்குத் தாலியணிவிப்பது ''இந்த பெண்ணிற்கு இனி நானே காப்பாக இருப்பேன்'' என ஓர் ஆடவன் அறிவிக்கும் குறியீடாகும். ஏனைய அணிகலன்களைப் பற்றி அதிகம் கவலுறாத பெண்டிர் தாலிக்கு முக்கியத்துவம் கொடுப்பதனை உலகறியும். ''மங்கல அணியிற் பிறிதணி மகிழாக்'' கண்ணகியையும் சிலம்பு சுட்டும். தாலிக்கயிறு என்பது காப்பு நிலையினது என்பதைப் பல்வேறு பிற சான்றுகளும் சுட்டிக்காட்டும். சான்றாக, கார்காத்த வேளாளர்களின் இல்லங்களில் நிகழும் 'விளக்கிடு கல்யாணம்' குறிக்கத்தக்கது. வீட்டி லிருக்கும் சிறுமி வயதுக்கு வருமுன்னர் இச்சடங்கு இளம் பருவத்திலேயே நிகழ்கிறது. அழைப்பிதழ் அடித்து, ஊரைக்கூட்டிய நிலையில் பெரியதொரு நிகழ்வாக இது நடத்தப்பெறுகிறது. அப்பெண்ணிற்குத் தாயாரே வெள்ளி விளக்குத் தருவதும், தாய்மாமன் அல்லது நெருங்கிய உறவுக்காரப் பையன் அப்பெண்ணின் கழுத்தில் சிறிய தாலி அணிவிப்பதும் இந்நிகழ்ச்சியின் முக்கியக் கூறுகள். சிறிய பவளத்துண்டினைப் பொருத்திய மிகச் சிறிய தாலியொன்று அணிவிக்கப்பெறும். பிறகு வயது முதிர்ந்த நிலையில் திருமணம் நிகழும்போது இச்சிறிய தாலியிலுள்ள பொருட்கள் மங்கல அணியில் இணைக்கப்பெறும். இந்நிகழ்விற்குக் காரணமாக அவ்வினத்தார் கூறும் செய்தி இவண் கருதுவதற் குரியதாம். பண்டைய நாளில் நவாபுகளின் படையெடுப்பு களின்போது சிறுமிகள் சிறைபிடிக்கப்படுவது தொடர்ந்து நிகழ்ந்தது. ஆனால் திருமணமான நிலையைக் குறிப்பதைப் போன்று தாலியணிந்துள்ள சிறுமிகள் கடத்தப்படுவ

தில்லை. அச்சிறுமிக்குக் காப்பாக ஒருவர் இருக்கின்றார் என்பதால் நவாபுகள் அவர்களைத் தீண்டுவதில்லையாம்.[4] இச்செய்தியின் பின்னணி கூறுவது ஒன்றைத்தான். சிறுமியாக இருந்தாலும் பிறரால் தீங்குபெறுவதிலின்றும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள – வேறொருவர் அணிவித்த-தாலியே காரணமாகிறது. இதன் தொடர்ச்சியை மன்றல் நாள் தாலியும் அறிவிக்கிறது எனலாம். எனவே, மங்கல நாண் என்பது காப்பு நாணாகவே கருதப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

காப்பு நாணாக அணிவிக்கப்பெற்ற தாலி மங்கல அணியாக வேறு சாயம் ஏற்றப்பெற்று மாறியது எனக் கருதலாம். தொடக்கநிலையில் தன் காப்பாளரால் - தலைவனால் – மன்றல் நாளில் அணிவிக்கப்பெற்ற தாலி ஒரு கயிறாகவே அமைந்திருக்க வேண்டும். மங்கலத் தன்மையை ஏற்ற அதிலே மஞ்சள் கிழங்கு ஒன்று கட்டப்பெற்றிருக்க வேண்டும். மஞ்சள் கிழங்கு கட்டப்பெற்ற கயிறே **'மஞ்சள் கயிறு'** எனப் பெயர் பெற்றது. பின்னர் மஞ்சள் என்பது வண்ணமாகக் கருதப்பெற்று, மஞ்சள் வண்ணக் கயிறு மஞ்சள் கயிறான தாலியெனப் பெற்றது. பொற்சங்கிலியாலாகிய தாலிச்சங்கிலியைப் பழுது பார்க்கவோ பிறவற்றிற்கோ கழுத்திலிருந்து கழற்ற வேண்டிய சூழலில் பெண்கள் ஒரு கயிற்றில் மஞ்சள் கிழங்கைக் கட்டித் தம் கழுத்தில் அணிந்து கொள்ளுவது நடப்பியல். சில குக்கிராமங்களில் பெண்டிர் சிலரின் கழுத்துகளில் சிவப்புவண்ணக் கயிற்றுடனான தாலியைக் காண முடிந்தது. மன்றல் நாளில் அக்கயிற்றில் மஞ்சள் துண்டு இணைக்கப்பெற்றே அணிவிக்கப்பெறும். இச்செய்திகளால் புலனாகும் உண்மைகள் இரண்டு. 1. மஞ்சள் கிழங்கு எந்தக்கயிற்றில் கட்டப் பெறுகிறதோ அக்கயிறே மஞ்சள்கயிறு எனப்போற்றப்படும்

தாலியாகும். 2. காலப்போக்கில் மஞ்சள் கிழங்கு மறக்கடிக்கப்பட்டு மஞ்சள் நிறக்கயிறு தாலியாக உருமாறிற்று.

தனக்குக் காப்பாளனாக உள்ளவனால் பலருடைய முன்னிலையில் கட்டப்பெற்ற மஞ்சள்கயிறு மங்கல அணியானமைக்குக் காரணமே மஞ்சள் கிழங்குதான். இதனை இன்றைய பிறவும் எடுத்துக் கூறும். மங்கலத்தைச் சுட்டும், புதுமையை நினைவு கூரும் இடங்களில் மஞ்சள் இடம்பெறும். திருமணம், காதனி, புதுமனைபுகுவிழா போன்ற மங்கல நிகழ்வுகளுக்காக அச்சிடப்பெற்றிருக்கும் அழைப்பிதழ்களின் ஓரங்களில் மஞ்சள் தடவப்பெறுவதையும், புதிய ஆடைகள் அணியப்பெறும் முன்னால் அவற்றில் மஞ்சள் தடவப்பெறுவதையும் கவனிக்க வேண்டும். மங்கல நாட்களின் போது மஞ்சளில் பிள்ளையாற் பிடிக்கப்பெற்றுப் பூசைகள் நிகழ்வது, நல்ல நாட்களான பண்டிகைகளின் போது வீட்டு நிலைகளின் கீழ்ப்புறங்களில் மஞ்சள் தடவப்பெறுவது, புதுக்கணக்கோடு தொடங்கப் பெறும் போது மஞ்சளால் ஓம், லாபம் என எழுதப்பெறுவது போன்ற பல செயற்பாடுகளை இன்றும் கண்கூடாகக் காணமுடிகிறது. இதனால் மங்கலத்தைக் குறிக்க மஞ்சள் கிழங்கும் மஞ்சள் பொடியும் பயன்படுத்தப் படுவதை உணரமுடிகிறது. இவ்வாறாக மங்கலத்தைக் குறிக்கும் மஞ்சள் கிழங்கு இணைக்கப் பெற்றதாலேயே அது மங்கல நாண் ஆனது. கயிறு, மஞ்சள் கிழங்கு இரண்டின் நிலையாமையைக் கருதிய நாட்களில் கயிறிருந்த இடத்தைத் தங்கமும், மஞ்சள் கிழங்கின் இடத்தைப் பொன்னாலான கூறுகள் பலவும் பற்றின. தாலியிலிடம் பெறும் உருவுகள் கடவுள் அல்லது மங்கலச் சின்னங்களாகப் பெயர் பெற்றன. அவரவர் குலமரபு, பணவசதிக் கேற்பத் தாலியின் வடிவுகள் பலவாக அமைந்தன. ''நானே உனக்குக் காப்பு'' எனத் தலைமகன் கூறித் தலைமகளின்

கழுத்தில் ஊரறிய அணிவித்த மஞ்சள் இணைக்கப்பெற்ற கயிறே மங்கல நாணாக மாறியமை இதனால் தெளிவுபடும். மங்கலத் தன்மை ஏற்றப்பெற்றதால் மங்கலப் பொருட்களான பூ, பொட்டு, தாலி மூன்றும் சுமங்கலிகளுக்குரிய தாகக் கருதப்பெற்றன. சிலம்பு பாடும் 'மங்கல வாழ்த்துப் பாடல்' மன்றல் நிகழ்வைக் குறிப்பதாக அமைவது ஈண்டு நோக்குதற்குரித்து. சுமங்கலிகள் மங்கலப் பொருட்களான பூவையும், பொட்டையும் இழப்பதுடன் தாலியையும் இழப்பதை நடைமுறை விளக்கிக் காட்டும்.

மங்கல அணியில் மஞ்சள் பெற்றிருந்த இடத்தை இறைமைக் கூறுகள் பற்றியமையைப் போலவே வேறுபல இடங்களிலும் மஞ்சளின் இடம் இறைமை கலந்தமைந்தது. உடல்நலக் குறைவு ஏற்படின் 'சாமிக்கு வேண்டிக்கொண்டு' ஒரு நாணயத்தை ஒரு மஞ்சள் துணியில் கட்டிவைப்பதும், உடல் நலமுற்றதும் அத்துணியுடன் அக்காசை ஆலய உண்டியலில் சேர்ப்பதும் இன்று வழக்கிலுள்ள ஒன்றாகும். நோன்புகள் பல மேற்கொள்ளுவார் நோன்பின்போது கட்டு கின்ற வெள்ளை நூலும் மஞ்சளில் தோய்த்து மஞ்சள் வண்ணம் ஏற்றப்பெற்றே கட்டப்பெறுவதையும் கவனிக்க வேண்டும்.

காலப்போக்கில் மனிதர்களின் மேனிகளில் காப்பாகவும் பிறவாகவும் அமையும் நாண்கள் இறைமை சேர்ந்து இலங்கின. குழந்தைகளின் இடுப்பிலணிவிக்கப்பெறும் அரைஞாண் கொடியில் அம்மன்காசு இடம்பெறலாயிற்று. அரைஞாணிலும், தோளிற்கும் முழங்கைக்கும் இடையில் கட்டப்பெறும் நாணிலும் மந்திரிக்கப்பெற்ற தாயத்துகளும், அம்மன் காசு போன்ற உருவுகளும் இணைக்கப்பெற்றன. தாலிக்கயிறு, பொன்தாலியானதைப் போலவே அம்மன்காசு இடம்பெற்ற குழந்தைப் பருவ அரைஞாண் வசதியுடை

யோரால் பொன்னால் அமைக்கப்பெற்றது. நோன்புக்கயிறு களுக்குப் பதில் நிரந்தரமாக மணிக்கட்டில் அமைக்கப்பெறும் காப்புகள் வந்தன. செம்பும் பிறவும் இதற்குப் பயன்பட்டன. இராகவேந்திரர், மேல்மருவத்தூர் அம்மன், முருகன், வேங்கடத்தான், காமாட்சியம்மன் எனப் பலவுருவுகள் அக்காப்புகளில் இடம்பெற்றன. உருவுகளில்லாத காப்புக் கம்பிகளும் மேனிக்காப்பாகவே பயன்படுத்தப் பெறுவதையும் உடன் வைத்து எண்ணுதல் தேவையானதாம். இதனால் இவை காப்பாகவே என்றும் பயன்படுத்தப்பெறுகின்றன என்பது தெளிவுபடப் புலனாகின்றது. இறைச்சார்பு ஏறிய நிலையில் 'காப்புகள்' இறைமையின் மாற்றுக்கூறாக இடம் பெற்றன. காலப்போக்கில் அனைத்து அணிகளிலும் இக்கூறு இணைந்தது. கணையாழி, சங்கிலியில் இணைக்கப்பெறும் பதக்கங்கள் போன்றவற்றில் கடவுள் உருவுகள் உருவானது இவ்வகையாகவேதான்.

இறையின் ஒரு பகுதியாகக் காப்பணிதல் உருவானதால் திருநீறு அணிவதையும், திருமண் இடுதலையும் காப்பு என்ற சொல்லால் குறிக்கின்றனர். இறையின் ஏதேனும் ஒரு கூறு நம் உடலில் காப்பாக அமைய வேண்டும் என்பதால்தான் சுடலையாடியின் திருநீறும், ஓங்கி உலகளந்த உத்தமனின் திருமண் குறியீடும் மனிதர்களின் நெற்றியிலும், மார்பிலும் கரங்களிலும் குடியேறின. இது புறக்காப்பு, அகக் காப்பிற் காக வந்தவையே காப்பு இலக்கியங்கள். சங்க இலக்கியங் களில் திருமாலும், சிவனும் குறிக்கப்பெறுகின்றனரேயன்றி அவர்களை வழிபடுவார் காப்பணியும் போக்கினரென்பதற்கு வலுவான சான்றில்லை. இவ்வாறு காப்பிடும் போக்கு பிற்காலத்தியது என்பது மனங்கொள்ள வேண்டிய கருத்தாகும்.

இறை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் குறிப்பிட்ட நோன்பின் போது மட்டும் காப்பணிந்த நிலை வளர்ந்து

நிரந்தரமாக அணிவது வழக்காயிற்று. ஆஞ்சநேயர் கயிறு, காசிக் கயிறு, திருப்பதிக்கயிறு எனப் பலருடைய மணிக்கட்டு களில் நாண் கட்டு காணப்பெறும் கயிறுகளின் நிலையாமைப் போக்கை உணர்ந்து உலோகக் காப்புகள் வந்தன. கழுத்து நாண் பொன்னாக மாறியபோது தங்கச் சங்கிலியில் இறை யுருவுகள் பதக்கங்களாக ('டாலராக') அமைக்கப் பெறு கின்றன. காப்பு வடிவங்கள் பற்றி ஒரு தனியாய்வு நிகழ்த்தப் பெற வேண்டிய அளவு சமுதாயத்தில் காப்பு இடம் பெற்றுள்ளது.

காப்பு இலக்கியங்கள்:

தெய்வத் தொடர்பும், சடங்கு நிலையுறவும் ஏற்படின் அதன் விளைவாய் இலக்கியங்கள் உருவாவது வெகு இயல் பானது. தெய்வம் காக்கும் என்ற நம்பிக்கையின் விளைவால் சடங்குகளாக உருமாறிய 'காப்பு' சில இலக்கியங்கட்கும் அடிகோலியது.

காப்பு எந்நோக்கத்திற்காக அணியப் பெறுகின்றதோ அதையொட்டிய இலக்கியங்களும் உருவாகின. கோயில் நடைமுறையைப் பற்றிய நூல் கோயிலொழுகு, சந்நிதி முறை, என்றாற் போல்' திருப் பெயர் கூறல் என்பது நாமாவளி என இலக்கிய வகை பெற்றதைப் போலக் காவல் கடன் பற்றிய நூல்கள் காப்பு மாலை என்றும், கவசம் என்றும் பெயர் பெற்றன.

> **''கடவுள் காத்தலாக ஒரு மூன்று**
> **ஐந்து ஏழானும் அறைவது காப்பு**
> **மாலையெனப் பெயர் வைக்கப்படுமே''**
>
> (முத்துவீரியம்: 1091)

என்ற நாற்பாவும், இதையொட்டிய இலக்கணப்பாட்டியலின் நாற்பாவும். பிரபந்த தீபத்தின் 35-ம் நூற்பாவும் குறித்தற்

குரியவை. பின்னர்ப் பிள்ளைத் தமிழின் காப்புப் பருவம் இதற்கு முன்னோடியாக இருக்கலாம் எனக் கருதுவர். பிள்ளைத் தமிழில் பாட்டுடைத் தலைவனைக் காக்க இறையை வேண்டிய நிலைமை மாறித் தன்னைக் காக்க என்று மாறிய போக்கு இதன் வழி அறியற்பாலது. இவ்வாறு பொது நிலையில் ஏழுபாட்டுகளுக்கு விஞ்சாத நிலையில் பாடிய போக்கு மாறுபட்டதும் வேறு சில கூறுகளும் கவச நூல்களை உருவாக்கின. மாணிக்கவாசகர் திருநீற்றுக் கவசம் என்ற சொல்லாட்சியைக் குறிப்பார். பெரிய நூல் களின் ஒரு பகுதியாக விளங்கிய கவசம் தனியான நூலாக உருவானமையைக் காசி கண்டச் சக்தி கவசம், பாகவத நாராயண கவசம் முதலியவற்றை வைத்து விளக்குவாரும் உளர். 'கூற்றாயினவாறு விலக்குகிலீர்' எனத் தொடங்கும் நாவுக்கரசர் பதிகம் வயிற்று நோவால் அவதியுற்ற காலை பாடப்பெற்றது; இன்றும் பாடப்பெறுவது. இதைப் போன்று உடலுறுப்புகள் யாவற்றையும் காக்க காக்க என இறையை வேண்டும் போக்கு வெகுவேகமாக வளர்ந்தது. ஏனைய பில்லி, சூனியம் பெரும்பகையகலவும், 'எல்லா பிணியும் என்பதனைக் கண்டால் நில்லாதோடுக' என இறையைக் காக்குமாறு வேண்டவும் கவச நூல்கள் அமைந்தன.

தன்னுடைய தேவைக்கெனப் புலவர் ஒருவர் பாடிய கவச நூல் பின்னர் மனப்பாடம் செய்து அன்றாடம் பாடப் பெறும் பாராயண நூலாயிற்று. தனித்த இலக்கிய வகை யாகக் கவசம் வளர்ந்த காரணத்தால் தத்தம் 'இஷ்ட தெய்வங்களின் மீது' கவசம் பாட முனைந்தனர் பலர். கண்ணதாசனின் 'ஸ்ரீ கிருஷ்ண கவசம்' குறிக்கத்தக்கது. அண்மையில் ஐயப்ப சுவாமிக்கும், மேல்மருவத்தூர் அம்மனுக்கும் கவசங்கள் வந்துள்ளன. இறையை வணங்கும் போக்கில் இவ்வாறான இலக்கிய வகைகளின் வழியே ஏற்றுவது புறச் சமயங்களுக்கும் பரவிற்று. 'அற்புதா'

என பெயரில் அற்புதசாமி என்பவர் 'துன்பங்களைத் துரத்தும் கர்த்தர் கவசம்' என்ற நூலை யாத்திருப்பதும், அந்நூல் ஏற்கனவே தமிழில் வெளிவந்த கவச நூல்களின் பாதிப்பால் உருவாகி இருப்பதும் நோக்குதலுக்குரியவை. இறைவன் காக்க வேண்டுமென்பதால் காப்பு அணிந்தும், காப்பு மாலை, கவசம் பாடியும் மனித சமூகம், 'காப்பு' டன் தொடர்பு கொண்டிருப்பதை இவ்விலக்கியங்களும் காட்டும். இவ்விலக்கியங்களும் மேற்குறித்த காப்பணி நிகழ்வுகளும், 'காப்புக்கடவுள்' எனத் தனிக்கடவுள் அமர்த்தப் பெற்றமையை அங்கீகரிக்கவில்லை என்பதை நிறுவுகின்றன. எனினும் இது தொடர்ந்து ஆய்வதற்குரியது. இறையே தம்மைக் காக்கும் என்ற நம்பிக்கையை நடப்பியலால் உணரமுடிகின்றது. அனுதினமும் தம்மைக் காத்துக் கொள்ளக் கவச இலக்கியங்களில் மூழ்குவாரைக் காணமுடிகிறது. இறை என்பது எது அல்லது யார் என்ற வினாவைவிடவும் அவ்விறை தம்மைக் காக்கவேண்டும் என்று நினையும் மனவிழைவே மிகுதியாகி இருப்பதைக் 'காப்பு' தெளிவாகச் சுட்டுகிறது.

கட்டுரை செய்திகளில் சில:

1. தமிழரின் பண்டைய இலக்கியங்கள் கடவுளர் பலரைச் சுட்டுகின்றன. ஆயினும் காத்தற் தொழிலுக்கெனத் தனிக்கடவுள் குறிக்கப் பெறவில்லை.
2. பிற்கால இலக்கியங்களும், பிற வழக்காறுகளும் விநாயகரையும் திருமாலையும் காப்புத் தெய்வங் களாகத் திட்டுகின்றன.
3. அச்சம் காரணமாகவும், தொடங்கவுள்ள செயல் 'விக்கினம்' இன்றி நடைபெற வேண்டுமென்ற ஆவல் காரணமாகவும் விநாயகர் காப்புத் தெய்வமென்ற பெரும்பான்மை பெறுகிறார்.

4. கோயில்களிலிருந்து, பொது நிகழ்வுகளுக்கும், பிற தனிமனித நோன்புகளுக்கும் 'காப்புக் கட்டுதல்' பரவியது. தங்கக் கவசம், வெள்ளிக் கவசம், சந்தனக் காப்பு, விபூதிக் காப்பு போன்றவையும், திரு மண்ணிடல், திருநீறு அணிதல் போன்றவையும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.
5. காப்புப் பணிக்கென ஆண்டவனை ஏத்தும் காப்பு மாலை, கவசங்கள் போன்ற இலக்கியங்கள் பெரிய இலக்கியங்களிலிருந்து உருமாறி வளர்ந்த தனியிலக்கிய வகைகளாகும். பாட்டுடைத் தலைவனையன்றித் தனியாகத் தனக்கென வேண்டிய இக்கவசங்கள் மனனம் செய்யப் பெற்று அன்றாடம் ஓதப் பெறுவன ஆயின.
6. கவச இலக்கியச் செல்வாக்கில் பலரும் பல கவசங் களை உருவாக்கினர். இப்போக்கு புறச் சமயத் தாரிமும் படர்ந்தது.
7. இவ்வாறு 'காப்பு' என்ற சொல்லாட்சி, வழிபாடு, சடங்கு இலக்கியம் போன்றவற்றில் நிறைந்து தமிழர் சமூகத்தில் வேரோடி நிற்பதை இன்று உணர முடிகிறது.

குறிப்புகள்

1. தெய்வசுந்தரம், ஆன்மிகச் சொற்பொழிவு சென்னை 12—10—89
2. செல்வி. அருட்கலை, நேர்காணல், புதுச்சேரி 14—8—90
3. திரு. சிலம்பு. செல்வராசு, நேர்காணல், புதுச்சேரி
4. 19—8—89

திரு. அழகப்பன், கலந்துரையாடல், மதுரை 4—7—89

தெய்வ மணிமாலை

"பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்க வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்"

வேண்டுதல்கள்

"ஆண்டவனோடு வியாபார பேரம் செய்வது பிரார்த்தனையாகாது. நம்முடைய ஆணவத்தைக் கைவிட்டு நாம் நம்மைச் சூன்யமாக்கிக் கொண்டால்தான் பிரார்த்தனை பலிக்கும், வேறு கதியில்லை என்று அவன் பாதங்

களில் சரண் புகுவதுதான் உண்மையான பிரார்த்தனை யாகும். நம்மை நாம் முற்றிலும் அர்ப்பணம் செய்துவிட்டு ஒன்றுமில்லாமல் அவன் முன் நிற்கும்போது நமக்கு வேண்டிய தேகபலமும் மனோபலமும் கிடைக்கிறது, பிற ஜீவன்களுக்குத் தொண்டு செய்யும் உரிமையும் கிடைக் கிறது'' என்பது அண்ணல் காந்தியடிகளின் திருவாக்கு.

வேண்டுதல் என்ற சொல்லிற்குப் பலபொருள்களுண்டு. தமிழ்ப் பேரகராதி வேண்டுதல் என்பதற்கு 1. விரும்புதல் 2. பிரார்த்தித்தல் 3. விரும்பிக்கேட்டல் 4. விலைக்கு வாங்கல் 5. இன்றியமையாததாதல் என பல்வேறு விளக்கந் தருகிறது. இக்கட்டுரையில் வேண்டுதல் என்பது இறை யிடத்தே குறிப்பிட்ட நோக்கங்கருதி வேண்டி, அந்நோக்கம் நிறைவடைந்தபின் நிகழ்த்தப்பெறும் செயற்பாடுகள் என்ற பொருண்மையில் கையாளப் பெறுகிறது. நாட்டுப்புறங் களில் மிகுதியாகவும் நகர்ப்புறங்களில் ஓரளவு குறைந்தும் வழக்கில் காணப்பெறும் வேண்டுதல்களின் தோற்றம், அமையும் விதம், சமூகப் பின்னணி, ஏற்பட்ட சில மாற்றங்கள் அவற்றின் மீதான சமூக மதிப்புகள் போன்ற ஒருசில கூறுகளை இக்கட்டுரை தொட்டுக்காட்ட முயலு கிறது.

வேண்டுதல்களின் தோற்றம்:

தம்மைவிட ஆற்றல் வாய்ந்த ஒன்றை இறையென நம்புவதும் அதற்குக் குறியீடுகள் வைத்துப் போற்றுவதும் மனித வளர்ச்சியில் காணப்பெறும் சில படிநிலைகள். உணர்ச்சிவேகத்தில் ஒரு நோக்கை அடிப்படையாக்கிச் சொற்கள் எழுவதும், நோக்கு அடையப்பெறாது போனால் யாது செய்வது என்பதும் 'இன்னது பிழைப்பின் இது வாகியர்' என்ற பாவரிச் செய்திகள். தம்மை மீறிய ஒரு நோக்கத்திற்காக இறையை நினைப்பதும், அந்நோக்கம்

நிறைவேறியாங்கு, அவ்விறைக்கு இன்னது செய்வேன் என முன்னரே கூறிவிடுவதும் வேண்டுதலின் முதல்நிலை. வேண்டுதல் என்பது அச்சங்கலந்த நிலையிலேயே முதலில் தோன்றியிருக்க வேண்டும். மக்கள் தம் வாழ்வில் விருப்பங்களுக்காக நேர்த்திக்கடன் செய்வதாக வேண்டிக்கொள்வதும், அதனைத் தவறாது நிறைவேற்றுவதும் சடங்காகக் கருதப்படுகிறது..... முனி என்னும் வருத்தும் தெய்வத்திற்கே தொட்டில் காணிக்கைச் சடங்கு சிறப்பாகக் காணப்படுகிறது. கள ஆய்வுகளும் இதனை மெய்ப்பிக்கின்றன. தகவலாளர் திரு. திண்டிவனம் செல்வராசு தாம் சிறு குழவியாயிருந்தபோது திருவிழாக் காணச் சென்ற பெற்றோரின் கவனக் குறைவால் கீழே விழுந்து மயக்க முற்றுக் கிடந்ததாகவும், அதுகாலை அந்த இடத்திலேயே திருக்கோயிலில் கிடத்தி ''மூர்ச்சை தெளிய வேண்டும்; தெளிந்து சுகம்பெறின் ஆயுட்காலம் வரை அக்கோவிலுக்கு ஆண்டிற்கொருமுறை வந்து திருவிழாவின்போது அக்கோவிலின் வழக்கத்திற்குரிய காணிக்கையைச் செலுத்துவதாகவும் பெற்றோர்கள் வேண்டிக் கொண்டதாகவும், தொடர்ந்து பல ஆண்டுகள் அவ்வாறே நேர்த்திக்கடன் நிறைவேற்றப் பெற்றதாகவும்'' குறிக்கின்றார்[1]. இக்காரணங்களால் தம் முயற்சியில் கைகூடாத நோக்கங்களுக்காக, விருப்பங்களுக்காக வேண்டுதல் உருப்பெறுவதை அறிய முடிகிறது. நோக்கத்தை அடியொற்றி வேண்டுதல்கள் பலவகையாக இருக்க வாய்ப்புண்டு. தன்னுடைய சுயதேவை, எதிரியை வெல்லுதல், பிறர் நலம் விழைதல் போன்ற பல்வேறு விண்ணப்பங்கள் வேண்டுதல்களாக மலர்கின்றன. தனக்காக வேண்டுதல், பிறருக்காக வேண்டுதல் என்ற இருநிலையில் வேண்டுதல்கள் அமைகின்றன. தேவை இன்னது என்பதைக் கூறி, தேவை கைவரப் பெற்றதும் மாற்றாக இதனைச் செய்வது என்ற முன் கூட்டிய சிந்தனைகளுடன் அமையும்

வேண்டுதல்கள், இயல்பான வழிபாட்டிலிருந்து அழுத்தம் பெற்ற வேறொரு நிலை என்பதை உணர முடிகிறது. இவ்வேண்டுதல்களும் காலம், இடம், சமூகம், பொருளியல் போன்ற பலவற்றால் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வந்திருக்கின்றன. தேவை, விருப்பம், அச்சம் போன்ற வற்றால் பல்வேறு சூழல்களில் வேண்டுதல்கள் ஆலயங் களில் நிகழ்கின்றன.

மரபுவழிச் செயற்பாடுகள்:

முழுக்க முழுக்க நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றங்கொள்ளும் வேண்டுதல்கள் மரபு சார்ந்தும், சூழல் சார்ந்தும் வேறு படுகின்றன. கள ஆய்வின் மூலம் சேகரிக்கப் பெற்ற செய்திகளில் குலதெய்வங்களுக்கான வேண்டுதல்கள் மிகுதியாக உள்ளன. சான்றாகத் திருமண அழைப்பிதழின் முதலழைப்பிதழ் குல தெய்வம் முன் வைக்கப்பெற்று அதன்பிறகே பிறருக்கு வழங்க பெறும். இஃது இயல்பான வழிபாடு. ''எந்தவிதமான விக்கினமும் இல்லாமல் திருமணம் நடத்தல் முதலாவது உன் சன்னதிக்கு மணமக்கள் வருவரென வேண்டுதலோ குழந்தை பிறந்த வுடன் உன் சன்னதியில் மொட்டையடித்து, உன் பெயரிடு வோமெனவேண்டுதலோ'' நோக்கங்கருதிய, வேண்டுதல் ஆகும். இன்னமும் இம்முறைமை வழக்கில் காணப் பெறுகிறது. வழக்கமான சடங்குகளிலிருந்து மாறுபட்டு நேர்ந்து கொள்ளல், நேர்ந்தமை பலித்ததும் காணிக்கை செலுத்துதல் என்ற வழிமுறை இங்கு செயற்படுத்தப் பெறுகிறது.

குலதெய்வங்களை வணங்கி வேண்டுதல் என்பது மரபு சார்ந்தது. வேண்டிக் கொள்பவர் அல்லது பலன் பெற்றவரின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லாமல் குல மரபு என்ற பெயரால் கட்டாயமாக்கப்பெறுவது. ஏனைய வேண்டுதல்

களில் காண பெறும் மாற்று ஏற்பாடுகள் இங்கே செல்லுபடியாகாது. குடும்பம் சார்ந்த இத்தகையமரபு நிலை வேண்டுதல்களில் குல வழக்கத்திற்கேற்பனே நேர்த்திக் கடன்களாக வழங்கப்பெறும் காணிக்கைப் பொருட்கள் அமையும். குலதெய்வத்தின் மீதான பற்றும் மரபு காத்தலும் இங்கு இன்றிமையாதனவாகின்றன.

சமயமும் நம்பிக்கையும்:

குலதெய்வங்களிலிருந்து விலகி ஆற்றல் வாய்ந்த பிற தெய்வங்களிடம் வேண்டுதல் புரிவது அடுத்த படிநிலை யாகும். தன் சமயத்திற்கேற்ற வண்ணம் அத்தெய்வங் களை வேண்டுவது இதிலடங்கும். ''அம்மை நோய் வந்தவர்கள் தம் நோய் குணமாக ஆயிரம் கண்களையுடைய பித்தளைப் பானைகளை இருக்கண்குடி மாரியம்மனுக்குக் காணிக்கையாக்குவதாக வேண்டிக்கொள்வர்''[2]. என்ற குறிப்பும், இதனையொத்த பிற வேண்டுதல்களும் உற்று நோக்குதற்குரியவை. கல்வி தொழில்மேன்மை, பதவியுயர்வு, திருமணம், மக்கட்பேறு, நோய்நீக்கம், செல்வம் பெறல் போன்ற நோக்கங்களுக்காக அவ்வத்தேவைகளை நிறை வேற்றக் கூடியதாக நம்பப்பெறும் தெய்வங்களை வேண்டுவது இன்று பரவலாகக் காணப்பெறும் ஒருமுறை ஆகும். சான்றாகக் குடந்தையருகேயுள்ள திருமணஞ்சேரி என்ற ஊரிலுள்ள திருக்கோவில் சென்று வேண்டி வழிபட்டால் திருமணம் எளிதில் நிகழுமென்றும், மன்றல் முடிந்ததும் அவ்வூர்ச்சென்று முறைப்படி நேர்த்திக்கடனை நிறைவேற்றல் வேண்டும் என்றும் கூறப்படுவது குறிக்கத் தகுந்தது. தெய்வங்கள் பற்றிய தொன்மங்களும் இங்கு கவனிக்கத்தக்கவையாக உள்ளன.

குலதெய்வங்களும், தம் சமயத்தெய்வங்களும் பலன் தரா விடத்து, நம்பிக்கையினடிப் படையிலும் பிறருடைய

ஆலோசனைகள் அடிப்படையிலும் பிறசமயத்தெய்வங்களை நாடி வேண்டுதல் அடுத்தபடி நிலையாகும். இந்து மதத்தினர் பலர் நோய் நீக்கம், மகப்பேறு போன்ற இன்றியமையா வேண்டுதல்கள் காரணமாக நாகூர் தர்காவிற்கும், வேளாங்கன்னி மாதா கோவிலுக்கும் பெருவாரியாகச் செல்வது கண்கூடு. மனித மனத்தின் அதீத நம்பிகைக்குத் தமிழகம் ஆட்பட்டிருப்பதைச் சுட்டவரும்போது தமிழர்கள் பழங்கடவுள்களையும், புதிதாகப் புகழ்பெற்ற மேல் மருவத்தூர் அருள்மிகு சுயம்பு ஆதிபராசக்தி போன்ற தெய்வங்களையும், நாகூர், வேளாங்கன்னி போன்ற இடங்களில் பிற சமயத் தெய்வங்களையும், தேவை யேற்படின் அருள்மிகு சபரிமலை ஐயப்பன், கொல்லூர் மூகாம்பிகை போன்ற பிற மாநிலத் தெய்வங்களையும் வணங்குவதை விளக்குவார் சுப. அறவாணன்.[3] இவை யாவும் தம்தேவைகருதிய வேண்டுதல்களுடன் அமையும். மேல் மருவத்தூரில் திருக்கோவிலில் அங்கப்பிரதட்சணம் செய்தல், வேண்டிக்கொண்டதற்கேற்பச் சபரிமலைக்குக் குறிப்பிட்ட ஆண்டுகள் இருமுடி தாங்கிப் பயணித்தல் போன்றவை குறித்தற்குரியன. இதிலே குறிக்கத்தகுந்த பிறிதொரு கூறு சுற்றுச்சூழல் என்பதாகும். சான்றாக முருகன் கோவில் களில் காவடியேந்தி வேண்டுதல் நிறைவேற்றுவது நடை முறை. சென்னைப்பகுதியைச் சார்ந்த ஒருவர் வீட்டிலிருந்த வாறே முருகனுக்குக் காவடியெடுப்பதாக நேர்ந்து கொண் டிருப்பர். நிறைவேற்றும்பொழுது அருகிலுள்ள முருகன் கோவிலில் நேர்த்திக்கடன் செலுத்துவாரேயன்றி இதற் கெனத் திருச்செந்தூருக்கோ, பரங்குன்றிற்கோ செல்வ தில்லை. ஊர் குறிப்பிடப்படாமல் பொதுவாக ஒரு தெய்வஞ்சுட்டி வேண்டுவதால் இதனை எளிதாக்க முடிகிறது. இம்முறைமையே, வேண்டுதல் நிகழ்வுகளில் தமக்குச் சாதகமாகச் சில மாற்றங்கள் செய்துகொள்ளக் காரணமாயிற்று.

வேண்டுதல்கள் அமையும் முறை:

வேண்டுதல்கள் பலதரப்பெற்றவை. எனினும் அவற்றை உடல்வளமை, பொருளாதாரம், பரிகாரத்தேவை, கோவில் வழிபாட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்துக் காண இயலும். மனவேட்கையிருப்பினும் உடல் வழிப் பிரார்த்தனை சிலருக்கு இயலாமற்போகும். காவடிதூக்கல், அங்கப்பிரதட்சணம், வழிநடைப் பயணங்கொள்ளல், மதுக்குடம் சுமத்தல் போன்ற சில வேண்டுதலை அடியொற்றிய வழிபாடுகள் உடல்வளம் குன்றியவர்களால் ஆற்றமுடியாதவை. உள்ளம் விரும்பியவாறு செயல்படுதல் என்பதைவிட உடல் இடந்தருமாப்போலே செயல் படலே இவண் சாத்தியமானது. 3 வருடங்கள் வரை மட்டும் தொடர்ந்து விழாவில் பங்கேற்றுக் காணிக்கை தருதல் போன்ற செய்திகள் கவனத்திற்குரியவை. இரண்டா வதாக, வேண்டுதல்களில் பெருமிடம் கொள்வது பொருளா தாரம். ஒரே பொருள் காணிக்கையாக வழங்கப்பெறும் போது அவரவர்தம் பொருளாதாரத்திற் கேற்ப அவை மாறு படுகின்றன. குழந்தையுருவங்கள் காணிக்கையாக வழங்கப் பெறும்போது மண், வெள்ளி, பிற உலோகம் என மாறுபட்ட மைவதும், காணிக்கைகளும் குத்து விளக்குகளின் உயரம், அமைப்பு, மதிப்பு, உலோகம் மாறுபட்டமைவதும் ஈண்டு கவனத்திற்குரிய. காணிக்கையாகத் திருக்கோவில் உண்டியல் களில் போடப்பெறும் பல்விதப்பெருட்கள் இதனை அரண் செய்யும். ஒரே தன்மையிலான வேண்டுதல்களில் அவரவர் செலவிடுமியல்பு கருதி இவ்வேறுபாடுகள் வேண்டுதல்களில் இடம்பெறுகின்றன. அதனையொட்டிய பிற வேண்டல் களும் காணக்கிடக்கின்றன. தேவையென்பது ஒரு புற மிருக்க, வேண்டுவாரின் பொருளியல் நிலை வேண்டுதல் களை நிர்ணயிக்கிறது. பெரிய திருக்கோவில்களில் வேண்டு தலின் நிமித்தம் நிகழ்த்தப்பெறும் திருக்கல்யாணம்,

பொட்டுக் கட்டுதல், உலாக்கள், கவசஞ்சார்த்தல், வைரக் கிரீடம், சந்தனக்காப்பு அணிவித்தல் போல்வன இதற்கான எடுத்துக்காட்டுக்கள். அதைப்போன்றே நாகதோசம் நீக்கிடல் என்ற பெயரால் வெள்ளி அல்லது தங்கத்தால் உருவான நாகவுருவை உண்டியலில் சேர்ப்பித்தல் பொருளியலை அடிப்படையாகக் கொண்டது.

பிற தேவைகள்:

பரிகாரத்தேவை என்பது வேண்டுதலில் தலையாயது. இங்கே பொருளாதாரமோ, உடல்வளமோ கணக்கிடப்படுவதில்லை. சில நாட்டுப்புறக் கோவில்களில் மண்ணாலான பொம்மையுருக்கள் காணப்படுவதும், மலைப்படிகளில் உருவச் செதுக்கல்கள் இடம்பெறுவதும் இச்செய்தியை வலுவாக்கும். பணக்கார வீட்டார் சிலர் சில கோவில்களில் நேர்ந்துகொண்டதற்கு இயைய, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வீடுகளில் பிச்சையேந்திக் காணிக்கை வழங்குதல் இன்றும் பரவலாக காணப்பெறும் ஒரு வேண்டுதலாகும். பொருளாதார வசதி என்பன பின்தள்ளப் பெற்று, பரிகாரத்தேவை முன்நிற்பதை இங்கு உய்த்துணரமுடிகிறது. அதைப்போன்றே அங்கப்பிரதட்சணம், கிரிசுற்றல் போன்றவைகளும் பரிகாரத் தேவையின் முதன்மைப் பாட்டால் நிகழ்பவை. **தம்மைத்தாழ்த்திக் கொண்டாயினும் வேண்டியதைப்பெறவிரும்பும் மனித மனத்தின் வேண்டல் வெளிப்பாடுகளே இவை.** இதைப்போன்றே வசதி மிகுதியும் அமைந்தவர்கள் கூடப் பரிகாரத்தேவையை அடியொற்றிக் காணிக்கைப் பொருளிடுதலை காணமுடிகிறது. உடலுறுப்பு ஒன்றின் நலங்கருதி கால், கை, கண் என அவ்வுறுப்புப் போன்ற உலோக உருவை அளித்தல், தேள், பாம்பு உருவங்களைக் காணிக்கையாக்கல் வயிற்றுநோவு கண்டவர் வயிற்றின்மேல் மாவிளக்கை வைக்கச்செய்தல் போன்ற பல செய்திகள் இதற்கு அரணாணவை. இங்கும் உடல்வளம்

அல்லது பொருளாதாரம் முதன்மைப்படுத்தப்படாமல் வேண்டுதலின் போக்குக்கருதி நேர்த்திக்கடன் செலுத்தப் படுதலை உணரலாம்.

இறுதியாகத் திருக்கோவில் வழிபாட்டுமுறைகளுக் கேற்ப வேண்டுதல்கள் மாறுபடும் போக்கைக் கவனிக்க வேண்டும். வேண்டுபவன் விருப்பு வெறுப்பு, பொருள், உடல் இவற்றைவிட வேண்டுப்படு தெய்வங்குடி கொண்டு ஆலயமுறைமை அல்லது வழிபாட்டு முறைமை இவண் முன் நிற்கும். வேண்டுபவர் விரும்பினார் என்பதற்காகப் பிள்ளையாருக்குக் காவடியோ, சிவன்கோவிலுக்கு இரு முடியோ, பெருமாள் கோவிலுக்குத் தீச்சட்டியோ வருவ தில்லை. அதைப்போன்றே நாட்டுப்புற ஆலயங்களில் கோழி, ஆடு, பன்றி, மாடு போன்றவை பலியிடப்பெறு வதும் சாராயம், சுருட்டு படைக்கப்பெறுவதும் அடங்கும். அவ்வக்கோவிலுக்கு அல்லது தெய்வங்களுக்கேற்பவே நேர்த் திக்கடன்களின் பாகுபாடும் அமைகின்றன என்பதனை இதனாலறிய முடிகின்றது. அதைப்போன்று தமிழகத்தின் வடமாவட்டங்களில் தெருக்கூத்து ஏற்பாடு செய்யப்பெறு தலைக் குறித்தல் வேண்டும். கட்டைக் கட்டிக்கொண்டு பாவாடைராயராக உருத்தாங்கி வேண்டுதலை நிறை வேற்றும் பழக்கம் இன்றும் புதுவை பூரணாங்குப்பம் பகுதியில் இடம்பெறுகிறது. குவாகத்தில் உள்ள அரவான் கோயிலில் (ஆடவரில்) சிறுவர் முதல் பெரியவர் வரை பல்வேறு வேண்டுதல்களுக்காக முதல்நாள் தாலி கட்டிக் கொள்வதும், மறுநாள், அறுப்புவிழாவில் பங்குபெறுவதும் இதற்கு நல்லசான்றாகும். சிலபொதுநேர்த்திகள் இதற்கு விதிவிலக்கானவை. சான்றாகக் கவசஞ்சார்த்தல், பொங்க லிடல், விளக்குக் காணிக்கை போன்ற சிலவற்றைக் குறித்தல் தகும். சமயங்களில் வழிபாட்டுக் கலப்புகள் ஏற்பட்டு சில அம்மன் கோயில்களுக்குக் காவடியெடுத்தல்,

முருகன் கோவில்களில் பூக்குழி இறங்கல் போன்றவை ஒரே வழி நிகழ்கின்றன. எனினும் வழிபாட்டு மரபினை மீறாத வேண்டற்பாங்குகளே மிகுதியானவை.

மாற்றங்கள் சில:

வேண்டி நின்றாரின் புறச்சூழல் காரணமாக நேர்த்திக் கடன் செலுத்த இயலாவிடத்து அதற்கென்று சில பரிகாரங் களையும் மாற்று ஏற்பாடுகளையும் செய்யத்தலைப் பட்டனர் சிலர். காவடி தூக்கிவருவதாக நேர்ந்து கொண்டோர் சூழல் காரணமாக அதற்குப் பதிலாகப் பணத்தை உண்டியலில் இட்டதை ஒருநாள் (24—06—88) மயிலத்தில் காண நேரிட்டது, முற்குறித்தாங்கு முருகன் எனப் பொதுப்பட நேர்ந்துகொள்ளாமல் ஊர்குறித்தே வேண்டிவிட்டு, அவ்வூர் செல்ல இயலாமல் வேறோர் ஊரில் முருகன் கோவில்களில் காணிக்கை செலுத்துவண்டு. திருப்பதி அருள்மிகு ஏழுமலையானுக்கு வேண்டுதல் செய்து நோக்கு, நிறைவானவுடன் அங்குச் செல்லமுடியாத வேளை களில் அரியக்குடி பெருமாள் கோவில், ஒப்பிலியப்பன் கோவில் போன்ற திருமாலுறையும் திருத்தலங்களில் முடிக் காணிக்கை, கவசம் போன்ற பொருட்காணிக்கை செலுத் துதலைக் களஆய்வில் காணமுடிந்தது. இவ்வாறு செய்வோர் ''திருப்பதிக்கு வேண்டிக்கிட்டு இங்க செய்யலாமுங்க: ஆனா இங்க வேண்டிகிட்டு திருப்பதில செய்யக்கூடாதுங்க''. என்று சமாதானம் செய்ததையும் இங்கே குறித்தல் வேண்டும்.[4] சமூகப் பின்னணி காரணமாகப் பழக்க வழக்கங் களும் மரபுகளும் மாறுபாடுகளுக்கு உள்ளாதல் இயல்பு. இறந்தவருடைய மகன்கள் அனைவருமோ அல்லது தலை மகனோ தலைமுடி களைதல் என்பது இறப்புச் சடங்குள் ஒன்று. ஆயின், வேலைக்குச் செல்லல் அல்லது விருப்ப மின்மை போன்ற பல்வேறு காரணங்களால் மீசையை

மட்டும் நீக்கிக்கொள்வாருண்டு. மீசையற்றவர்கள் தலையிலிருந்து ''சாஸ்திரத்திற்காக'' ஒருமுடிக்கற்றையை மட்டும் நீக்குதலும் வழக்கிலுண்டு. இதைப்போன்று வேண்டுதல்கள் சமூகச் சூழல் கருதி மாறுபட்டமைகின்றன. குலதெய்வம் எழுந்தருளியுள்ள சிற்றூருக்கு செல்ல வழியற்றோர் அல்லது விழையாதோர் வேண்டுதல் பணத்தை அனுப்புவதையும் பல இடங்களில் கேட்டறிய முடிந்தது. கோவிலுக்கு வந்து உண்டியலில் சேர்க்காமல் காசுக்கட்டளை, காசோலை இவற்றின் வழியே ஆலயங்களுக்கு வரும் காணிக்கைகளில் பல வேண்டுதலுக்கான மாற்று ஏற்பாடுகளே. இதைப் போலவே நேர்த்திக்கடன் செலுத்த இயலாச் சூழலில் ஒறுப்புக் கட்டணம் கட்டலும், மாற்றேற்பாடும் நிகழ்வது புதுவைப் பகுதிகளிலும் காணப்பெறுகிறது. உடல்நலம் குன்றிய நிலையில் பூரணாங்குப்பம் அருள்தாசு என்பார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது இவரின் பெற்றோர் பாவாடைராயராகக் கட்டை கட்டிக் கொண்டு அம்மன் கோவில் திருவிழாவில் நேர்த்திக்கடன் செலுத்துவதாக வேண்டிக் கொண்டனர். அந்த ஆண்டுத் திருவிழாவின்போது பல சூழல்களில் திருவிழாவன்று அவரால் கட்டைகட்டிக்கொண்டு உரிய முறையில் நேர்த்திக்கடன் செலுத்துதல் இயலாமற் போனது. மறு ஆண்டுத் திருவிழாவின்போது நிறைவேற்றுவதாகக் கூறி, அம்மனிடம் வேண்டிக்கொண்டு கோவிலுக்கான ஒறுப்புக்கட்டணம் உருபாய் 1-50 செலுத்தப்பட்டது. சில நேரங்களில் கட்டை கட்டுதலுக்குப் பதிலாகக் காவு கொடுத்தல் என்ற பெயரில் ஆட்டுக்கிடா அறுக்கப்பெற்று காணிக்கை நிலை மாற்றிக் கொள்ளப்பெறும். ஆயுட்காலம் வரை குறிப்பிட்ட நாளில் வேண்டுதற் காணிக்கை செலுத்தும் வேண்டுதல் வரிகளை வாழ்வியற் சூழலுக்கேற்ப சில ஆண்டுகளாக மாற்றிக்கொள்ளும் போக்கும், அடியோடு நீக்கிவிடும் போக்கும் காணக்கிடக்கின்றன. இதனால்

சமூகத்தின் புறத்தாக்குதல்களுக்கு வேண்டுதல்களும் இலக்காகியுள்ளமை புலனாம்.

இவ்வாறாக வேண்டிக்கொள்வாரின் போக்குகளுக்கேற்ப இலக்கிய வரிகளும் உருவாகின. பொதுநிலையில் கவசங்கள் உருவாவதைப் போலத் தத்தம் தேவைக்கேற்ப இலக்கியங்கள் எழுந்தன. மாலை, திரட்டு, விண்ணப்பம், சமயமாலை, அட்டகம், பதிகம் போன்ற பல்வேறு பின்னொட்டுகளில் ஏராளமான நூல்கள் வெளிப்போந்தன. திருமண நாளில் ஆண்டாள் திருமணம், மீனாட்சி திருமணம் என்பன போன்ற சிறு நூல்களை வெளியிடுவதும், மீனாட்சி திருக்கல்யாண நிகழ்வின்போது ஒரு சிறு பையில் மஞ்சள்கயிறு, குங்குமச் சிமிழ் போன்றவற்றை வைத்து வழங்குவதும் நிகழ்வுகளை ஒட்டிய செயல்பாடுகளாகும். 'சுமங்கலி நோன்பின்போது' குறிப்பிட்ட எண்ணிக்கையில் சுமங்கலிப் பெண்களை வரவழைத்து அவர்களுக்குத் தாம்பூலம் வழங்குவது, தேங்காய் பழம் வழங்குவது சட்டைத்துணி அல்லது புடவை வழங்குவது போன்று பல நிலைகளைக் காணமுடிகிறது.

இறைவனிடம் தேவைக்கருதிய சூழலில் இவ்வாறு 'அடைக்கலப்' பொருளாய் நின்று 'விண்ணப்பம்' செய்வது குறிக்கத்தக்கது. 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' போன்ற பதிகங்கள் கவனிக்கத்தக்கவை. இவ்வாறு இலக்கியங்களாக மலர்வுற்ற வேண்டுதல் பாடல்கள் பரவலாயின. பாவை நோன்பை மேற்கொண்ட பெண்கள் பாடுவதாக அமைக்கப் பெற்ற திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பாடல்கள் பெண்டிரால் மட்டுமின்றி ஆடவராலும் பாடப்பெறுகின்றன. அப்பாடல்களில் மழை வேண்டால் இடம்பெற்றிருப்பதும் இறையின் அருமைபெருமைகள் பேசப்பெற்றிருப்பதும் இதற்கான காரணங்கள் எனக் கொள்ளவியலும். இறையை நோக்கி அருட்பிரகாச வள்ளலார் வேண்டுகின்ற போது,

''பயந்துயர் இடர்உள் மருட்சியா திய இப்
பகை எலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்த நின் அருளார் அமுதளித்து அடியேன்
நாடி ஈண்டு எண்ணிய எல்லாம்
வியந்திடத் தருதல் வேண்டும் ஈதெனது
விண்ணப்பம் நின்திரு உலத்தே
வயந்தாக் கருதித் தயவுசெய்து அருள்க
வள்ளலே சிற்சபை வாழ்வே''

என்பது போன்ற பாடல்களை புனைகின்றார்.[6] இப்பகுதி பிள்ளைப் பெருவிண்ணப்பம் எளற தலைப்பிலமைகிறது. இவ்வாறாக இலக்கிய வரிகளாக வேண்டற்பாடல்கள் பல எழுந்தன. பலராலும் பாடப்பெற்றன. பாடப்பெற்று வருகின்றன.

கட்டுரைச்செய்திகளிலிருந்து பெற்றவை:

1. வேண்டுதல் என்பது நேர்த்திக்கடன், பிரார்த்தனை, காணிக்கை செலுத்துதல் என்ற நிலையில் வழிபாட்டு நிலையாக வழக்கிலிருந்து வருகிறது.
2. அச்சம், இயலாமை, எதிர்பார்ப்பு, தேவை போன்ற பலகாரணங்களால் வேண்டுதல்கள் தோற்றங்கொள் கின்றன. பெரும்பாலும் வேண்டப்பெறும் குழலுக் கேற்ப அப்பொழுதே காணிக்கை நிலையும் சுட்டப் பெறுகின்றது.
3. ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்தும் வேண்டல் கள் மரபுநிலை சார்ந்து குலதெய்வங்களிடத்தும், சக்திவாய்ந்த தம் சமயத் தெய்வங்களிடத்தும், பிற மாநிலத் தெய்வங்களிடத்தும் நுவலப்பெறுகின்றன.

4. வேண்டுதல்களை உடல்வளம், பொருளாதாரம், பரிகாரத் தேவை, கோவில் வழிபாட்டமைப்பு என்ற தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துதல் எளிதாகின்றது. அவ்வத்தலைப்புக்குத்தக்க வேண்டுதல்களின் அகல நீளங்கள் தம்முள் மாறுபாடுகளைக் கொண்டுள்ளன.

5. காலப்போக்கில் காணிக்கை செலுத்தப்பெறும் இடம், காணிக்கையாக்கப் பெறும் பொருள், சூழல் போன்ற வைகளும் பல்வேறு மாற்றங்களைப்பெற்றுத்திகழ் கின்றன.

குறிப்புகள்

1. திண்டிவனம் ந. செல்வராசு கூறிய த்கவல், புதுச்சேரி 11—11—1987.
2. சண்முகவேல், மாரியம்மன் திருவிழாவைப் பற்றிய எம்.பில் குறிய ஆய்வேடு தமிழியல்துறை, புதுவைப்பல் கலைக்கழகம், புதுச்சேரி, 1988.
3. க.ப. அறவாணன், நாட்டுப்புறவியல் கருத்தரங்கக் கலந்துரையாடல் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1987.
4. விசயராகவன் நேர்காணல், அரியக்குடி. 10—11—1981.
5. அருள்தாசு, நேர்காணல், பூரணாங்குப்பம் 08.02.89
6. அருட்பிரகாச வள்ளலார், திரு அருட்பா, பிள்ளைப் பெருவிண்ணப்பம். பாடல் 131.

அருள்மிகு அய்யனார்

நாராணனின் மருமகனே நமசிவாய புத்திரனே
நாம்வணங்கும் சாத்தை அய்யனே!
பூரணை காந்தனே! புஷ்களை நாதனே
பொன்னுலகம் காக்கும் மன்னவா!
அடைக்கலம் காத்தாரும் அன்பான சன்னாசி
அதிகாரக் காளியாத்தா
படைக்கலச் சகாதேவன் பண்பான கன்னியரும்
பரிவார முன்னோடியும்
இடைகொஞ்சும் நல்லியுடன் எங்களின் குழந்தையரும்
எடுப்பாக வீற்றிருக்க
மடைதிறந்த வெள்ளமென யானையின் மீதேறி
வரவேணும் எந்தனருகே.

கலப்புகள்

தமிழரிடத்தே காணப்பெற்ற காணப்பெறும் இறை யுணர்விற்கு என்றும் குறைவேயில்லை. காலங்காலமாக மக்களிடையே காணப்பெற்ற இறைநெறிகள், வழிபாடுகள்

கோயில் மற்றும் பிற அமைப்புகளில் மாற்றங்கள் பல காணப் பட்டுள்ளன. பழந்தமிழரிடையே காணப் பெறாத சாம்பிராணியும் கற்ப்பூரமும் வழிபாட்டில் இன்று பெருமளவில் பயனாகின்றன. தெய்வங்கள், வழிபாடுகள், வேறு சில கூறுகள் பல்வேறு காரணங்களுக்காகப் பல கலப்பு களால் உருவாகின. கலப்புகளுக்கான காரணத்தைக் கண்டறியவும் அதன்வழி, சமூகச் செய்திகளை இனங் காணவுமே இக்கட்டுரை முயல்கிறது.

சங்கம் உட்படப் பழங்காலத்தில் பல தெய்வங்கள் வணங்கப்பெற்றன. அவற்றிடையே, இப்போது காணப் பெறும் சிறுதெய்வம், பெருந்தெய்வம் என்ற பிரிப்புகள் காணப் பெறவில்லை. சான்றுவருமாறு:

'பழையோள் தொன்மைக் காலத்திலிருந்தே தமிழர் வழிபட்டு வந்த தாய்த்தெய்வம். கொற்றவை சங்கத் தமிழர் வழிபட்ட வெற்றிக்குரிய தெய்வம். பார்வதி (மலைமகள்) வைதீக நெறியினர்' வழிபட்ட சக்தி. சங்க காலத்தில் இம் மூன்றும் ஒன்றாயின ... ... இதனை.

''மலைகள் மகனே, மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவைச் சிறுவ
இழையணி சிறப்பின் பழையோள் குழவி''

என்னும் திரு முருகாற்றுப்படையால் அறியலாம்.[1]

எனினும் தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை பேசப்படும் நடுகல் வழிபாட்டிற்கும் இவ்வழிபாட்டிற்கும் தொடர்பில்லை. நடுகல் வழிபாடு பிற்பாடு குல தெய்வ மாகவும் சிறுதெய்வமாகவும் மாறியது. ஆயினும் பெருந் தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தனித்தனியே அமைவுற்றிருந்தன. இவற்றி

னிடையே எவ்விதக் கலப்பும் இருந்தமை பாடல்கள் மூலம் தென்படவில்லை.

நடுகல் எடுத்தல் என்பது வீரர்க்கு மட்டுமே அவ்வீரர் விரும்பியவற்றைப் படைத்து நினைவஞ்சலி செலுத்தப் பெற்றமைக்குச்சான்றுகள் உண்டு. அவ்வீரனுடன் தொடர்பு கொண்ட உறவினர்கள் மட்டுமே தம் குலதெய்வமாக அந்நடுகல் வீரனைப் போற்றினர். அவ்வேளைகளில் அவ் வீரனுக்கு உகந்த கள், சாராயம் பிற்காலத்தில் சுருட்டு, போன்றவை படைக்கப் பெற்றன. இப்படி ஒரு குறிப்பிட்ட குடும்பத்தார் அல்லது இனத்தார் மட்டுமே வணங்கிய குல தெய்வம், நம்பிக்கை, அச்சம் இரண்டின் அடிப்படையில் சிறு தெய்வ வழிபாடாக முகிழ்த்தது. நடுகற்கள் உள்ள வேடியப்பன் கோவில், ஐயனாரப்பன் கோவில், மீனாரப்பன் கோவில் போன்றவையும் இதுபோன்ற தெய்வங்கள் மீது புனையப்பெற்ற கதைப் பாடல்களின் தலைவர்களான சுடலைமாடன், மதுரைவீரன், காத்தவராயன், முத்துப் பட்டன், கட்டபொம் மன் போன்றோரைப் பற்றிய படைப்பு கள் போன்றவையும் இதனைத் தெளிவுபடுத்தும். எனவே ஏறத்தாழ வைதிக நெறியினர் புராண, இதிகாசக் கடவுளர் களையும், பிறர் மேற்சுட்டிய சிறுதெய்வங்களையும் வணங்கி வந்துள்ளனரென்பது புலனாகிறது. இவ்விரண்டும் கலந்து நிற்கும் பான்மையை இப்போது காணமுடிகின்றது. ''முழு முதற் கடவுளாகிய சிவபெருமானையன்றி, வேறு நம் போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லிலும் செம்பி லும் செய்துவித்துக் கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதும் குற்றமாவதாம். மாரி, காளி, இசக்கி, கறுப்பண்ணன், மதுரை வீரன் முதலிய ஆவிகளெல்லாம் நம்போன்ற குற்ற முடைய சிற்றுயிர்களாதலின் அவற்றைத் துணையாகக் கொள்வது ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணைக்குக் கூட்டிச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்வதற்கே ஒப்பாம்.

விவிலிய நூலிலுங் கடவுளுக்கு மாறனே உருவங்களை வணங்குதல் ஆகாதென்று சொல்லப்பட்டதே யல்லாமல் கடவுளின் திருவுருவத்தை வழிபடுதல் வழுவென்று கூறப் பட்டதில்லை. ஈசஆவசிய உபநிடதத்தின் ஒன்பதாவது மந்திரமும் ''அறியாமையோடு கூடிய சிற்றுயிரின் வடிவங் களை வணங்குபவர்கள் இருள்நிறைந்த நிரயத்திற்குச் செல் கின்றார்கள்'' என்று இங்ஙனமே கூறுகின்றது'' என்பார் மறைமலையடிகள். இவ்வாறு மேல்தட்டுவர்க்கம் தமக் கென்று ஒரு வழிபடுமுறையை வைத்திருந்தமை உணரத் தக்கது. ஆனால் நாட்டுப்புற வழிபாடுகளில் பெருந்தெய்வக் கலப்பும், பெருந்தெய்வங்களுக்குள் நாட்டுப்புற வழக்காறு களின் கலப்பும் உண்டாகியுள்ளன. தேவையென்று தோன்றிய காலத்தில் பிறருடைய வழிபாட்டுக் கூறுகளை யும் தம்முள் ஈர்த்துக் கொள்ளவேண்டிய தேவை வைதீக சமயத்திற்குக் கட்டாயமாயிற்று என்பது பலரின் கருத்து. சான்றாக, ஆ. வேலுப்பிள்ளை.

''இந்துமத வளர்ச்சியிற் குறிப்பிடக்கூடிய ஒன்று யாதெனில் அது பிற மத நம்பிக்கைகளையோ, வழிபாட்டு முறைகளையோ கண்டனஞ்செய்து முற்றாக ஒதுக்காமை யாகும். இயன்றவரையில் பிறமதக் கடவுளரோடும் வழி பாட்டு முறைகளோடும் தன் கடவுளரையும் வழிபாட்டு முறைகளையும், இணைத்துச் சிறிது சிறிதாகத் தன் செல்வாக்கை நிலைநாட்டல் இந்துமத வரலாற்றில் பன்முறையும் நடந்தது. இந்து மதத்தில் புராணக் கதை களும், கடவுளரும், கடவுளர் மூர்த்தங்களும் நிறைய இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமென்பர்''[3]. என்று கூறுவது உற்று நோக்கற்பாலது. வைதீக நெறியினரின் நெகிழ்ச்சித் தன்மையும் பிறருடைய வழிபாட்டின் கூறுகளை இணைத்துக் கொள்ளும் போக்கும் கலப்புகளுக்குக் காரணம் என்பர். ஆயினும் பெருந்தெய்வ, சிறு தெய்வ

சிறு தெய்வ வணக்கங்கள் கலந்தமைக்கு இதனை வலுவான சான்றாகக் கொள்ள இயலவில்லை. இதனைத் திருக்கோயில் நடைமுறைகள், உருவுகள், வழிபாடுகள் வழியே காண முடிகிறது.

இருவகைத் தெய்வங்களும் கலப்புகளும்

சிறு தெய்வங்களை வைதீக நெறியிவர் ஏற்காத கால கட்டத்தில் சிறு தெய்வங்களை மேல்நிலையாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் நடுகல் வீரர்கள் பெருந் தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப் பெற்றனர். தமிழர் நடுகல் வீரரைப் பாடிய தன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலையும் (251) மலைபடுகடாமும் (386-391) சுட்டும். பல்லவர் கால நடுகற்கள் பல இன்றும் வழிபடப் படுவதையும் காண முடிகிறது. அதில் ஒன்றான வேடியப் பனை,

காட்ட வளைத்து வில்லாய்ப் பூட்டி
தானாய் கோபவிடும் செந்ததை வேடுவா
கோ கோகுமரா கொலுவுக்கு அலங்காரா
நீதி வாகனா நித்திய அவதாரா
நாராயணா, நரசிம்ம அவதாரா
அரிக்கும் சிவனுக்கும் உற்பத்தியாய்ப் பிறந்த
அரிமால் புத்திரா! 'ஐயனாரப்பா!'
வேட்டுவத்தலைவா! வேடியப்பா[4]

எனப் பாடுகின்றார். நடுகற் கல்வெட்டுகளில் காட்டப் பெற்றுள்ள வீரசுவர்க்கக் காட்சிகளில் நடுகல் வீரர்கள் சிவனுடனும் விஷ்ணுவுடனும் பிரம்மாவுடனும் புத்தருடனும் ஒன்றி விடுவதான நிலையினைக் காண முடிகிறது.[4] நடுகல் வீரன் காத்தவராயன் போன்றாருக்குக் கோவில்களும், திருவுருக்களும், வழிபாடுகளும் உருவாகின.

சிறு தெய்வங்களை வைதீக சமயத்தார் வணங்கிட வேண்டும் என்ற முயற்சியில் மேற்கொள்ளப்பெற்ற பிறிதொரு முயற்சியே சிறுபுராணங்களும், சில வழிபாட்டு நெறிகளும். சான்றாக, அங்காளபரமேசுவரி வழிபாடென்பது முழுக்க முழுக்க நாட்டுப்புற வழிபாடாகும். பலியிடல் உட்பட, பிற யாவும் இதனை மெய்ப்பிக்கும். ஆனால் அங்காளபரமேசுவரி என்பது பார்வதியின் பிரிதோர் அம்சம் எனக்காட்டிட ஸ்ரீசக்தி புராணம் என்ற பெயரில் புனைவுகள் எழுந்தன. மலைமகளே மண்ணகத்தில் ஓர் அரசியின் வயிற்றைக் கிழித்து, ஆவேசப்படும் திருக்கோலம் புதுவை உட்படப் பல இடங்களில் பரவலாகக் காணப்படும் ஒன்று. வெறும் கதையளவில் மட்டும் நின்றுவிடாமல் வழிபாட்டுத் தலங்களில் இக்காரணத்தை முன்னிட்டு முருகன், பிள்ளையார் போன்ற தெய்வவுருக்களையும் இணைத்தனர். வைதீக நெறியினர் கோயிலுக்குள் அங்காளபரமேசுவரியோ ஐயனாரோ, கறுப்பண்ணரோ, மாரியம்மனோ புக முடியவில்லை. மாறாக, சிறுதெய்வக் கோயில்களுக்குள் வைதிகக் கடவுளர்கள் இணைக்கப் பெற்றார்கள். இவ்வாறு கதையாலும், காட்சியாலும் கலப்புண்டான நிலையை இன்று தெளிவாகக் காண முடிகின்றது.

வைதீக நெறியினர் சிறுதெய்வங்களுடன் பெருந் தெய்வங்கள் கலப்புறுவதற்கு அங்கிகாரம் அளித்துள்ளமைக்கு வலுவான சான்றுகள் இல்லை. ஆனால், ஆட்சேபம் தெரிவிக்காமை தெளிவாகிறது. இதனைப் பெருவாரியாகக் காணக்கிடக்கும் பிறிதொரு சான்றால் தெளிவுபடுத்த இயலும். அச்சம், நம்பிக்கை இரண்டினடியாகப் பிறந்தது நாகர் வழிபாடு. ''மனிதன் சந்தித்த முதல் உயிரின எதிரி பாம்பே...பாம்புப் புற்றைக் கலைப்போர் பாவியர்; அவர் அழிவர் முதுமையில் அல்லலுறுவர் என்பது திராவிட மக்கள் தம் நம்பிக்கை'' என்று 'பாம்பு வழிபாடு' நூலாசிரியர்

குறிப்பது மேற்செய்தினை வலுவாக்கும். வைதீக நெறியினர்க்கும் இது பொருந்துமாயினும் அவர்கள் தம் திருக்கோவில்களில் பாம்பிற்குத் தனிச் சன்னதி அமைக்கவோ, வழிபாட்டிற்குரிய, இடந்தரவோ இல்லை. சிவனின் கழுத்தாரமென்றும், பெருமாறின் திருமஞ்சமெனவும் அரவம் புகழப்பட்டதேயன்றி வழிபடுபொருளான நிலையைக் காண முடிவதில்லை. ஆனால் அதேச சமயம் புற்றோ, நாகர் உருவோ வணங்கப் பெறும் இடத்தில் பெருந்தெய்வக் கூறுகள் பொறிக்கப் பெறுகின்றன, வேப்ப, ஆலமரங்களின் கிழ்க் காணலாகும் நாகர் திருவுருவுகளின் மத்தியில் சிவலிங்கம் காணப் பெறுவதும், விநாயகர் திருவுருவைச் சுற்றிப் பல நாகர் திருவுருவுகள் வைக்கப்பெறுவதும் இன்றைய நடப்பியல். இவ்வாறு சிறுதெய்வங்கள் மேல் நிலையாக்கம் பெற்று, வைதீக சமயத்தாரும் வணங்கிட அமைந்தன. அக்கலப்பால் ஒரு சமயம்வெற்றியும் கிட்டியது. சான்றாக ஐயப்பன், காளி போன்ற றெய்வங்களைச் சுட்டமுடியும். காட்டில் அமைந்திருத்தல், ஐயனார், ஐயப்பன் சொல்லாட்சிகள், சாத்தன், சாஸ்தா பெயரீடுகள், பதினெட்டாம்படியான் பதினெட்டுப்படிகள் போன்றவற்றை வைத்து ஐயப்பன் ஒரு காலத்தில் நாட்டுப்புறத் தெய்வமாக இருந்தமையை விளக்குவர். ஆனால் சிவன், திருமால் இவர்களுடன் தொடர்புபடுத்தப் பெற்ற நிலையில், ஐயப்பன் வைதீக நெறியாளர்களால் உயர்தெய்வமாக்கப் பெற்றமை புலப்படும். இதைப்போன்றே பல அம்மன்கள் பெருந்தெய்வத்துடன் இணைக்கப் பெற்றமையும் நடப்பியலாகவுளது. எனவே நாட்டுப்புறத் தெய்வங்கள் பெருந்தெய்வங்களின் மாற்றாக, அவதாரமாக, தெய்வத் தொடர்புடையதாக ஆக்கப்பெற்றன. கதையளவில் கூறப்பெற்ற இதற்குக் காட்சியளவிலும் உ று தி ப் பா டு பெற மேல்மட்டத் தெய்வங்கள் நாட்டுப்புறங்களில் இடம் பெறலாயின என்பது பெறப்படும். இப்போக்குகளையும் திவிரங்களையும் கண்ட

வைதீக நெறியினர் சிறுதெய்வங்களை ஏற்கத் தலைப் பட்டனர். ஆனால் உயிர்ப்பலி தருவதைக் கண்டித்தனர். மறைமலையடிகளாரே பிறதொரு கட்டுரையில் ''காளி, கூளி, இசக்கி, கறுப்பண்ணன் முதலான சில்லறை வடி வங்களை வணங்கினாலும் அவற்றிற்கு ஆடு, கோழி, மாடு முதலிய உயிர்களைப் பலியிடாமல் வணங்குதலே செய்ய வேண்டும். அங்ஙனமின்றி, அவற்றைப் பலியிட்டால் அவ்வுயிர்ப்பலிக்கடனை அவைகள் ஏற்றுக் கொள்ள மாட்டா''[5] எனக் குறிக்கின்றார்.

இயல்பான மனமாற்றம் அல்லது தேவை கருதிய வற்புறுத்தல் இவற்றினால் நாட்டுப்புற வழிபாடுகளில் வைதீகநெறிகள் உட்புகுந்து கலந்தன. உயிர்ப்பலி மறுக்கப் பெற்று அதன் மாற்றாக வேறு சடங்குகள் நடாத்தப் பெறுகின்றன. பூசனிக்காய் நறுக்குதல் எலுமிச்சை நறுக்குதல் பூசனிக்காய் உடைத்தல் போன்றவை அவற்றில் சிலவாம். எனினும் நாட்டுப்புறப் பிற வழக்காறுகள் நீக்கம் பெறவில்லை.

ஆலயங்களில் கலப்புகள்

அடுத்த நிலையில் வைதீகநெறிக்குள்ளேயே பல கலப்புகள் இடம் பெற்றமையைச் சுட்டுதல் வேண்டும் பௌத்தம், சமணம் போன்ற புறச் சமயங்கள் வளர்ந்த போது இந்து மதங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஒரு வரிசையில் நிற்க நேரிட்டது. 'அரியும் சிவனும் ஒண்ணு அறியார் வாயில் மண்ணு' என்பது பழமொழியாயிற்று, 'ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றின்மால் கூறினார்' என்பது சமயக்குரவர் திருவாக்கு. ஆனால் அதிலும் சைவக்கோவில்கள் அகலமாகத் திறந்து வைத்து வைணவக் கூறுகளை ஏற்ற அளவு வைணவக் கோவில்கள் ஏற்றனவா

என்பதில் ஐயங்களுண்டு. சிவன் கோவிலுக்குள்ளேயே பெருமாள்கோவில் இருத்தல் வைணவக் கடவுளர்கள் இடம்பெறல், அனுமான் திருவுரு காணப்படுதல் போன்றவை இன்றும் காணப்பெறும் உண்மைகள். ஆனால் வைணவத் தலங்களில் சைவக்கூறுகள் காணப்படுவதில்லை. காணப் பெறும் ஒன்றிரண்டும் வைணவப் பூச்சுகளில் மறைக்கப் பெற்றன. வைதீக நெறிக்குள் இப்படியாகக் கலப்புகள் இருப்பதைக் காண முடிகிறது. நரசிம்ம வடிவமெடுத்த திருமால் அமைதிபெறுவதற்காகச் சிவனைநாடி ஓர் புதிய வடிவாகச் சரபேசர் என ஆகியமை நினைக்கத்தக்க கலப்புருவமாகும்.

இவ்விரண்டு கோவில்களிலும் திருவுருவருங்கள் இடம் பெறுமாற்றில் கலப்புகள் பல காணப்படுகின்றன. சிவன் திருமால் போன்ற முதன்மைத் தெய்வங்களும் இவர்களுடன் தொடர்புடைய பார்வதி, முருகன், விநாயகர், தாயார் போன்ற பிற தெய்வங்களும் திருக்கோவில்களில் இடம் பெறுவதில் சிக்கலில்லை. ஆனால் பிற்கால வழக்காக இத்தெய்வங்களுடன் தொடர்புடைய சிறுதெய்வங்கள் அல்லது இதிகாசப் புராணப் பாத்திரங்கள் கோவில்களுக்குள் சன்னதி பெற்றமை ஏனென்பது புரியுமாறில்லை. முருகன் கோவில்களில் வீரபாகு, திருமால் கோவில்களில் அனுமன் போன்றவை இதற்குச் சான்றுகள். இராமாவதாரத்தில் பலர் இராமனுக்கு உதவியிருக்க அனுமனை மட்டும் தனிச் சன்னதிக்குரியவராக்கி வழிபடுவதற்கான காரணம் சிந்தித்தற்குரியது. அதைப் போல மகாபாரதச் சிறுமாந்தர் களில் அரவானுக்கு மட்டும் கோவிலமைந்தமையும் கருத வேண்டிய ஒன்று. இதிகாச, புராணக் கூறுகளில் எந்த அளவு கோலை வைத்துச் சிறு தெய்வங்களைத் தேர்ந் தெடுத்தனர் என்பதற்குப் போதிய சான்றுகளில்லை. ஏனெனில் இப்பாத்திரங்களை யடுத்த நிலையில் இறைவர்

களுடன் தொடர்புடைய மனிதர்களும் கோவில்களில் இடம் பெற்றனர். சான்றாக வீரபாகுவை யடுத்து இடும்பன் சன்னதியை முருகன் கோவில்களில் காண முடியும். ஆலவாயண்ணல் ஆலயங்களில் சமயக்குரவர்களின் திருவுருவுகள் இடம் பெற்றமை, திருமால் தலங்களில் மணவாள மாமுனிவர், ஆண்டாள் போன்றார்க்குச் சன்னதிகள் அமைக்கப்பெற்றமை ஆகிய வளர்ச்சிகள் கவனிக்கப்பட வேண்டியவை. இதனையொட்டி எல்லாச் சிவத்தலங்களிலும் 63 அடியவர் திருவுருவுகளும் இடம் பெற்றமையும் உடன் வைத்து எண்ணத்தகுவது. சில வூர்களில் சேக்கிழார் உருவமும், அருணகிரியார் உருவமும் இன்னபிறவும் ஒத்த தன்மையன. இதற்கு வலுவான காரணங்கள் புகலப்பட வில்லை. காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்று இறைவனுடன் ஒன்று கலந்து மானுடர்கள் இடம் பெற்றமையை 'வானுறையும் தெய்வம்' என்ற பெயரிட்டு அமைதி கூறுவதாகக் கொண்டால் சமயக்குரவர், சேக்கிழார் அனுமன் இவர்களை எந்த அளவுகோல் கொண்டு கணிப்பது என்பது புரியவில்லை. ஏனெனில் புதுவையின் மையப் பகுதியில் உள்ள திரௌபதியம்மன் கோவிலுக்குள் ஓர் இராவுத்தர் இடம் பெற்றிருக்கிறார். எனினும் கிராமப்புறச் சிறுதெய்வங்கள் பெருந்தெய்வங்களுடன் இணைத்துச் சொல்லப்பட்டனவேயன்றி அப்பெருந்தெய்வக் கோவில் களுக்குள் அவை இடம்பெற வாய்ப்பில்லாது போனது. அதே வேளையில் பெருந்தெய்வங்களுடன் தொடர்புடைய புராண இதிகாசப் பாத்திரங்களும், இறை அடியவர்களும் இடம் பெற முடிந்தது என்பதைப் புரிந்துகொள்ளல் வேண்டும். எப்படியோ பெருங்கோவில்களில் பெருந்தெய்வம், சிறு தெய்வம், இதிகாச புராணப்பாத்திரம், மானுடம் யாவையும் கலப்புற்ற நிலையைக் காண முடிகின்றது.

குறியீட்டுக் கலப்புகள்

இக்கலப்புகள் போலவே குறியீட்டு வழிபாடும் எண்ணத் தகுவது. கிராமங்களில் உருவ வழிபாடு பெரும்பாலும் குறியீடாகவே அமையும். முனியாண்டி, கருப்பண்ணன், சாமுண்டி போன்ற தெய்வங்கள் வேல், அரிவாள், சூலம் போன்ற வடிவுகளாலேயே வணங்கப் பெறுகின்றன. இன்னும் சிலவூர்களில் வெறும் கற்கள் மட்டுமே தெய்வக்குறியீடுகளாய் உள. பெருந்தெய்வக் கோவில்களில் குறியீட்டு வணக்கம் பெரும்பான்மையும் இல்லை. எனினும் பிற்காலத்தில் வேல் விருத்தம் எழுந்தமையும், வைணவர்கள் சங்கு சக்கரத்தை வணங்குதல் உண்டானமையும் காண முடிகிறது. சங்கப்பா முதலாகச் சிவனின் பேருரு பற்றிய செய்திகள் உளவேயன்றி இலிங்கவழிபாடு கூறப்பெறவில்லை. ஆனால் இன்று திருக்கோவில் சன்னதிகளில் இலிங்கமே சிவனாகக் கருதப் படுகிறது. இதற்கு வரலாற்று ரீதியாகப் பதில் கூறுவாரும் உண்டு. ஆயினும் குறியீடாக இறை வணங்கப் பெறுவது நாட்டுப்புறப் பண்பாடு என்பதையும் அஃது எவ்வாறோ பெருந்தெய்வக் கோவில்களிலும் வழிபாட்டிலும் கலப் புற்றது என்பதையும் உணரவேண்டியுளது. இதனை மேலும் வலுப்படுத்தப் பிறிதொரு சான்றையும் கவனித்தல் வேண்டும். முள்மரங்களையும், குறிப்பிட்ட சில மரவகை களையும் ஆதிகால மனிதன் இறையுருவாகவே கண்டதைப் பலரும் சுட்டுவர். பெருங்கோவில்களில் தலவிருட்சம் என்பது ஒருபுறமிருக்கத் திருமால் தலங்களில் துளசி வழிபாடு நிகழ்வதும், திருமாலின் குறியீடாக இல்லமாடங்களில் துளசி வைக்கப் பெற்றுக் கோலப்புனைவுடன், விளக்கேற்றப் பெற்று, சுற்றி வந்து வழிபடப்படுவதும் இன்றைய செயற் பாடுகள், நாட்டுப்புற வழிபாட்டில் இன்றும் மரவழிபாடு உண்டு. பண்டைய நாளில் நடுகல்லிடப் பெறாமல், இறந்தோரை அடக்கம் செய்த இடத்தில் மரத்தை நடுவதும்,

அம்மரத்தை அடையாளமாகக் கொண்டு ஆண்டிற்கொரு முறை பூசை நிகழ்த்துவதும், அதுகாலை அம்மரத்தையே தெய்வமாகிய முன்னோராகவும் வணங்கியமைக்குச் சான்றுகள் உள்ளன. இப்போக்கே மெல்லமெல்லப் பெருங் கோவில்களில், பிறர் இல்லங்களில் படரத்தலைப்பட்டுள்ளது. இன்னும் கூறப்போனால் இறந்தவரைப் புதைத்த இடத்தை அடையாளங் காணவும், இறந்தவரைத் தெய்வமாக்கவும் புதையிடத்தில் சிவலிங்கத்தை இருத்தி வழிபாடு செய்வதே இன்றைய வழக்கு. எனவே இறந்தவரைத் தெய்வமாக்கும் பழைய நடுகல் வழிபாடு வைதீக நெறிப்பட்டுச் சிவலிங்கக் கோலம் கொள்வதை உணர முடிகிறது. புதுவையில் இடுகாட்டில் பல புதைகுழிகள் அமைப்பதில் சிக்கலிருப்ப தால் பச்சைக் களிமண்ணில் சிவலிங்கம் வைக்கப்பெறும். இரண்டொரு நாளில் வழக்கம்போல அது சிதைவுபடும், இப்போக்கு, சமய இலக்கியங்கள் உட்பட எந்நூலிலாவது கூறப்பெற்றுள்ளதா என்பது சிந்தனைக்குரியது.

விழாக்களில் கலப்புகள்

இதைப் போன்றே பிற வழிபாட்டுக் கூறுகளிலும், நாட்டுப்புற வழக்காறுகள் வைதீகங்களில் ஊடுருவின. இதனாலுண்டான கலப்புகள் பல. சான்றாகத் திருவிழா நேரங்களில் புராணச் செய்திகளைக் காட்சிப் படுத்தும் போக்கு நாட்டுப்புற வழிபாட்டில் முதன்மையானது. அங்காளம்மன் வழிபாட்டின் போது அம்மனும், பாவாடை ராயனும், காத்தவராயனுமாகப் பலர் வேடந்தாங்குவர். மன்மதன் வேடம், சிறுத்தொண்டர் வேடம் போன்றவை யும் இன்றும் கிராமத் திருவிழாவின் கட்டாயங்கள். இப் போக்குப் பெருங்கோவில்களில் இடம் பெற்றமைக்குப் பக்தி இயக்கப் பாடல்கள் உட்பட எதிலும் சான்றுகள் இல்லை,

இப்போக்கு மெதுவாக நகர்ப்புறப் பெருங்கோவில்களில் ஓரளவு தாக்குறவு ஏற்படுத்தியதை மறுப்பதற்கில்லை. அனைத்துத் திருவிழாக்களிலும் அத்திருவிழாவின் ஐதிகத்திற் கேற்பக் குறிப்பிட்ட வாகனங்களில் உற்சவமூர்த்திகள் எழுவது மட்டுமே திருக்கோவில் மரபு. ஆனால் குறைந்த அளவில் நாட்டுப்புறப் பாவனைச் சடங்குகள் உட்புகுந் தமையை இன்று காணமுடிகிறது. 1988-ஆம் ஆண்டு நவம்பர் 14, 15 தேதிகளில் புதுவையிலுள்ள சாரம், முத்தியாலுப்பேட்டை போன்ற இடங்களில் இடம்பெற்ற சூரசம்காரம் இதற்கு நல்ல சான்றாகும். முருகன், வீரபாகு, பிறர் ஒரு சாரராகவும், சூரர்கள் மறுசாராராகவு மிருந்து வாதம் புரிந்து, கதைநிகழ்வுகளைப் பாடல் பாடியும் அசைவு கூட்டியும் காட்சி நிகழ்வுகளாக்கினர். இதிலே குறிப்பிடப் படவேண்டியவை இரண்டு. தெருக்கூத்தில் இடம்பெறும் மரக்கட்டையணிகளைச் சூரன்தரித்து எழுந்தமை ஒன்று. தெருக்கூத்தில் அர்ச்சுனன் தபசு நிகழுங்கால் பனைமரம் நடப்பட்டு அதில் அர்ச்சுனன் பாடல்கள் நிகழ்வதைப் போலவே நெடுமரம் மீதிலிருந்து பாடல்கள் நிகழ்ந்தமை இரண்டாவது. அர்ச்சுனன் சிவன் வாதம் புரியும் அக்காட்சி யில், தேவாரம், திருப்புகழ், இன்னபிற பக்திப் பாடல்கள் பாடப் பெறுவது வெகு இயல்பு. அதனை யொட்டியே வீரபாகு உட்பட யாவரும் நெடுமரம் ஏறியிருந்து பாடிய பாடல்கள் யாவும் வெவ்வேறானவை. கண்ணதாசன் தைப்பிங் (மலேசியா) முருகனைப் பாடியவை, அபிராமி அந்தாதி, புதுவை பற்றிய பாடல்கள் யாவும் பாடப் பெற்றன. சூரன் இருக்கும் பக்கத்தில் தாரை தப்பட்டம், பெருந்தாளம் ஆகிய நாட்டுப்புறக் கருவிகளும், முருகன் பக்கத்தில் நாதசுரம், தவுல் போன்ற கருவிகளும், பங் கெடுத்தன. இரண்டும், கலந்த புதுக்கலப்பு, பெருங்கோவில் களில் காணப்படுவதை இதனாலறியலாம். முருகன் நாட்டுப் புறத் தெய்வமாயிருந்து பெருந்தெய்வமானவன் என்பதைப்

பல சான்றுகள் காட்டி நிறுவுவாரும் உளர். மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில் விழாக்களில் அறுபத்து நான்கு விளையாடல்களில் சில காட்சியுருவாக அமையும். விறகு சுமத்தல், வளையல் வணிகம் போன்றவை உற்சவரின் வேடத்தோடு சரி, பிறர் வேடம் ஏற்பதில்லை. ஆனால் வந்தியும் புட்டும் வரும்போது கோலப் புனைவில் மனிதர்கள் கலப்பர். இந்நிகழ்ச்சி நிகழுமிடம் புட்டுத்தோப்பு எனப் படுகிறது.

இதைப் போன்ற முயற்சியே திருமால் கோவில்களில் நிகழும் அரையர் சேவை. இதிலே ஆழ்ந்து கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அரையர் சேவையில் இடம்பெறும் நிகழ்ச்சி முத்துக் குறி கூறல். குறிகூறும் மரபு நாட்டுப்புற மரபு. இம்மரபு இடம்பெறும் நிகழ்வுகளில் பாவனைச் சடங்கின் பிரதிபலிப்பாகத் திருக்கோவில்களில் கோலப் புனைவு ஏற்பட்டது. இதனால் வழிபாட்டுக் கலப்புகள் உண்டாயின. இதைப் 'போலச்செய்தல்' என்பாரும் உண்டு. ஒன்றிலிருந்து போலச்செய்தல் பிற கோயில்கட்குப் பரவிய மைக்கு நிறையவே சான்றுகள் உண்டு. தீமிதி உற்சவம் அம்மன்கோவில் சார்ந்த நாட்டுப்புறமரபு. முருகன் கோயில் களில் அக்கினிக் காவடி என்ற பெயரால் காவடி சுமந்து பூக்குழி இறங்கல் நீண்டுளது. பால்குடம், பாற்காவடி போன்றவையும் அருகு வைத்து உராய்ந்து பார்க்கத் தகுந்தவை. ஐயப்பன் திருக்கோவிலுக்குப் பயணப்படுவார் இருமுடி தாங்கிச் செல்வதைப் போல மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி ஆலயத்திற்குச் செல்வதும்; வழிப்பயண வழிபாடுகள் எல்லாக் கோவில்களுக்கும் பெருகியமையும் இன்றைய நடப்பியல்கள். எனவே வழி பாட்டு முறைகளில் கலப்புகள் பல நிலைகளில் ஏற்பட்ட மையை அறியமுடிகிறது. அரியக்குடியில் உள்ள பெருமாள் கோவிலில் தாயார் சன்னதியில் பிள்ளைத் தொட்டில்

கட்டலும், வளையல்கள் கட்டலும் காணப்பெறுகின்றன. நாட்டுப்புற வழக்குகள் இவ்வாறு பெருந் தெய்வக்கோயில் களில் அமைகின்றன.

இதைப் போன்றே புறச்சமயக் கலப்புகள், கட்டிட அமைப்புக் கலப்புகள், திசைக் கலப்புகள் போன்றவை வழிபாட்டின் கலப்புகளாகப் பரிணமித்துள்ளன. பொதுவாக எல்லா ஆலயங்களும் கிழக்குத்திசை நோக்கியே அமைக்கப் பெறும். நுழைவாயில் வேறுதிசையி லிருந்தாலும் சன்னதி கிழக்கு நோக்கியே அமையும். சிற்றூர்களில் அம்மன் ஆலயங்களில் சில வடக்குத் திசையை நோக்கியதாக அமைவதும் இறைவி வடக்குவாயில் செல்வி என அழைக்கப் பெறுவதுமுண்டு. மதுரையில் பார்வதியும் சிவனும் தனித் தனிச் சன்னதிகளில் கிழக்கு நோக்கியமை தஞ்சையில் சிவன் கிழக்கை நோக்கியும் பார்வதி தெற்கை நோக்கியும் எழுந்தருளியதாக அமைக்கப் பெற்றிருக்கக் காணலாம். எவ்வாறாயினும் மேற்குத் திசைநோக்கிச் சிவனோ பிறரோ அமர்வதில்லை. ஆனால் மதுரையில் அமைந்துள்ள இன்மை யில் நன்மை தருவார் திருக்கோயிலில் சிவபெருமானாகிய சந்திரசேகரர் மேற்கு நோக்கி அமைக்கப்பெற்றிருக்கின்றார். இதுபோன்ற திசைக்கலப்புகள் வேறுபல இடங்களிலும் காணப்பெறுகின்றன. பெருந்தெய்வமான பார்வதி தனிச் சன்னதியாகத் தஞ்சையில் தெற்கு நோக்கியிருப்பதும், சிறு தெய்வமான மாரியம்மன் வடக்கு நோக்கியிருப்பதும் பொது வழக்கு. புதுவை முத்தியாலுப்பேட்டையில் உள்ள சுப்பிரமணியர் கோவில் ஒன்றில் மாரியம்மன் தெற்கு நோக்கிய நிலையில் காணப்படுவதையும் ஆளுக்கொரு திசையாக மாறுபட்டு நிற்கும் நவக்கிரகங்கள் யாவும் குன்றக்குடித் திருத்தலத்தில் மேற்கு நோக்கிய நிலையில் காணப்படுவதையும் அனுமன் திருவுருவுகள் எல்லாத் திசை நோக்கியும் தூண்களில் காணப்படுவதையும் திசைகளிலேற்

பட்ட கலப்புகளுக்கான சான்றாகக் கருத இயலும். திருப்பரங்குன்றத்தில் பிள்ளையார், துர்க்கை, முருகன் யாவரும் வடதிசை நோக்கியும், பவளக்கனிவாய்ப் பெருமாள் மேற்கு நோக்கியும் சிவன், பார்வதி, பாலமுருகன் யாவரும் கிழக்கு நோக்கியும் ஒரே இடத்தில் அமைந்திருக்கக் காணலாம்.

பிற பகுதியினரின் சமயக் கலப்புகளையும் ஆங்காங்கே காணமுடிகிறது. தமிழகத்தில் காணப்பெறும் புதிய வடிவு கள் இதற்குச் சான்றுகள். நீர்நிலையோரங்களில் தனித் தனிமனிதராகப் 'பிரம்மச்சரியம்' காக்கும் விநாயகர் வடபுலக்கதைகளால் சித்தி, புத்தி என்ற இரண்டு மனைவி களுடன் காட்சி தருவதைச் சில இடங்களில் காண இயலும். தஞ்சைப் பெருவுடையார் கோவிலுள் பன்றி முகத்துடன் காணப்பெறும் வராகியம்மன் வேற்றுப்பகுதியினர் தஞ்சையை ஆண்டபோது புதிய வரவான தெய்வமாகும். தமிழகத்தின் பல பகுதிகளில் குடியேறிய 'சேட்டு' இனத்தவர்களின் கன்னிகா பரமேசுவரி ஆலயங்கள் குறிக்கத்தக்கவை. பூரி, கடலை போன்ற புதிய படையல்களை மட்டும் உவந்தேத்தும் 'சந்தோஷிமாதா' என்ற புதுத் தெய்வம் தமிழக மகளி ரிடையே இன்றைக்குப் புகழ்பெற்றதும் பரவலானதுமான ஒரு தெய்வமாகும். கார்த்திகை மாதந் தொடங்கித் தமிழகத்தின் கோயில்களில் புகைப்பட வடிவில் இடம் பெறும் ஐயப்பன் திருக்கோலமும், நிரந்தரமாகவே சென்னை, மதுரை போன்ற இடங்களில் உருவாகியுள்ள ஐயப்பன் திருக்கோயிலும் அண்டை மாநிலத் தெய்வ வழிபாடு தமிழ் மக்கள் வாழ்விடையே ஐக்கியமானதைத் தெளிவுறுத்தும். தமிழகத்துக்குள்ளேயே சிறுதெய்வங்களும் பெருந்தெய்வங்களும் கலப்புற்று அமைந்திருப்பது முன்னரே சுட்டப்பெற்றது. ஆயினும் பெருந்தெய்வக் கோயில்களில் அமைந்துள்ள சிறு தெய்வங்களுக்குப் பலியிடுதலோ, பிற

சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் மேற்கொள்ளப் பெறுதலோ கிடையாது. மிக அருகிய நிலையில் கலப்புகள் காணப்பெறுகின்றன. புதுச்சேரி முத்தியாலுப்பேட்டை காந்தி வீதியிலுள்ள திருக்கோவிலின் பெயர் ஸ்ரீமுத்து புத்துளாய் ஏழை மாரியம்மன் ஸ்ரீ கருணாபுரீஸ்வரர் கருணாம்பிகை ஆலயம் என்பதாகும். கோயிலின் முகப்பிற்கு நேர் எதிரே காணப்பெறும் மாரியம்மன் சிறுதெய்வமாகவும் அருகிலுள்ள பரமேசுவரர், பார்வதி சன்னதிகள் பெருந் தெய்வமாகவும் இலங்குகின்றன. இதிலே குறிக்கத்தக்க ஒன்று. என்னவெனில், மாரியம்மன் கோயிலின் பூசாரி பிற்பட்ட இனத்தைச் சார்ந்தவராகவும், பரமேசுவரர் கோயிலின் அர்ச்சகர் பிராமணராகவும் அமைந்திருப்பது தான். வழிபாட்டு முறைகளும் வெவ்வேறாகவே அமைந் துள்ளன. இக்கோயிலுள் மரவழிபாடும், மதுரைவீரன் வழிபாடும், ஏழு செங்கற்களை யடுக்கிய உருவமற்ற வழிபாடும் காணப்படுகின்றன. ஒரே ஆலயத்துள் பலநிலை வழிபாடுகள் கலப்புற்றிருக்கக் காணமுடிகிறது.

ஒரே கோயிலுக்குள் பெருந்தெய்வச் சன்னதியில் பிராமணர் வழிபாடு செய்வது குறிக்கப்பெற்றது. தில்லையில் உள்ள தில்லைக்காளி சிறுதெய்வம், இங்கே அர்ச்சகர் களாக அமைவோர் பிராமணர்கள். பொதுவான நிலையி லிருந்து மாறுபட்ட சூழலை இதுபோன்ற ஒருசில இடங் களில் காணலாம். இதனினும் அழுத்தமான கலப்பினைத் திருச்சிராப்பள்ளியில் உள்ள குழுமாயி அம்மன் கோயிலில் காணவியலும்.[6] புத்தூர் அருகில் அடிசேகபுரத்தில் அமைந் துள்ள சிறுதெய்வமான குழுமாயி அம்மன் திருவிழா நேரத்தில் பிராமணர்களின் குடியிருப்பான 'அக்கிரகாரத் திற்கு' எழுந்தருளுவதும் மந்தையொன்றில் அம்மன் உலா வரும்போது பிராமணர்கள் அங்கு வந்து வணங்குவதும் குறிக்கத்தக்கவை. இங்கே கலப்பின் உச்சத்தை விளக்கும்

வண்ணம் மேற்கொள்ளப் பெறும் வழிபடு முறைமை வியப்பை உண்டாக்கும். இக்கோயிலின் நாள்வழிபாடுகளில் வெள்ளிக்கிழமை வழிபாட்டு முறைமை பிராமணர்களாலும் பிறநாட்களின் வழிபாட்டு முறைமை பிற சாதியினராலும் மேற்கொள்ளப் பெறுகின்றன. சிறு தெய்வமொன்று இவ்வாறு பிராமணர் உட்படப் பல சாதியினரால் நாள் வழிபாட்டு முறைமைகளைக் கொண்டு வழிபடப்படுவது முற்றிலும் புதுமையானது. மக்களின் வழிபடு நிலைகளில் உண்டான கலப்புகளை இது புலப்படுத்துகிறது. இதைப் போலவே கட்டிட அமைப்புகள், விமான அமைப்புகள் போன்ற வற்றிலும் கலப்புகள் பல உருவாகியிருப்பதைக் கோவிலின் புற அமைப்புகள் சுட்டுகின்றன.

கட்டுரை கூறும் சில கருத்துகள்

1. பண்டைக் காலத்தில் பெருந்தெய்வம் சிறுதெய்வம் என்ற பாகுபாடில்லை, எனினும் வைதீகநெறி வேறாகவும், நடுகல் வழிபாடு வேறாகவும் நிகழ்ந்தன.
2. காலப்போக்கில் பெருந்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாடும் சில தேவைகளினால் கலந்து தென்பட்டன. பெருந்தெய்வ நெறியாளர்கள் சிறுதெய்வங்களை வணக்கத் தயங்கிய நிலையில் நாட்டுப்புற வழிபாடுகளில் மேல்நிலையாக்கம் நடந்தது.
3. சிறுதெய்வங்களைப் பெருந்தெய்வங்களுடன் இணைக்கும் பணி இரண்டு விதங்களில் அமைந்தது. ஒன்று பெருந்தெய்வங்களின் மாற்றாகவோ, அவற்றுடன் உறவுடையதாகவோ சிறுதெய்வங்கள் பாடப்பெற்றன. சிறுதெய்வங்களின் ஆலயங்களில் பெருந்தெய்வங்கள் அமைக்கப் பெற்றன.
4. தமிழகத்தின் புறப்பகுதிகளிலிருந்து வேறுவகைத் தெய்வங்கள் தமிழர்களிடையே வரவுகளாயின. சில நிரந்தரக் கோயில்களாக அமைவு பெற்றன.

5. ஒரே தெய்வத்தை வைதீக நெறியினரும், பிறரும் நாள் முறைமை மூலம் வணங்கலும், ஒரே வளாகத்தில் பல்வகை வழிபாடுகள் இடம்பெறலும் கலப்புகளின் உச்சத்தை எடுத்துக் காட்டுவனவாகும்.

6. வைதிகச் சமயங்களுக்குள்ளேயே சில கலப்புகள் ஏற்பட்டன. கோவிலமைப்பில் இவையடங்கும், பின்னர் ஓர் இறையுடன் தொடர்புடைய சிறு தெய்வங்கள், மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தவர்கள் பிறரும் திருக்கோவில்களில் திருவுருவாகினர்.

7. குறியீட்டு வழிபாடும் சில கலப்புகளை அமைத்தது. இதனை அடியொற்றிய துளசிவழிபாடு போன்ற சிலவும், புதைகுழியருகே மரம் அல்லது சிவலிங்கம் வைத்தல் போன்ற சிலவும் அமைந்தமை கவனத்திற்குரியது.

8. கோலப்புனைவுச் சடங்காகிய நாட்டுப்புற வழக்காறுகள் பெருந்தெய்வக் கோவில்களில் கலந்தன. விழாக்கள், இசைக் கருவிகள் போன்ற சிலவும் ஒன்றுள் ஒன்று கலப்பாயின.

குறிப்புகள்:

1. அகரமுதல்வன், ‘சங்க இலக்கியத்தில் சக்தி வழிபாடு’ இ. ப. த. ம. ஆய்வுக்கோவை-13 தொகுதி-3, பக். 1-2.
2. மறைமலையடிகள், அறிவுரைக்கொத்து, ப. 30
3. ஆ. வேலுப்பிள்ளை, தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 96
4. கேசவராசு, நடுகல் வழிபாடு, மேற்சுட்டிய ஆய்வுக் கோவை, ப. 116
5. மறைமலையடிகள், மேலது, ப. 39
6. கருப்பையா, குழுமாயி அம்மன் ஆலயம், (எம்.பில் ஆய்வேடு) பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி, 1990.

—O—

ஆசிரியரின் பிற நூல்கள் :

★ இளங்கோவடிகள் காப்பியக்கதையைப் பண்டைய கூத்திலிருந்தே பெற்றார் என்பதை அகச்சான்றுகள் கட்டமைப்புகள் போன்றவற்றால் விளக்க முனையும்

'கூத்தும் சிலம்பும்'

★ தமிழக நாட்டுப்புறக் கலையான தெருக்கூத்தின் அனைத்துக் கூறுகளையும் ஆய்வுநோக்கில் விரித்துரைக்கும் (முனைவர்பட்ட) ஆய்வேட்டின் நூல் வடிவமான **'தமிழகத்தில் தெருக்கூத்து'**

★ தமிழகச் சிற்றூர்களில் காணலாகும் நாட்டுப்புறக் கலை, கதை, பிறதேடல் முயல்வுகள் போன்றவற்றை விளக்கிக்காட்ட உருவான

'நாட்டுப்புறக் களங்கள்'

அமுதன் நூலகம்

'அறிவகம்', 52/1, இரண்டாம் வீதி

திருவள்ளுவர் திருநகர் (நியூ டவுன்)

காரைக்குடி-623 001.